



கல்கி
பொன்விழா
ஆண்டு
KALKI 12.4.92 ரூ. 3.00
இலவச இணைப்புடன்
வீட்டிலேயே
விடுமுறை!


முத்துமுத்தான
வியர்வை.
ஊக்குவித்தது
உள்ளுணர்வை.
Second Nature
செகண்ட் நேச்சர் டால்க்.
வெற்றியைப் பிரதிபலிக்கும் இணையற்ற நறுமணம்.
Avenues SN 71 92


கருத்து: மௌஷ்மி
படம்: செல்லம்
நாலு நாள் ஜாலியா விடுமுறையில் வந்தாச்சு; இங்கேயும் முகத்தை 'உம்'முன்னுதான் வைச்சுக்கணுமா?
உங்க பாடு தேவலாம்; விடுமுறைலே அயோத்திக்கும் காஷ்மீருக்கும் போயிட்டு வந்துட்டீங்க; என்னைச் சொல்லுங்க...
கவலைப்படாதீங்க; வதந்திகள் உண்மையானால் ஜனாதிபதியாகி ஓசியிலே உலக டூரே அடிக்கலாம்!
தலைவர்களுக்கும் விடுமுறை!
அவரு நம்மை பீட் பண்ணிட்டா என்ன பண்றது?
அவங்க நம்மை ஜெயிச்சுடுவாங்க போலிருக்கே?
இந்திரகுமாரி என்டர்பிரைஸஸ்
பச்சை குத்திக் கொள்வது பற்றி சகல அம்சங்களும் கற்றுத் தரப்படும். விடுமுறையை வீணாக்காதீர்கள்!
எஸ்.டி.எஸ்
பயிற்சி முகாம்
புரட்சித் தலைவியைப் புகழ்வது எப்படி? புதுப்புது வார்த்தைகள் புனையப் பயிற்சி அளிக்கப்படும்.
நான் விடுமுறையில் போகக் கூடாது என்று ஆளுனர் அன்புடன் கேட்டுக் கொண்டாலும், நேற்று என்னை விடுமுறையில் போகச் சொன்னோரெல்லாம் இன்று போகக் கூடாது என்று கூறினாலும், நான் விடுமுறையில் போகத் தான் போகிறேன் என்பதையும், இதற்காக நூறு லட்ச ரூபாயில் குண்டு துளைக்காத ஹெலிகாப்டர் வாங்கப்பட்டுள்ளது என்பதையும், அதில் நான் சசிகலாவுடன் மேலே பறக்க, கீழே ஆயிரம் கார்கள் பவனி வர, நான் கச்சத்தீவுக்குச் சுற்றுலாச் செல்லும் போது செலவுகளைக் கட்சியே ஏற்கும் என்பதையும், போகுமிடத்தில் கச்சத்தீவை மீட்டுவர மீனவரிடம் மனுப்பெறுவேன் என்பதையும் கூறி, தமிழ்நாடு காங்கிரஸை எச்சரிக்கிறேன்!
சுற்றுலா வாரியத்திலிருந்து கையேடுகள் நிறைய வாங்கி வந்திருக்கேன். விடுமுறைல எந்தெந்த ஊருக்கெல்லாம் போகலாம், பார்த்துச் சொல்லுங்க...
சர்த்தான் போய்யா! ஏற்கெனவே பதிமூணு வருஷம் மக்கள் நமக்கு லீவு கொடுத்தாங்க; இப்ப மறுபடி கொடுத்திருக்காங்க. இதுவல்லாம இன்னும் விடுமுறை கேட்குதாக்கும்!





# பொட்டலப் பயணங்கள்

நிறைய ஊர்களுக்குச் சென்று ஏராள இடங்களைப் பார்க்க விரும்புவோருக்குத் தனித்தனியே டிக்கெட் எடுத்தும் தங்குமிடம் தேடியும் அல்லாடாமல் எல்லா ஊர்களையும் வசதிகளையும், பொட்டலம் கட்டி ஒரே சுற்றுப் பயணமாகத் தருவது பாக்கேஜ் டூர்கள்!

'பாக்கேஜ் டூர்களில் பெண்கள் தனியாக வரலாமா? பாதுகாப்பு உண்டா?' என்று கேட்டு நிறையக் கடிதங்கள் வருகின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துக்கு.

துணை மேலாளர் சுப்பையன் சொன்னார் : ''அன்றாடம் ஐம்பது, அறுபது கடிதங்கள் குரூப்-டூர் விஷயமாக வருகின்றன. இவற்றில் பாராட்டுக் கடிதங்கள் பல. பெண்கள் தனியாக வரலாம். பத்திரமாக அழைத்துக் கொண்டு போய் விட்டு வருகிறோம். பயப்படவே வேண்டாம்!''

மாணவர்களுக்குத் தனியே பாக்கேஜ் டூர்கள் ஏற்பாடு செய்து கொள்ளலாம். வாரக் கடைசியில் போகலாம். அல்லது தமிழக சுற்றுலாவின் பஸ்ஸையும், டிரைவரையும் மட்டும் வாடகைக்கு அமர்த்திக் கொண்டு அவர்கள் இஷ்டப்படி எங்கே வேண்டுமானாலும் போய் வரலாம். இவர்களுக்குச் சிறப்புச் சலுகை 'ரேட்' தருகிறார்கள்.

கோடை விடுமுறையில்தான் அதிக சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். அதிலும் எல். டி. சி. எனும் சலுகையைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் ஊழியர்கள்தாம் அதிகம். சுற்றுலா முடிந்தவுடன் கையோடு, இவர்களுக்குத் தேவையான சர்ட்டிபிகேட்டையும் கொடுத்து விடுகிறது டி. டி. டி. சி.

குரூப் டூர்களுக்கு பம்பாய், கல்கத்தா, ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்தான் நிறைய வருகிறார்கள்.

நவம்பர் - டிசம்பர் - ஜனவரியில், மலேஷியா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா வாசிகள் அதிக அளவில் கலந்து கொள்ளுகிறார்கள்.

''சில ஐரோப்பியப் பயணிகளுக்கு நம் உணவு முறை சரிப்படுவதில்லை. ஆனால் இன்னும் சிலருக்கோ நம் சாம்பாரும், ரசமும் நிரம்பப் பிடிக்கிறது. தெற்கத்திச் சாப்பாடு, வடக்கத்திச் சாப்பாடு, அமெரிக்க பிரேக்பாஸ்ட், காண்டினென்டல் உணவு வகைகள் என்று எல்லாமே கொடுக்கிறோம். ஆகவே புகார்கள் பெரும்பாலும் இல்லை!''

தங்கும் வசதிகளைச் சுற்றுலாக் கழகத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஓட்டல்கள் கவனித்துக் கொள்ளுகின்றன. ''மருத்துவ வசதி தேவைப்பட்டால், ஓட்டல் மானேஜரிடம் சொன்னால் போதும். அங்கங்கே உள்ள டாக்டர்கள் அழைத்து வரப்படுவார்கள்'' என்கிறார் சுப்பையன்.

''அது சரி. இந்த மூன்று நாள், ஆறு நாள் பயணங்களில் எல்லாம் இங்கே நேரம் போதவில்லை, அங்கே அவசரப்படுத்தி விட்டீர்கள் என்றெல்லாம் புகார் வந்தது கிடையாதா?''

''கிடையவே கிடையாது. பயணத்துக்கு முன்பே எல்லாவற்றையும் விவரமாகத் தெரிந்து கொண்டு விடுகிறார்கள். அதனால் கம்ப் ளெயின்ட் எதுவும் வருவதில்லை.''

வாரக் கடைசியில் புறப்பட்டு, மறு வாரம் வந்து சேரும் பய ணங்கள்; வெள்ளி இரவு புறப்பட்டு, ஞாயிறு இரவு வந்து சேரும் குறுகிய கால பயணங்கள்; இரண்டு வார நீண்ட பயணங்கள் என்று எல்லா வகைகளும் இருக்கின்றன.

35 பேர் வரவில்லை என்றால், குறைந்தபட்சம் பத்துப் பேர் இருந் தால் கூட சிறிய பஸ்ஸில் டூரை முடித்து விடுகிறார்கள்.

''பஸ் நடு வழியில் படுத்து விட்டால் என்ன செய்வீர்கள்?''

''தனியார் பஸ் கொண்டு வந்து அதையும் சமாளிப்போம். வெளி மாநில டூரில் இப்படி நடந்தால், அந்த மாநில சுற்றுலாக் கழக பஸ்ஸை ஏற்பாடு செய்து, நம் பயணிகளை அதிக தொல்லைப் படுத்தாமல் டூர் முழுதும் முடித்து, கொண்டு வந்து விட்டு விடு வோம்.''

பிற மாநில சுற்றுலாப் பயணத் துறையினர் டி. டி. டி. சி. யின் செயல் பாட்டைப் பாராட்டி விட்டுச் செல்வதாக சுப்பையல் கூறுகிறார்.

கேரள சுற்றுலாப் பயணத் தகவல் மைய அதிகாரி பொன் னப்பன் சொன்னார் :

''கேரளாவில் உள்ள இடங்கள் தவிர, தமிழ்நாட்டின் மதுரை, திருச்சி, கொடைக்கானல் ஆகிய இடங்களுக்கும், கோவா, பெங்க ளூர், பம்பாய் போன்ற ஊர்களுக் கும் எங்கள் குரூப் டூர்கள் இருக் கின்றன.''

ஏழு நாள் சுற்றுப் பயணத் துக்கு, பஸ் கட்டணம் மட்டும் 600 ரூபாய் ஆகிறது. பம்பாய் செல்லும் பதினைந்து நாள் சுற்றுலாப் பயணத்துக்கு பஸ் கட்டணம் மட்டும் 1500 ரூபாய். அறை வாடகை, உணவு, தனி.

இவை திருவனந்த புரத்திலிருந்து புறப்படுகிற சுற்றுலாக்கள்.

இதே மாதிரி கொச்சியி லிருந்தும் சில பஸ் பயணங் கள் புறப்படுகின்றன.

''இதில் கலந்து கொள் பவர்கள் யார்?''

''எழுபது சதவிகிதம் கேரளத்துக் காரர்கள். இருபது சதவிகிதம் அயல் நாட் டினர். பத்து சதவிகிதம் வங்காளி, மராத்தி, குஜராத்தியர்.''

உள்ளூர்ப் பயணிகளை அதிகம் ஈர்ப் பது குருவாயூர், மதுரை, தஞ்சாவூர் பாக் கேஜ் டூர்தான்.

சாப்பாட்டு விஷயத்தில் புகார்கள் எது வுமில்லை. ''சாப்பாட்டில் நாங்கள் அக்ர கண்யர்களாக்கும்! (நிபுணர்கள்)'' என்கி றார் பொன்னப்பன்.

கேரளத்தில் மட்டுமே, எல்லா மாவட் டங்களிலும் டூரிசம் ப்ரமோஷன் கவுன்சில் இயங்குவதாகத் தெரிகிறது. முதலமைச்சர் கருணாகரனின் இலாகா சுற்றுலா.



புகார்கள் பற்றிக் கேட்ட போது கொஞ்சமாய்ப் புன் னகை செய்தார் பொன் னப்பன்.

''சுற்றுலா இலாகா (டிபார்ட்மெண்ட் அஃப் டூரிசம்) தனி; கேரள டூரிசம் டெவலப் மெண்ட் கார்ப்பரேஷன் தனி. அதனால் பதில் சொல்வது கடினம்!'' என்றார்.

– சித்தார்த்



# வீட்டிலேயே

**வி**லைவாசிகள் விண்ணளாவும் நாளில் எல்.டி.ஸி. போன்ற சலுகைகள் உள்ளவர் தவிர, மற்ற சராசரி மக்களுக்கு விடுமுறைக்கு வெளியூர் போவது என்பதே அச்சம் தருவதாக உள்ளது. அப்படியே பணம் சேமித்து வைத்து லீவுக்கு வெளியூர் போவது என்று தீர்மானித்தாலும் ரயில் டிக்கெட் வாங்கி, ஹோட்டலில் ரிசர்வ் செய்து விடுவது கலபம்... ஆனால் ஊருக்குப் போவதற்கு முன்னும் போய் வந்த பிறகும் எத்தனை வேலைகளை யோசித்து, இட்டமிட்டுச் செய்ய வேண்டியிருக்கிறது!

''நாலு நாள் லீவா...? திரும்பி வந்ததும் ஆபீஸில் வேலை குவிந்திருக்குமே... அதனால், லீவின் கடைசி நாள் நான் ஆபீஸ் போய் வேலை பார்ப்பேன்... என்கிறார் கனரா வங்கி மானேஜர் பார்த்தசாரதி!

வெளியூர் போய் விட்டாலும் 'லீவை' 'ஹாய்'யாகக் கொண்டாடி விட முடியாது. போட்ட பட்ஜெட் எகிறாமல் இருக்கிறதா என்று பர்ஸை தினமும் கவலையுடன் தடவிப் பார்ப்பதும்; குழந்தைகள் ஒழுங்காக நடந்து கொள்கிறார்களா என்று சதா கண்காணிப்பதும்; உறவினர் வீட்டில் தங்கினால் 'அவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் இருக்கிறதா?' என்று யோசனையுடன் நடந்து கொள்வதும் அவர்களுக்கு உதவ முயல்வதும்... எனப் பலவித கவலைகள், கட்டுப்பாடுகள் இருந்து கொண்டேயிருக்கும்.

வீட்டில் விடுமுறையைக் கழிப்பதென்றால் அப்படியில்லை. இஷ்டப்படி உடுத்தி, இஷ்டப்படி சாப்பிட்டு, தூங்கி, குழந்தைகளுடன் விளையாடி, அவர்களையும் சுதந்திரமாய் விளையாட அனுமதிக்க முடிகிறது...

வீட்டில் எப்படி விடுமுறையைக் கழிப்பீர்கள் எனச் சிலரிடம் கேட்டுப் பார்த்தோம்:

''லீவு நாளானாலென்ன... அப்படியும் பால் வாங்கிறதுக்காக நாங்கள் ஐந்து மணிக்கு எழுந்தாகணும். நான்தான் போய் பூத்திலிருந்து பால் வாங்கிட்டு வருவேன். வாங்கி வந்து உடனே காய்ச்சி, குழந்தைகளுக்கு ரெடியா ஆற வைச்சுடுவேன். கையோட காப்பியையும் போட்டு, என் மனைவியை எழுப்பி அவளுக்கும் காப்பி





# விடுமுறை!

கொடுத்துட்டு நானும் குடிப்பேன்... பிறகு இரண்டு பேரும்... திரும்பித் தூங்கிடு வோம்...!'' என்கிறார் சந்திரசேகரன். (அட்டைப்படம்) இவர் லீவு நாட்களில் மனைவியைச் சமையலறைக்குள் போக விட மாட்டாராம்.

''அன்றைக்கு ஒரு நாள்தான் நாங்க சேர்ந்து பொழுதைக் கழிக்க முடியும். அப்போ மல்லிகா பாட்டுக்குச் சமையல றையில போய்ப் புகுந்துக்கிட்டா எனக்குப் பிடிக்காது... இனப்படியே அவளும் நானும் வீட்டு வேலைகளைச் சமமா பங்கு போட்டுக்குவோம். எங்கள் சாப்பாட்டுத் தேவைகள் ரொம்ப சிம்பிள்.... அதுவும் லீவு நாளில் ரொம்ப ரொம்ப சிம்பிள்...'' என்று சந்திரசேகரன் கூற அதை ஆமோதிக் கிறார் மல்லிகா. அவர்கள் இரண்டு குழந் தைகள் நிகிலும் லாவண்யாவும் எல்லா விதமான உணவு வகைகளையும் விரும்பிச் சாப்பிடப் பழக்கப்படுத்திக் கொண்டிருக் கிறார்கள்.

**''லீவு நாளில் ஃப்ரீயா இருக்க ணும்னா சுலபமா, சீக்கிரமா சமையல் முடி யறது அவசியம்''** என்பதை ஒப்புக் கொள் ளும் திருமதி செல்லம் கோபால கிருஷ்ணன் இருபது நிமிடங்களில் தயாரிக்கக்கூடிய ஒரு உணவுக் குறிப்பைத் தருகிறார் :

காரட், சௌசௌ, முள்ளங்கி, உருளை போன்ற காய்களை சற்றுப் பெரிதாக நறுக்கிக் கொள்ளுங்கள். ஒரு சிறிய உருண்டை புளியை நீர்க்கக் கரைத்து, சிறிது உப்பு, மஞ்சள் பொடி போட்டு, நறுக்கிய காய்களைச் சேருங்கள். குக்கரில் நேரடியாக இந்தக் கலவையை ஒரு 'விஸில்' சப்தம் வரும் வரை வேக விடுங்கள்.

இன்னொரு அடுப்பில் ஒரு ஆழாக்கு ரவையை நன்கு வறுத்துத் (எண்ணெயில் உப்புமாவுக்கு வறுப்பது போல) தனியே வைத்துக் கொள்ளுங்கள். ஒரு பிடி பயத்தம் பருப்பைத் தண்ணீரில் நன்றாகக் குழைந்து வேகவிடுங்கள். (ஒரு 'கப்' ரவையில் சுமார் ஆறு பெரிய கரண்டிகள் அளவு சமைத்த உணவு கிடைக்கும்) காய் நறுக்கும்போதே பயத்தம் பருப்பை வேக விட்டால் நேரம் மிச்சம்.

இதற்குள் குக்கர் சப்தம் அடங்கி, திறக் கத் தயாராயிருக்கும். வெந்த காய்களு டன்கூடிய புளித் தண்ணியில் வெந்த பயத் தம் பருப்பையும், வறுத்த ரவை யையும்






# பிறக்கிறது ஆங்கீரஸ ஆண்டு!

**பி**ரம்மாவின் மானஸ புத்திரர்கள் பத்துப் பேரில் மூன்றாமவர் ஆங்கீரஸ ரிஷி. இவர் அதர்வண வேதத்தை உலகுக்கு அளித்து. அதன் மூலம் துக்கமும் கஷ்டமும் நீங்கி, சாந்தியும் சௌக்யமும் மலர வழி காட்டினார்.

உலகுக்கே பெரிய பரோபகாரம் செய்த இந்த முனிவரின் பெயரால் விளங்குவதே ஆங்கீரஸ வருஷம்.

'ஆங்கீரஸ' என்றால் தர்மத்தைச் சிறப்பாக அங்கீகாரம் செய்து எல்லோர் மனத்தையும் நல்வழிப்படுத்துதல் என்றும் பொருள்.

தர்மம் தழைக்கும் என்ற நன்னம்பிக்கையுடனும் பிரார்த்தனையுடனும் புதிதாய்ப் பிறக்கும் ஆங்கீரஸ ஆண்டினை வரவேற்போம்.

- மஞ்சக்குடி ராஜகோபால சாஸ்திரிகள்

கூறக் கேட்டுத் தொகுத்தவர் : பா. ரா.

---

கொட்டி உப்புப் போட்டுக் கிளறுங்கள்.

இந்தக் கலவையில் மிளகாய் வற்றல், தனியா, கடலைப் பருப்புடன், தேங்காயும் விருப்பமான வேறு மசாலா சாமான்களும் வறுத்து மிக்ஸியில் அரைத்துச் சேர்த்து ஒரு கிளறு கிளறி இறக்கிப் பரிமாறலாம். இந்த 'ரவை பிஸிபேளா' மாறுதலான சுவையுடன் சீக்கிரம் தயாரிக்கக்கூடியது.

''இப்படி ஒரே ஐட்டத்தைச் செய்து சாப்பிட்டு நிம்மதியாக நாங்கள் இருந்துட முடியுமா... எங்க அகராதியில லீவு நாள் என்பதெல்லாம் கிடையாதும்மா...'' என்று அங்கலாய்க்கும் பெண்கள்தான் அதிகம். இவர்கள் கணவன்மார்கள் ''எனக்கு ஹாலிடேல கண்டிப்பா நான்-வெஜ் இருக்கணும்...'' என்றோ ''இரண்டு பொறியல், ஸ்வீட் இல்லாமல் என்ன லீவு கொண்டாடறது என்றோ'' பெருமைப்பட்டுக் கொள்ளும் ரகம்...

''லீவு நாளில்தான் என் குழந்தைக்குப் பிடித்ததை வீட்டிலேயே செய்து தர முடியும்...'' என்று மகிழ்ச்சியுடன் கூறும் உமா குருமூர்த்தி, கேக், ஐஸ்கிரீம் போன்றவற்றை வீட்டிலேயே தயாரிப்பதில் ஈடுபடுவாராம்.

இவர்களுக்கு நேர்மாறாக நுங்கம்பாக்கம் வாசியான ரகு ஒரு கருத்தைச் சொல்கிறார் : ''விடுமுறைக்கு வெளியூர் போவதென்றால் ஓட்டலில்தானே சாப்பிட வேண்டும். வீட்டிலேயே விடுமுறை கொண்டாடும் போதும் அப்படிச் செய்யலாமே? சமையலறையில் அடைந்து கிடக்க வேண்டாம். ஜாலியாக குடும்பத்தோடு ஓட்டலுக்குப் போய் நிதானமாகச் சாப்பிடலாம். எப்படியும் ரயில் கட்டணம், ஓட்டலில் அறை எடுக்கும் பணம் மிச்சமாகிறதில்லையா?

'லீவு நாளில் சாப்பாடு பற்றிய ஆர்வக் கவலையெல்லாம் எனக்கு வராது என்கிறார் சி. ஏ. மாணவர் விஸ்வநாத். ''டென்ஷன் இல்லாமல் 'லேட்' ஆக எழுந்திருப்பேன். 'மக்'காக டிரெஸ் பண்ணிக் கொள்ள வேண்டாம் என்ற எண்ணமே ஒரு பெரிய விடுதலை உணர்வைக் கொடுக்கும். நண்பர்கள் வீட்டுக்குப் போனால் கூட பழைய காட்டன் சட்டை, பைஜாமா அல்லது ஜீன்ஸ் அணிந்துதான் போவேன். நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருப்போம்...'' என்கிறார்.

'மெடிகல் ரெப்' பணியில் படு பிஸியாக இருக்கும் பிரகாஷும் நண்பர்கள் சந்திப்பையே விடுமுறை தினத்தின் முக்கிய அம்சமாகக் கருதுகிறார்.

''பேப்பரில் வரும் கிராஸ்வர்ட் புதிரை யார் போடுவது என்ற சண்டையில் தான் எங்கள் லீவு நாள் ஆரம்பிக்கும் என்கின்றனர் கீதா - ராஜா தம்பதி. சண்டையில் ஜெயிப்பவர் பேப்பருடன் ஒரு ரூமில் கதவைச் சாத்திக் கொண்டு புதிரைப் பூர்த்தி செய்ய வேண்டியது; மற்றவர் அதற்குள் எழுந்து கொள்ளும் வாண்டுகளைப் பல் தேய்க்க வைத்துப் பால் குடிக்கச் செய்ய வேண்டியது.

டாக்டர் பவானி, லீவு நாளை வீட்டில் கழித்து 'வீணடிக்க' விரும்பவில்லை. ரத்த தானம் பற்றிய விழிப்புணர்வு பரப்ப தம் விடுமுறையைப் பயன்படுத்த ஆவல் என்கிறார்.

'லீவு நாளில் வீட்டில் என்னென்லாம் செய்ய வேண்டும் என்று பட்டியலே போட்டு வைக்கடுவேன்'' என்று முழு நீளத்துக்கு ஒரு பட்டியலை நீட்டுகிறார் பத்மா. அதில் :

எழுத வேண்டிய கடிதங்கள்
செய்ய வேண்டிய போன் கால்கள்
தேட வேண்டியவை
தைக்க வேண்டியவை (துணிகளில் சின்ன ரிப்பேர்)

ரிப்பேர் செய்ய வேண்டியவை... என்று எக்கச்சக்கத்துக்குக் குறிப்புகள். ''சமீப நாட்களாக எங்கள் பகுதியில் மொபைல் இஸ்திரி போல் ஒரு மொபைல் டெய்லர் வருகிறார். அதனால் துணிகளில் ஊக்கு தைப்பது, ஓரம் தைப்பது, பிரிந்த தையல்களைச் சேர்ப்பது போன்ற வேலை களை அவரிடம் கொடுத்து விடுவேன். இதனால் லீவு நாளில் கணிசமாக நேரம் மிச்சமாகிறது'' என்கிறார்.




**ஆம். சரியாக சாப்பிடாமல் இருப்பது குழந்தையின் வளர்ச்சியை பாதிக்கலாம்.**

சரியாக சாப்பிடாமலிருக்கும் குழந்தை தனது உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் அனைத்தையும் முழுமையாகப் பெறுவதில்லை. இப்பற்றாக்குறை அவனது வளர்ச்சியை பாதிக்கக் கூடும். அவனுக்கு அளிப்பீர் காம்ப்ளான். அவன் இழந்த ஊட்டத்தைப் பூர்த்தி செய்ய காம்ப்ளான் உதவுகிறது. குழந்தையின் வளர்ச்சிக்குத் தலைசிறந்த புரதமாகிய பால் புரதம் 20% மற்றும் உடலுக்குத் தேவையான 22 அத்தியாவசியமான ஊட்டச்சத்துக்கள் அடங்கியதாகும் காம்ப்ளான்.




**காம்ப்ளான்®**

**திட்டமிட்ட பரிபூரண உணவு.**

GX/27/203 TAM R2



## அடுத்த இதழில்...

●● பிரிட்டனில் தேர்தல் எப்படி நடக்கிறது?

- ஓர் அலசல்

''சட்டம் தொடர்பான புத்தகங்களையே படிக்க வேண்டியுள்ளது... லீவு கிடைத்தால், ஆசையுடன் வாங்கி வைத்துள்ள தி. ஜானகி ராமன், பாலகுமாரன் புத்தகங்களை ஒரே மூச்சில் படிப்பேன்'' என்று சொல்பவர் ஜூனியர் வழக்கறிஞர் ஷோபா.

**ஷோ**பாவைப் போல் புத்தக விரும்பிகள் அரிதாகி வருகிறார்கள். மறுநாள் விடுமுறையெனில் முதல் நாளே வீடியோ லைப்ரரியை ஒரு கலக்குக் கலக்கி காஸெட்டுகளை அள்ளிக் கொண்டு வருவோர்தான் அதிகம். விடிய விடிய வீடியோ பார்த்து விட்டு மறுநாள் சாவகாசமாக எழுந்து, மீண்டும் வீடியோ பார்த்து, பார்த்து, பார்த்து... இப்படியே இவர்கள் பொழுது போய் விடும்!

''நாலு நாட்கள் சேர்ந்தாற்போல் 'லீவு' கிடைத்தால் பழைய உலகக் கோப்பை மாட்சுகளின் வீடியோ காஸெட்டுகளை வாங்கிப் (இவை வீடியோ கடைகளில் கிடைக்கின்றன) போட்டுப் பார்ப்பேன்...'' என்கிறார் ராமகிருஷ்ணன். ''டென்ஷன் இல்லாமல் மாட்ச் பார்ப்பது அலாதி சுகம்...'' என்கிறார்.

''வீடியோ பார்த்தால் வேலைகள் கெட்டு விடும் என்பதால்தான் நாங்கள் வி. சி. ஆரே வாங்கவில்லை'' என்போரும் உண்டு.

''லீவு நாளில் எல்லோரும் சேர்ந்து வீட்டைச் சுத்தப்படுத்துவோம். சமையலறை, ஸ்டோர் ரூம் ஒழித்து, அலமாரிகளில் பேப்பர் மாற்றி, பாட்டில்களைக் கழுவி வெயிலில் வைத்து... இதிலேயே பொழுது போய் விடும்... அன்றைக்கு ஒரு நாள் எல்லாத்தையும் சேர்ந்தே செய்வோம்; மளிகைக் கடைக்குப் போனால் கூட எல்லோரும் சேர்ந்து போவோம்...'' என்கிறார் சந்தியா.

**இ**தைப் போல் குடும்ப அங்கத்தினர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு விடுமுறை நாளினை வீட்டு வேலையிலோ விளையாட்டிலோ கழிப்பது என்பது அரிதாகிக் கொண்டே வருகிறது.

டீ. வி. வீடியோவின் ஆக்கிரமிப்பு ஒரு பக்கமென்றால் ஸம்மர் ஸ்கூல், கம்ப்யூட்டர் கிளாஸ், டியூஷன், டென்னிஸ்/கிரிக்கெட் கோச்சிங் என்று இன்னொரு பக்கம் குழந்தைகளைப் பல வித்தைகளில் பழக்க பயிற்சி வகுப்புகள்... இவற்றுக்கு அவர்களை அழைத்துச் செல்வதும் திரும்ப அழைத்து வருவதும் பெற்றோரின் கூடுதல் பொறுப்பு... இப்படியே 'busy' ஆக இருந்து பழகிக் கொள்ளும் குழந்தைகளுக்கு வீட்டில் இருப்பதே 'bore' என்று தோன்ற ஆரம்பித்து விடுகிறது.

ஆனால் வீட்டிலேயும் இவர்கள் உடலுக்கும் மூளைக்கும் சுறுசுறுப்பான வேலை தரும் வித்தியாசமான பொழுது போக்குகளைத் தேவைக்கேற்ப உருவாக்கிக் கொண்டேயிருக்கலாம்.

● குழந்தைகளுக்குப் பாதி கதை சொல்லி மீதியை அவர்களையே பூர்த்தி செய்யச் சொல்லிக் கற்பனையைத் தூண்டலாம்.

● சமையல், வீட்டு வேலைகளில் பெரியவர்கள் ஈடுபடும் போது குழந்தைகளை உதவச் செய்யலாம்.

● விடுமுறை நாளில் வீட்டில் சிறப்பாகப் பூஜை, பஜனை வழிபாடு போன்றவற்றுக்கு நேரம் ஒதுக்கலாம்.

● வாராந்திர விடுமுறை எனில், வாரம் முழுக்க ஒவ்வொருவரும் என்ன செய்தனர் என்பதைப் பேசிப் பரிமாறிக் கொள்ளலாம். ஒவ்வொருவருக்கும் தங்கள் பணியிலும் படிப்பிலும் உள்ள ஈடுபாடு மற்றவருக்குப் புரிய வரும்.

● ஒரு வாரத்துச் செய்தித்தாள்களைப் பிரித்து வைத்துக் கொண்டு முக்கிய செய்திகளைக் குறிப்பெடுத்துக் கொண்டு, அவை பற்றிப் பேசி அலசலாம்.

● ஒவ்வொரு விடுமுறை நாளையும் குடும்பத்தின் ஓர் உறுப்பினருக்கு (குழந்தைகள் உள்பட) ஒதுக்கி, அன்று அவர் இஷ்டப்படி பொழுதைப் போக்கலாம். (வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும் என்பதை மட்டும் நிபந்தனையாக வைத்துக் கொண்டு...) ஒவ்வொரு விடு முறை நாளும் வித்தியாசமாய் அமைவதோடு, மனம் விட்டுப் பேசவும், குடும்ப உறவுகள் வலுப்படவும் பிறர் உணர்வுகளை மதிக்கும் பண்பு வளரவும் விடு முறை நாட்கள் வழி காட்டும்...

- நமது நிருபர்கள்

புகைப்படம் ; மேலட்டை வண்ணப் படம் : யோகா

சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி

## பார்க் டவுன் பெனிபிட் பண்டு லிமிடெட்

(மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம்)

(நிறுவியது 1985)

223, தெற்கு தங்கசாலை வீதி (முதல் மாடி) சென்னை - 600 003

தொலைபேசி : 582676

உங்கள் வசதிக்கேற்றவாறு பயனடைய பற்பலச் சிறந்த திட்டங்களை அளிக்கும் மேற்கண்ட நிறுவனத்தில் உறுப்பினராகுங்கள்

பிக்சட் டிபாசிட்டுகளுக்கு 20% வரை வட்டி

சேவிங்ஸ் கணக்குகள் மீது 9.5% வரை வட்டி

உங்கள் டிபாசிட்டுகள் 45 மாதங்களில் 2 மடங்காகிறது. 90 மாதங்களில் 4 மடங்காகிறது.

### காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

பிரதி மாதம் ரூ. 100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்துவீர்

5 ம் ஆண்டு முடிவில் ரூ. 6000/- ஐத் திரும்பப் பெறுவீர்

10 ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ. 6000/- ஐத் திரும்பப் பெறுவீர்

15 ம் ஆண்டு முடிவில் மிகப் பெருந்தொகையாக ரூ. 50,000/- பெறுவீர்

### பென்ஷனர் நலத் திட்டம்

முதியோருக்கென்றே அளிக்கப்படும் முச்சலுகைத் திட்டம்.

சேமிப்பு ரூ. 13,000/-

வட்டி வீதம் - 19%

கால வரம்பு - 12 மாதங்கள் மட்டுமே

முன்னதாகவே பெறும் காசோலைகள்.

விதவைகளும், உடல் ஊனமுற்றோர்களும் இதில் சேரலாம்.

### பொற்குவியல் திட்டம்

ரூ. 100/- மட்டுமே பிரதி மாதம் செலுத்தி 25 வருட முடிவில் ரூ. 3 லட்சம் (Rs. 3,00,000/-) பெற்றுப் பயனடைவீர்.

ஒரே ஒரு தடவை ரூ. 6666/- ஐச் செலுத்தி 25 வருட முடிவில் ரூ. 3 லட்சத்தோடு நீங்கள் செலுத்திய பணத்தையும் சேர்த்துப் பெறலாம்.

### செல்வக்களஞ்சியம் டிபாசிட் திட்டம்

உங்கள் குழந்தையைக் குபேரனாகக் காண ஆசையா! இதோ

ரூ. 7500/- ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ. 1,20,000/- பெறலாம்.

ரூ. 9000/- ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ. 1,44,000/- பெறலாம்.

கடன் வேண்டுமா? எங்களை அணுகுங்கள். நகைக் கடன் பவுனுக்கு ரூ. 2400/- வட்டி 22.2%
கடனுக்கு உச்சவரம்பு இல்லை தருவதில் தாமதமில்லை. R. D. கட்ட வேண்டியதில்லை.

***கௌரவ ஆலோசகர் :***

P. பாலசுப்ரமணியம் B.Sc
முதன்மை அறங்காவலர்,
கந்த கோட்டம், சென்னை - 3


இயக்குநர் குழுத்தலைவர்
R. விவேகாநந்தன் B.Com

***குழு உறுப்பினர்கள் :***

| | | |
|---|---|---|
| திரு P. ஏகாம்பரம் | திரு G. ஏகாம்பரம் செட்டியார் | திரு V.A. ஞானப்பிரகாசம் |
| திருமதி B. விசாலாட்சி | திரு K.T. ஷண்முகம் | திருமதி கோமதி சுந்தரம் B.Sc |
| திரு P.K. சந்திரசேகரன் | திரு C.T. ஷண்முகம் Ex.J.P. | திரு P.E. ராமச்சந்திரன் B.Com |
| திரு P.K. சிவகுமார் | திரு P.T. ஷண்முகம் B.E. | |

***பங்குதாரர்களுக்கு மட்டும்.***

Business Hours : Week Days 8.30 a.m. to 12.30 p.m. & 2.00 p.m. to 6.00 p.m. Sunday 8.30 a.m. to 12 noon. Friday Weekly Holiday


போஃபர்ஸ் ஊழல்
பட்!
இதோ, நானும் வந்துட்டேன்...!
ஜெயலலிதா
மத்திய அரசு
'ஜெ' ராகம்...
அரிய ராகங்கள் ஆராய்ச்சிப் பிரிவு ...
ஆஹா, பேஷ், பேஷ்...
ஜெயலலிதா
பலே...!
ராகமா இது? கர்ண கடூரம்!
பொதுமக்கள்

# சோலங்கி ராஜினாமா

சர்வ வல்லமை பொருந்தியதாக விளங்கிய காங்கிரஸ், தேர்தலில் தோற்றுப் போக முன்பு காரணமாகி, ஆட்சி மாற்றத்துக்கும் வழிவகுத்த போஃபர்ஸ் ஊழல், இன்று அமைச்சர் சோலங்கியின் ராஜினாமாவுக்கும் காரணமாகியிருக்கிறது. இன்னும் எத்தனை பலிகள் கேட்கப் போகிறதோ!

சுவிட்சர்லாந்துக்குச் சென்ற அயல் விவகாரத் துறை அமைச்சரிடம் வழக்கறிஞர் ஒருவர் ஒரு கடிதம் தந்தாராம். அதை இவர் சுமந்து கொண்டு போய் அந்த நாட்டின் அயல் விவகாரத் துறை அமைச்சரிடம் சேர்ப்பித்தாராம். "கடிதத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்குத் தெரியாது; எடுத்துப் போகச் சொன்னது யார் என்பதையும் கூற முடியாது" என்கிறார் சோலங்கி. வாயில் விரலை வைத்தால் கடிக்கக் கூடத் தெரியாது என்பது போன்ற இந்தப் பேச்சையும் நடிப்பையும் கண்டு உலகமே எள்ளி நகையாடுகிறது. தபால்காரர் வேலை செய்யவா ஒரு அயல் விவகார மந்திரி நியமிக்கப்படுகிறார்?

நல்லவேளையாக, நமது நாட்டில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள தலைவர்கள் மூடி மழுப்பி பூசி மெழுகுவது போல் சுவிட்சர்லாந்து நாட்டுத் தலைவர்கள் நடந்து கொள்வது இல்லை. அதனால் அவர்கள் பகிரங்கமாகப் பேச, அது நாளிதழ்களிலும் வெளியாக, இன்று சோலங்கியும் அமைச்சர் அவையிலிருந்து வெளியேறி இருக்கிறார்.

'இந்திய அயல் விவகார அமைச்சர், சுவிஸ் அயல் விவகார அமைச்சரிடம் நேரில் தந்த கடிதம் ஆதலால், கடிதம் யார் எழுதியதாக இருந்தபோதிலும் அந்தக் கடிதத்தின்படி சுவிஸ் அரசு நடந்து கொள்ள வேண்டும் என்று இந்திய அரசு எதிர் பார்ப்பதாகத்தான் அர்த்தம் பண்ணிக் கொள்ள முடியும்' என்பதை சுவிஸ் அரசு விண்டுரைத்தது. அத்துடன் கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பதையும் அம்பலமாக்கி உள்ளது. இந்தியாவில் போஃபர்ஸ் ஊழல் தொடர்பாகத் தீவிர நடவடிக்கை எடுப்பதில் அரசுக்குச் சிரத்தை இல்லை என்பதை எடுத்துக்காட்டுக்களுடன் உணர்த்துகிறது அந்தக் கடிதம். எனவே, சுவிஸ் அரசும் அதில் அதிக சிரத்தை காட்ட வேண்டாம் என்று வெளிப்படையாகவே கூறுகிறது. அவசரப்பட வேண்டாம்; தாமதப்படுத்தலாம் என்று சொல்கிறது.

இந்தச் சூழ்நிலையில் சோலங்கியின் ராஜினாமா தவிர்க்க முடியாததாகி விட்டது என்றாலும் இது போதாது. இந்தக் கடிதத்தை யார் தம்மிடம் தந்தது, யார் யாருடைய தூண்டுதலின் பேரில் எடுத்துச் சென்றார் என்பதையெல்லாம் சோலங்கி வெளியிட்டே ஆக வேண்டும். அல்லாத பட்சத்தில் அது இந்நாட்டு மக்களுக்கு அவர் செய்த துரோகமாகும்.

நடந்து விட்ட தவறுக்கு வருந்தி, பரிகாரம் தேட முற்படுவது போல், விசாரணையைத் தொடருமாறு சுவிஸ் அரசை பாரத அரசு இப்போது கேட்டுக் கொண்டிருக்கிறது - சி. பி. ஐ. மூலமாக. ஆயினும் இதுபோன்ற முன்னுக்குப் பின் முரணான கோரிக்கைகள் தாமதத்தையும் தயக்கத்தையுமே ஏற்படுத்தும்.

சுவிஸ் வங்கிகளில் உள்ள ரகசியக் கணக்குகள் பற்றி அந்நாட்டில் கடுமையான சட்டதிட்டங்கள் உண்டு. ஆயினும் லஞ்ச ஊழல் நடந்திருப்பதாக உறுதி கூறி அதையொட்டி ரகசியக் கணக்குகள் பற்றி விவரங்கள் கேட்டால் சுவிஸ் அரசால் தகவல் தர மறுக்க முடியாது. நமது அரசு அழுத்தம் திருத்தமாகக் கேட்டால் சுவிஸ் அரசும் முழு ஒத்துழைப்பு தரும். ஆனால் புதுதில்லி அவ்வாறு நடந்து கொள்ளாமல் வழவழ அணுகு முறையையும் இழுபறி நிலைமையையுமே தொடர்கிறது. லஞ்ச ஊழல் நடந்திருப்பது நிரூபணமான விஷயம். தெரிய வேண்டியது லஞ்சம் பெற்றவர் யார் யார் என்ற விவரம்தான். நமது அரசு மனம் வைத்தால் இதை எளிதில் பெறலாம்.

மூன்று ஆட்சிகள் மாறிய பிறகு இனியும் பயத்துக்கோ, தயக்கத்துக்கோ அவசியம் இல்லை. உண்மைகள் வெளியாவதால் பிரதமரின் - மைய அரசின் - கௌரவம் உயருமே தவிர குறையாது. மாறாக மூடி மறைக்க முயற்சி செய்வதால்தான் தலைவர்கள் எல்லோருக்குமே அவமானம், தலைகுனிவு. ஆபத்தும் இதில்தான் அதிகம். உண்மைகள் வெளிவருவதில் அல்ல.



# கல்கி

1992
ஏப்ரல் 12
மலர் : 50
இதழ் : 37
பிரஜோத்பத்தி
பங்குனி 30



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

**ஞானமலர் - 1**

விநாயகர் சதுர்த்தி விழா நடக்கிறது. வீட்டில் ஒரே கோலாகலம். மகளை அழைத்துத் தோட்டத்தில் இருக்கும் களி மண்ணைக் கொண்டு வரச் சொன்னாள் அம்மா. இரண்டு கைகளிலும் அள்ளிக் கொண்டு வந்த மகளைப் பார்த்து ''இவ்வளவு எதற்கு?'' என்று அங்கலாய்த்தபடி கொஞ்சமாகப் பிடித்துவைத்து ''மீதியை வெளியில் எறி'' என்றாள். பிடித்து வைத்த பிள்ளையாருக்கு மஞ்சளும் குங்குமும் வைத்துக் ''கும்பிடு... பிள்ளையாரைக் கும்பிடு'' என்றாள் அம்மா.

# மாற வேண்டியவை மனோபாவங்கள்

கொண்டுவந்ததும் களிமண். வெளியே எறிந்ததும் களிமண். பிடித்துவைத்தது மட்டும் எப்படி பிள்ளையார் ஆனது? களி மண் எப்படி கடவுள் ஆனது? பதவி உயர்வு எப்படி வந்தது? பாவனை... பாவனை... பாவனைதான் காரணம். களிமண் கடவுளாக லாம் என்றால் ஆசாமி சாமியாக முடியாதா? ஏன் முடியாது? அப்படி மனிதனைச் சமைக்கும் முயற்சிதான் சமயம்.

இறைவழிபாட்டை முறையாகச் செய்ய மூன்று விஷயங்கள் முக்கியம். 1) மந்திரம், 2) கிரியை, 3) பாவனை. ஜெபிப்பது மந்திரம். சில முத்திரைகளைக் கையால் காட்டுவது கிரியை. கல்லையோ செம்பையோ கடவுளாகப் பாவனை செய்து வழி பட்டால் வழிபாடு முழுமையாகிறது.

வழிபாட்டில் மந்திரம் முக்கியம்தான். ஆனால் மனோலயம் இல்லாத மந்திரபூஜை வெறும் எந்திர வேலை. சிலர் பூஜை செய்தால் மணிக்கணக்காகப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்... மனோலயம் அப்படி. அவர்கள் அபிஷேகம் செய்யும் போது குழந்தையைக் குளிப்பாட்டும் தாய்மைத் தவம் இருக்கும். அலங்காரம் செய்யும் போது காதலியின் தாபம் தலை எடுக்கும். நைவேத்தியம் செய்யும் போது அன்னத்துடன் அன்பைக் குழைத்துப் படைப்பார்கள். உணவை ஊட்டி, பட்டுத் துணியால் சுவாமியின் வாயைத் துடைக்கும் போது கல்லாய் நிற்கும் நாத்திகன் கூட கையை உயர்த்திக் கும்பிடுவான். கோவை கௌமார மடம் சுந்தரம் சாமிகள் பூஜை செய்யும் போது இந்த அநுபவம் எனக்கே உண்டு. இந்த பாவனைதான் உருவ வழி பாட்டின் ஜீவரகசியம்.

அது ஒரு மழைக்காலம். குளங்களும் கிணறுகளும் பக்தர்கள் மனசுபோல் குளிர்ந் திருக்கும் நல்லகாலம். அந்த மழையிலும் நாட்டு நிலவரத்தை நன்கறிய நடந்தே வரு கிறார் பாண்டிய மன்னர். பகலே இரவாக இருக்கும் அந்த மழைநாளில் நிஜமான இரவு தலை எடுக்கும் அந்தி சந்தி.

குளக்கரை வழியாக அடிமேல் அடி வைத்து நடக்கிறான் மன்னவர் மன்னவன். தமிழ் வளர்க்கும் தென்னவன். வரகுண பாண்டியன் என்ற சிவபக்தன். அப்போது அந்தக் குளக்கரை முழுதும் 'கரபுர' 'தளபுள' என்று தவளைக் குலத்தின் சப்த ஜாலம். எப்போதும் கூர்மையான மன்னவன் செவிகள் இன்னும் கூர்மை ஆயின. அவன் கண்களில் கண்ணீர் கவிதை எழுதியது.

அந்திப் பொழுதல்லவா? அவன் விழித் தாமரைகள் விரைந்து குவிந்தன. கரங்க ளாகிய தாமரைகளும் கடவுள் வணக்கம் செய்தன. உதடுகள் ஏதோ உச்சரித்தபடி நடு நடுங்கின. காலம் கரைந்தது.

உடன் வந்த அமைச்சர்களும் அதிகாரி களும் அரசர் வழிபாட்டை அவமதிக்கக் கூடாதே என்று ஈரமழையில் அமைதியாய் நனைந்தனர். சிறிது பொறுத்து விழி மலர் திறந்த வரகுண பாண்டியன் வாய் மலர் திறந்து உத்தரவிட்டான்.

''அமைச்சரே... கேழ்வரகும் அரிசியும் தான்யங்களும் நிறைய நிறையக் கொண்டு வந்து இந்தக் குளத்தில் கொட்டுங்கள்.''

அதிர்ச்சியை வெளிக்காட்டிக் கொள்ளா மல் அமைச்சர், ''உத்தரவு அரசே'' என்று சொல்லிச் சிறிது கழித்து ''குளத்தில் தானியங்களைக் கொட்டும் காரணம் என்ன

என்று தெரிந்து கொள்ளும் தகுதி எங்களுக்கு இருந்தால் தெரிவிக்க வேண்டும்'' என்று இழுத்தார்.

அரசன் மொழிந்தான்.

''சிவனடியார்கள் பசியோடு இருக்கலாமா? ஆண்டவன் அடியவர் பசி தீர்ப்பது ஆள்பவன் பிறவிக் கடமையல்லவா?''

அமைச்சருக்குத் தலை சுற்றியது.

''அடியார்களா? குளத்திலா... புரியவில்லையே...'' என்றார்.

''இந்தக் குளத்தில் கூடிநின்று தவளைகள் இறை நாமம் சொல்லி ஜெபித்ததைத் தாங்கள் கேட்கவில்லையா?''

அமைச்சருக்குத் தலையும் புரியவில்லை... காலும் புரியவில்லை!

அரசரே தொடர்ந்தார். ''ஹர ஹர..... ஹர ஹர என்று சிவபெருமானைத் தவளைகள் துதித்த இன்ப நாதம் உங்கள் செவிகளில் விழவில்லையா? ஹர ஹர என்றவர் ஆரானாலும் சிவனடியார் அல்லவா?''

மன்னவர் மனநிலை மந்திரிக்குப் புரிந்தது. கரபுர என்று தவளைகள் நாராசமாகக் கத்தியது ஹர ஹர என்று சிவபக்தனுக்குக் கேட்டிருக்கிறது. காரணம் மனோபாவம். இது வரகுண பாண்டியன் பெற்ற வரம்.

குற்றாலத் தல புராணத்தில் அழகான பாட்டு. ரசிகமணி டி.கே.சி ரசித்த பாட்டு. அந்தக் குற்றால மலையை உற்றுப் பார்க்கிறார் புலவர். மலை ஒரு சிவலிங்கமாகக் காட்சி அளிக்கிறது. அதன் மீது நிற்கும் பலாமரம். அதுவும் சிவலிங்கமாகவே தோன்றுகிறது. பலாப் பழம்... அட அதுவும் ஆவுடையார் இல்லாத சிவலிங்கம்! அதன் களைகளும் களைகள் ஈன்ற வித்தும் சிவலிங்கம்.. சிவலிங்கம்... புலவரின் சிவ அனுபவம் இது!

பலாப்பழமும் மற்றவையும் புலவருக்குச் சிவலிங்கமாகவே தோன்றியது கற்பனையா? பாவனையா? கற்பனை வேறு.



## சகிசிவம்





''இதுக்குத்தான் தலைவரே அடிக்கடி தொகுதி பக்கம் போகணும்கறது...!''
''ஏன்யா?''
''நான்தான் இந்தத் தொகுதி எம். எல். ஏ.னு சொல்லி ஒருத்தன் கடைத் தெருவிலே நிதி வசூல் பண்ணிகிட்டிருக்கான்...!''

- கே. எஸ். சுரேஷ்

பாவனை வேறு. கற்பனையில் பொய்மை உண்டு. பாவனையில் பொய்மை இல்லை. கற்பனையின் முடிவில் தோல்வியின் விரக்தி மிஞ்சும். பாவனையின் நிறைவில் அனுபவத்தின் ஆனந்தம் நிலவும். புலவர் பெற்ற சிவ அனுபவம் ஆனந்த பரவசம்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆழ்வார் மகளாக வளர்ந்த ஆண்டாள் ஆயர்பாடியில் இடைக்குல மடந்தையாக இதயபூர்வமாகப் பாவனை செய்தாள். அவளது ஆனந்த அனுபவத்திற்குத் திருப்பாவையே அத்தாட்சி. நாயக -நாயகி பாவத்தில் ஆண்டவனில் தன்னை இழந்த அனுபவம் ஆழ்வார்களுக்கும் நாயன்மார்களுக்கும் உண்டு. பாவனை இல்லாத வழிபாடு ருசியே இல்லாத சாப்பாடு. நமது வாழ்க்கை மேன்மையுற வேண்டுமெனில் நமது மனோபாவம் மாறினால்தான் சாத்தியமாகும்.

சீதையை எப்படியாவது அடைய வேண்டும் என்று இராவணனுக்கு ஆசை. நிறைவேறவே இல்லை. ஆலோசனை கேட்டான். அமைச்சர் சொன்னார். ''நீங்கள் இராவணனாக இருக்கும் வரை இதற்கு வாய்ப்பே இல்லை... இராமனாக மாறுங்கள்.... மாயையால்.. ஆசை நிறைவேறும்'' என்றான். விரக்தியாகச் சிரித்தான் இராவணன்.

''இராமனைப் போலவே நீலமேனி... தாமரைத் தடக்கை. வில்லேந்திய வீரத் தோள்கள். மரவுரி.. ஜடாமுடி யாவும் பெற்றேன். என்னை இராமனாகப் பாவனை செய்தேன். தவறு செய்ய வேண்டும் என்ற எண்ணமே என்னைவிட்டு நீங்கிவிட்டது. தீய எண்ணமே என் மனத்தில் இல்லாமல் போனது.''

உண்மை. வாழ்க்கை மாற வேண்டும் என்றால் மனோபாவங்கள் மாறியாக வேண்டும்.



# பிஞ்சுக் குழந்தைகளுக்காக ஒலிக்கும் தங்கக் குரல்

ஒரு சின்ன கல்கண்டு கட்டியை ஒரு குழந்தையின் கையில் கொடுத்துப் பாருங்கள்.... உலகமே கிடைத்த சந்தோஷத்தில் அதன் முகம் பூரித்து மலரும்.

சில குழந்தைகள் மட்டும் இந்தச் சந்தோஷத்தை அனுபவிக்க முடியாமல் இயற்கை கொடூரமாகச் சதி செய்கிறது - பிறவியிலேயே இக் குழந்தைகள் சர்க்கரை வியாதியால் பீடிக்கப்படுகின்றனர்.

"Juvenile diabetics என அழைக்கப்படும் இந்தக் குழந்தைகள், ஆயுள் முழுவதும் இன்சுலினை நம்பித்தான் வாழ வேண்டும். மிகுந்த கட்டுப்பாட்டுடன்

☛ சதாசிவம் - எம்.எஸ். தம்பதி



உணவு உட்கொள்ள வேண்டும்...'' என்கிறார் டாக்டர் ஜே.ஆர். சுப்ரமண்யம். அவர் மேலும் கூறுகிறார் :

''மிகச் சிறிய குழந்தைகளுக்கு டையபடீஸ் இருப்பதற்கு ஓர் அறிகுறி அசாதாரணமான சிறுநீர்ப் போக்கு. படிப்பறிவும் பொது அறிவும் இல்லாத ஏழை எளிய மக்களால் இதைச் சட்டென்று அடையாளம் காண முடிவதில்லை. பல சமயம் குழந்தையின் உயிருக்கே ஆபத்து ஏற்படும் நிலையில்தான் மருத்துவ உதவி நாடி இவர்கள் செல்கிறார்கள். முற்றிய நிலையில் திடீரென்று 'கோமா' நிலைக்குக் கூடத் தள்ளப்படலாம். இவர்களின் சிறுநீரகமும் கண் பார்வையும் பாதிக்கப்படுவதற்கான வலுவான சாத்தியக் கூறுகள் உண்டு.....

''Juvenile diabetes உள்ளது என்பது தாமதமின்றிக் கண்டறியப்பட்டாலும் அக் குழந்தைக்குத் தொடர்ந்து சிகிச்சையும் மருத்துவர் கண்காணிப்பும் தேவை என்பதால் ஏராளமாகச் செலவாகும்.

''மேலும், என்னதான் செயற்கை இன்சுலின் (ஊசி மூலம்) அளித்தாலும் அது இயற்கையாக உடலில் சுரக்கும் இன்சுலினுக்கு ஈடாகாது. ஏனெனில், நாம் சாப்பிடும் உணவில் உள்ள சர்க்கரையின் அளவைப் பொருத்து நம் உடலே இன்சுலின் உற்பத்தியின் அளவைக் கூட்டவும் குறைக்கவும் வல்லது. அவ்வளவு கச்சிதமாக நாம் செயற்கை முறையில் இன் சுலின் செலுத்த முடியாதே....''

- இவ்வாறு மனத்தை உலுக்கும் தகவல்கள் தந்த டாக்டர் சுப்ரமண்யம், ''இந்தியாவில் Juvenile diabetes குறைவாகவே உள்ளது'' (மேற்கத்திய நாடுகளுடன் ஒப்பிடுகையில்) என்ற ஆறுதலான செய்தியையும் கூறினார்.

சென்னை வி.எச்.எஸ். இல் நீரிழிவு நோய் கண்ட குழந்தைகளுக்குச் சிகிச்சை அளிக்கவும் அந்நோய் பற்றிய தீவிர ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் ஒரு தனிப் பிரிவு (Juvenile Diabetes Research Unit) டாக்டர் சி.வி. கிருஷ்ணசாமி தலைமையில் இயங்கி வருகிறது. அவருக்குக் கீழ் ஐந்து டாக்டர்கள் அடங்கிய மருத்துவப் படையே சேவை மனப்பான்மையுடன் பணியாற்றுகிறது.

வி.எச்.எஸ்.ஸின் இப் பிரிவில் முழுக்க முழுக்க இலவசமாகவே சிகிச்சை அளிக்கப்படுகிறது. குழந்தை நோயாளிகளுக்குச் சிகிச்சையுடன், இந் நோயோடு வாழ்வது எப்படி என்பதும் கற்றுத் தரப்படுகிறது. உதாரணமாக: இவர்கள் தங்களுக்குத் தாங்களே இன்சுலின் ஊசி போட்டுக் கொள்ள வேண்டியிருக்கும்!

இந்த அமைப்பு தனது செயல்பாட்டுக்கு முழுக்க முழுக்க நன்கொடைகளையே நம்பியிருக்கிறது. சமீபத்தில், திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி, தமது 'பதினோரு மொழிப் பாடல்கள்' காஸெட்டின் ராயல்டி தொகையை இவ்வமைப்புக்கு நன்கொடையாக அறிவித்தார்.

திருமதி எம்.எஸ்.ஸை அவரது இசைப் பணிக்காகவும், திரு சதாசிவத்தை அவரது தேசத் தொண்டு, பத்திரிகைத் துறைப் பணிக்காகவும் கௌரவிக்கும் வகையில் சென்னை மேற்கு ரோடரி சங்கம் நடத்திய வண்ணமிகு விழாவில் மேற்படி காஸெட் வெளியிடப்பட, அதற்கான ராயல்டி காசோலையை டாக்டர் சி.வி. கிருஷ்ணசாமியிடம் அளித்தார் எம்.எஸ்.

எம்.எஸ்.ஸின் குரல் இம்முறை பிஞ்சுக் குழந்தைகளுக்காக ஒலிப்பது அறிந்து நம் நெஞ்சு நிறைகிறது.

- எஸ். ஆர்.

படம் : ஓம் சுப்ரமண்யம்

# வேலூரில் வளரும் மனித நேயம்

◆ வேலூரைப் பகைமை சூழ்ந்திருக்கிறதோ இல்லையோ; பகைமையான மனிதர்கள் சூழ்ந்திருக்கிறார்கள். சந்திரசேகரன், ஆர். டி. ராஜன், அர்ச்சனா ஐ. பி. எஸ்., ராமசுந்தரம் ஐ. ஏ. எஸ்., போஸ்க்ருஸ், ராமமூர்த்தி எனப் பட்டியல் நீண்டு கொண்டு செல்கிறது.

நாம் அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது என்ன தெரியுமா?

'மனித நேயம்'

புவனகிரி, அருட்செல்வன்.

◆ அர்ச்சனா ஐ. பி. எஸ். - இராமசுந்தரம் ஐ. ஏ. எஸ். தம்பதியின் அட்டைப் படமும் அவர்களைப் பற்றிய செய்தியும் ஒரு வித்தியாசமான உயர் தம்பதியினரை நேரில் சந்தித்த திருப்தியை அளித்தன.

அருப்புக்கோட்டை, பா. கண்ணன்.

◆ 'ஊனமுற்றால் என்ன? உலகுக்கே உதவலாமே!' - கட்டுரையைப் படித்து என் நெஞ்சம் நெகிழ்ந்து விட்டது! எவ்வித பந்தாவும் இல்லாமல் சீரிய முறையில் தன்னடக்கத்துடன் நடத்தப்பட்டு வரும் 'வொர்த் டிரஸ்ட்'டுக்கு நாம் ஒவ்வொருவரும் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும்!

முத்துப்பேட்டை, தஞ்சைத் தரணியன்.

◆ வ. ஆ. அ. மாவட்டத்திலேயே பிறந்து வளர்ந்தும், ''ஒரு பாரம்பரியக் கலை அழிந்து கொண்டிருக்கிறது'' என்று, கல்கவர் 'மாஜிக் பாட்' பற்றிய கட்டுரையைக் கண்ட பிறகுதான் தெரிந்தது. இந்த பாரம்பரியத் தொழில் நசிவுறாமல் இருக்க வ. ஆ. மா. கலெக்டர் உதவி செய்வதாக உறுதியளித்திருப்பது ஆறுதலான விஷயம்....

மேல்பட்டி, எல். மாறன்.

◆ பிறர்க்கு உதவி செய்வதற்காகவே ஃபோன் வைத்திருக்கும் சந்திரசேகரன் போன்றோரின் உதவிக் கரங்களை என்ன சொல்லிப் பாராட்டுவதென்றே புரியவில்லை.

மன்னார்குடி, ஜி. நீலா.

◆ பீடா கடையா, டீக்கடையா அருகருகே திறந்து போட்டிக்கு வியாபாரம் செய்ய? அ. தி. மு. க. வைச் சேர்ந்தவர் என்பதற்காகவே, மிக உயர்ந்த கல்வித் தரத்துடன் எல்லா வசதிகளுடன் இருந்த பொறியியற் கல்லூரியை மூடச் செய்யப் புதிய கல்லூரியை அப்போதைய தி. மு. க. அரசு துவக்கியது. 'டி. சி. இல்லாமல் வந்து சேருங்கள்' என ஓர் அரசு நிர்வாகமே அறிவித்ததெனில் எவ்வளவு கேவலம்? கல்வித் துறையை அரசியல் தலையீடு நாசம் செய்வதற்கு இது நல்ல உதாரணம்.

கெங்கவல்லி, பூங்குழலி.

**வட்டமேஜை**

◆ வேலூர் குறித்த பல செய்திகளைக் குறிப்பிட்ட இதழில், வேலூர் கோட்டையில் உள்ள ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் ஆலயத்தில், ஆன்மீக அன்பர்கள் முயற்சியால் சத்துவாச்சாரியிலிருந்து லிங்கம் எடுத்து வரப்பட்டு, 'ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி' விக்ரக பிரதிஷ்டை செய்த தகவல், போன்ற ஆன்மீகச் செய்திகள் இல்லாதது குறை.

காஞ்சிபுரம், வெ. ஸ்ரீநிவாஸன்.

◆ உழைப்பின் பெருமையுடன் அன்பின் வலிமையையும் உணர்த்தியது வையவனின் நெடுஞ்சாலை சிறுகதை.

திருப்பரங்குன்றம், டி. கே. சுப்ரமணியன்.

◆ 'உலகக் கோப்பையிலே என் குடியிருப்பு' படித்து இந்தியா செமி பைனலுக்குக் கூட நுழையாமல் திரும்பிய வருத்தத்தைச் சிறிதளவு மறந்து, மகிழ்ச்சியாய்ச் சிரித்தோம்.

மருங்கூர், பால. கிருஷ்ணமூர்த்தி.

◆ அமைச்சர் கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களின் விளக்கத்தை வெளியிட்டு இருப்பது 'கல்கி'யின் பெருந்தன்மையைக் காட்டுகிறது.

சேலம் - 6, பி. குமார்.

◆ கைதிகளை விடுதலை செய்யும் அதிகாரம் ஆளுநரிடம் உள்ளது என்பது அமைச்சரின் விளக்கம். ஆனால் ஆளுனர் முதல்வரின் ஆலோசனைப்படிதான் நடந்து கொள்ள வேண்டும் என்பது எல்லோரும் அறிந்ததே. எனவே, கைதிகளை விடுதலை செய்யும் அதிகாரம் முதல்வரிடம் உள்ளது என்று 'தராசு' யதார்த்த உண்மையைக் கூறியதில் தவறென்ன?

சென்னை - 14, பொ. வஜ்ரவேலு.

◆ இதுவரை மனிதாபிமான அடிப்படையில் ஆயுள் கைதிகளை விடுதலை செய்த முந்தைய முதல்வர்கள் தேசபிதா போன்ற தியாகிகளின் நினைவு நாளிலேயே செய்திருக்கின்றனரே அன்றி, தங்கள் பிறந்த நாளில் செய்யவில்லையே.

திருச்சி, தாயு. செந்தில்குமார்.

◆ 'சிவப்புப் பறவை' திரைப்படம் 'அபத்தக் களஞ்சியம்' என்பதை அறிந்து கொண்ட பின்னரும் அந்தப் படத்துக்கும் விமர்சனம் எழுதிப் பிரசுரித்துக் 'கல்கி'யின் பொன்னான அரைப் பக்கத்தைப் பாழடித்துள்ளீரே...

நரிப்பாளையம், அ. கிருஷ்ணமூர்த்தி.

◆ அபத்தமான படம் என்று அலட்சியம் செய்யாமல் சிவப்புப் பறவை பட விமர்சனத்திற்காக அரைப் பக்கத்தை ஒதுக்கி, கடுமையாக விமர்சித்திருக்கும் உமது தைரியத்தைப் பாராட்டுகிறேன்.

தூத்துக்குடி - 1, என். சம்பத்.

**The Symbol of Trust**

# WALL STREET FINANCE LTD.

(A member of the Rs. 3000 crore PATEL ROADWAYS Group)

urgently requires for its
Rs. 100 crores expansion programme

## BRANCH MANAGERS

- Bombay
- Hyderabad
- Pondicherry
- Ernakulam
- Coimbatore
- Pune
- Indore
- Trichur
- Goa
- Madras

Matured Marketing Personnel not over 45 years preferably with exposure to finance companies. Attractive remuneration package assured. Go-getters willing to be part of a fast growing set-up should apply immediately to:

Executive Director
**Wall Street Finance Limited**
21, Lakozy Mansion, Chowpatty Seaface
Bombay 400 007.



# நிலா மயக்கம்

## 1

கெட்டி மேளத்திற்காகக் கையையும், உடம்பையும் குலுக்கு குலுக்கு எனக் குலுக்கி எடுத்த தவில்காரர் கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்டார். சுருதிப் பெட்டி ஒரே ஒரு உலர்ந்த வெற்றிலையில் காய்ந்த சுண்ணாம்பைப் போட்டு வாயில் அடக்கிக் கொண்டு, தங்க விலாஸை உள்ளங்கையில் வைத்து அரக்கிக் கொண்டே, சீவாளியைப் பரிசோதித்துக் கொண்டிருந்த இன்னொரு நாதஸ்வரத்தைப் பார்த்து 'எங்களுக்குள் மட்டும்' என்கிற மாதிரி ஒரு சிரிப்பைச் சிந்தினார். 'கல்யாணம் ஜோராக நடந்திரிச்சு' என்று நாதஸ்வரம் கொஞ்சம் அபஸ்வரத்தில் தொடர்ந்தது.

தலைகளை, உடல்களை, சட்டைகளை, புடைவைகளை மீறிப் பார்வையில் பட்ட நாதஸ்வரக் கோஷ்டியை ஒரு விநாடி நேரம் கவனித்து விட்டு, நந்தினி மறுபடி பார்வையைத் தழைத்துக் கொண்டாள். கண்களில் பொங்கிய நீரைக் கட்டுப்படுத்த இயலவில்லை. எப்படித் துடைத்துக் கொள்வது என்று தெரியவில்லை. கண்டு விரலால் சுண்டினாள்.

பக்கத்தில் புதிய உறவு. நேற்று வரை யாரோ அந்நிய ஆடவன். இன்று முதல் கணவன்.


அவனுடைய மொரமொரப்பான வேஷ்டியின் நுனி அவள் இடுப்பில் உறுத்தியது. அவன் இவளைப் பார்க்கவில்லை. மை நீட்டப்பட்டு அது கலைந்த கண்களுடன் இருந்தான். கல்யாணத்திற்கு வந்திருந்த நண்பர்களைப் பார்த்து மனத்தாலோ, முகத்தாலோ சிரித்துக் கொண்டிருந்தான். மார்பில் அவனுடைய உறவுப் பெண்ணொருத்தி போட்டு விட்ட டாலர் செயின். தோள் பட்டைகளில் எல்லாம் சுருள் முடி. சிரிக்காத நேரத்தில் இறுகிப் போன உதடுகள். கொஞ்சம் அகலமான நாசி. பின்னோக்கி வாரப்பட்ட சுருள் சுருளான முடி. அவன் உட்கார்ந்திருந்த விதத்தில் ஆளுமை தெரிந்தது. இந்த கோலாகலம் எனக்காகத்தான் நடக்கிறது என்ற எண்ணம் பொதிந்திருந்தது. காலையில் டிஃபன் நேரத்தில் அவன் உறவில் யாரோ ஒருவருக்குச் சர்க்கரையற்ற காப்பி கொடுக்கப்படாததால் அவன் போட்ட கத்தலில் கோபம் தெரிந்தது. அவளுக்குப் பயமாக இருந்தது. அழுகையாய் வந்தது. அவன் உறவில் யாராவது ஒருவர் ஏதோ ஒரு மூலையிலிருந்து அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கக்கூடும். அவளுடைய கண்ணீர் மூலம் விருப்பமில்லாத குடும்ப ஒப்பந்தத்தில் அவள் மனமின்றி ஈடுபடப் போகிறாள் என்பதைத் தெரிந்து கொள்ளக்கூடும்.

நந்தினி மனக் குரங்கைக் கட்டுப்படுத்தும் கோலெது என்று அறியாமல் சுற்றிலும் பார்வையைச் சுழற்றினாள்.

அவளுக்குத் தூரத்து உறவுக்காரன் ஒருவன், வந்தவர்களைச் சாப்பாட்டிற்கு அழைத்துக் கொண்டிருந்தான். அம்மா கல்யாணத்திற்கு வருகை புரிந்திருந்த ஒரு பட்டுப் புடைவையுடன் ஒரு அங்கலாய்ப்பு காட்டிப் பேசிக் கொண்டிருந்தாள். அம்மா அங்கலாய்ப்பின்றி என்றைக்குத்தான் பேசப் போகிறாளோ?

தங்கை நிர்மலா பட்டுப் பாவாடையில் இருந்தாள். கையில் அன்னம் நகரும் சோவி. அவள் கண்கள் அகலமாய்த் திறந்திருந்தன. நந்தினி மேல் ஆணி வைத்து அறைந்த மாதிரி நிலைத்திருந்தன. அவள் கண்கள் நந்தினிக்காகப் பரிதாபப்பட்டனவா, நன்றி தெரிவித்தனவா, மகிழ்ச்சியடைந்தனவா என்று நந்தினியால் யூகிக்க முடியவில்லை. அங்கிருந்தபடியே அவள் இரு கைகளையும் குவித்து நெற்றிப் பொட்டில் வைத்து மடக்கி எடுத்தாள்.

அப்பா கையில் சீட்டுக் கம்பெனிக்காரர்கள் கொடுத்த அன்பளிப்பு ரெக்ஸின் பையுடன் ஒரு தூணில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு மொய்ப் பணத்தை வரவு வைத்துக் கொண்டிருந்தார். மூக்கில் கண்ணாடி தழைந்திருந்தது. நிறைய கைகள் என்னென்னவோ அவசரத்துடன் பணமாகவும், கவராகவும் நீண்டிருந்தன. அவருக்குச் சந்தோஷமாயிருக்கும். மண்டபத்தில்



இருக்கும் அத்தனை கைகளும் நீண்டாலும் சந்தோஷமாயிருக்கும்தான் என்று நந்தினிக்குத் தோன்றியது.

ஹூ¨ம் என்று மெல்லிய ஒலியுடன் ஒரு பெருமூச்சு நந்தினியைப் பிரிந்தது.

''மாப்பிள்ளை, பொண்ணோட கையைக் கோத்துக்கறது. எழுந்து அக்னியைச் சுத்தி வர்றது.''

''நந்தினி எழுந்திரு.''

அது ஆணையா, வேண்டுகோளா இரண்டுங்கெட்டானா? எழுந்தாள்.

**மா**லை ஆறு மணிக்கே ரிசப்ஷன் அலங்காரம் முடிந்து நந்தினி வாசலருகே இருந்த சோஃபாவில் தேவராஜ் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள். வாரி முடியப்பட்ட கொண்டை, லிப்ஸ்டிக் சிவப்பு, மயில் கழுத்து நிறப் பட்டுப் புடைவை, கண்களைக் கரை கட்டி மை. நந்தினிக்கு இவ்வளவு அதிகப்படி அலங்காரம் பரிச்சயமில்லை. இருந்தும், தேவராஜ் வேலை செய்யும் டயர் கம்பெனியிலிருந்து நிறைய பேர் வருவார்களாம். மனைவி எண்ணெய் வடிகிற முகம் என்று யாரும் சொல்லி விடக்கூடாதாம். எனவே பான் கேக். சமாதானப்படுத்திக் கொண்டாள்.

பாண்டு வாத்தியம் 'அடி ராக்கம்மாளை' முயன்று கொண்டிருந்தது. தேவராஜ் வெட்ஸ் நந்தினி, தேவராஜ் வெட்ஸ் நந்தினி என்று ஸீரியல் செட் அணைந்து அணைந்து எரிந்தது. தேவராஜுக்காக நிறைய பேர் வந்தார்கள். தேவராஜ் இது பி.எம்., இது ஸி. எம்., இது எஸ்.எம். என்று வந்தவர்களை எல்லாம் அவர்களுடைய உத்தியோகச் சுருக்கங்

சுபா

களுடன் அறிமுகப்படுத்தினான். சிரித்தாள். அவனுக்காக, அப்பாவுக்காக, நிர்மலாவுக்காக என்று வந்தவர்களை அவள் அறிமுகப்படுத்தினாள். தேவராஜ் கடமையாகச் சிரித்தான். இவளுக்கு வரும் பரிசுப் பொருட்களை நிர்மலா வாங்கி வைத்துக் கொண்டாள். நந்தினி வேலை பார்த்துக் கொண்டிருக்கும் ரம்யா டிரஸ் டிஸைனர்ஸ் கம்பெனியிலிருந்து ஏறக்குறைய அத்தனை பேரும் வந்திருந்தார்கள்.

காஸ்ட்யூம் டிஸைனராகப் பணிபுரிந்த நட்பிற்கே சினிமாத் துறையிலிருந்து இத்தனை பேர் அவளை மதித்துக் கல்யாணத்திற்கு வருவார்கள் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. வீடியோ கேமிராவிற்கு ஓய்வில்லாமல் அடுத்தடுத்து பெரிய மனிதர்களின் அணிவகுப்பு.

நந்தினி வெகு திடீரென்றுதான் அவனைப் பார்த்தாள்.

அருண்குமார்.

அவன் வருவான் என்று நந்தினி எதிர்பார்க்கவில்லை. ஏதாவது ஒரு கோயில் மண்டபத்தின் இருட்டு மூலையில் அமர்ந்து அவளால் ஏற்பட்ட காயத்தை ஆற்றிக் கொண்டிருப்பான் என்றுதான் நினைத்தாள். மாறாக அவன் வந்தது ஆச்சரியமாக இருந்தது. படபடப்பாக இருந்தது. குப் பென்று வியர்த்தது. இந்த அலங்காரத்தில் பார்த்தால் என்ன நினைத்துக் கொள்வானோ என்று தோன்றியது. அவன் இனி என்ன நினைத்துக் கொண்டால் என்ன?

''கங்கிராட்ஸ் மிஸஸ் தேவராஜ்.''

''ஓ... வாங்க... தாங்க்யூ... என்னங்க... இவர் மிஸ்டர் அருண்குமார். டைரக்டர் பாலராஜாகிட்ட அஸிஸ்டெண்ட் டைரக்டரா இருக்கார்.''

அருண்குமார் சிரித்தான். துக்கத்தையெல்லாம் சுருட்டி மனத்தின் ஏதோ ஒரு மூலையில் ஒளித்து வைத்து விட்டுச் சிரித்தான். நடிகர்களுக்குப் பயிற்சி அளிப்பவன் இல்லையா... அதனால் நடிப்பு இயல்பாக வருகிறது. தேவராஜின் கரம் பற்றிக் குலுக்கினான். வீடியோவின் ஸன்-கன் சுட்டது. ஃப்ளாஷ் மின்னியது.

அருண்குமார் எளிமையான பரிசுக் காகிதம் சுற்றப்பட்ட ஒரு பரிசுப் பொருளை நீட்டினான். அவள் கை நீளு முன் தேவராஜ் அதைப் பெற்றுக் கொண்டான். உடனே அது பின்னால் அவனுடைய பரிசுப் பொருட்களுடன் ஒன்றாய்ச் சேர்ந்தது.

நந்தினிக்கு ஏனென்று தெரியாமல் பதற்றமாய் இருந்தது. அருண்குமார் கண்ணியமானவன். இருந்தாலும் அவனளித்த பரிசுப் பொருளில் அவன் என்ன வைத்திருக்கிறானோ என்று தோன்றியது. தேவராஜ் எப்படிப்பட்டவன் என்று தெரியவில்லை. அவன் கோபத்தைப் பார்த்தால் மிச்ச வாழ்க்கையே பயமாக இருந்தது.

அருண்குமார் நகர்ந்து விட்டான். அவனுக்குப் பின்னால் வந்தவர்கள் வீடியோவிற்கும், காமிராவிற்கும் போஸ் கொடுப்பதற்காக அவளுக்குப் பக்கத்திலும், அவனுக்குப் பக்கத்திலும் நெருக்கியடித்து... நந்தினி விடுதலை உணர்வுடன் ஒரு பெருமூச்சு விட்டாள். தன்னுடைய முகமாற்றம் கவனிக்கப்பட்டதா என்று சுற்றிலும் பார்வையை இலேசாக ஓட்டினாள். அவர்களுக்கு நேர் எதிரில் ஒரு ஜோடி மர நாற்காலிகள் போடப்பட்டு, தேவராஜ் வீட்டுத் தாத்தாவும், பாட்டியும் உட்கார்ந்திருந்தார்கள். சரியான உறவுமுறை இன்னும் தெரியவில்லை. ஆனால் இந்தக் கல்யாணம் முழுக்க அவர்களைச் சேர்த்துத்தான் பார்க்க முடிந்தது அவளுக்கு. - சாப்பாட்டுக்குப் போனாலும் சரி, யாருடனாவது பேச எழுந்து போனாலும் சரி. இரண்டு பேர் கண்களிலும் வட்ட ஃப்ரேமில் கண்ணாடி. பாட்டி முகம் முழுக்க மஞ்சளால் மெழுகி இருந்தாள். நெற்றிச் சுருக்கத்தின் நடுவே விளிம்பில் பிசிறுடன் விளங்கிய பெரிய குங்குமப் பொட்டு. நரைத்த தலையில் கதம்பம். பாட்டி எப்போதும் சிரித்த முகமாக இருந்தாள். கண்களில் ஒரு குறும்பு மின்னியது. பிரமையா இல்லை உண்மையா. தாத்தா எப்போதும் சிடுசிடு முகத்துடன் தெரிந்தார். அவ்வப்போது மூக்கைச் சுளித்துக் கொண்டார். பனியனாகவும் இல்லாமல், சட்டையாகவும் இல்லாமல் ஒரு வெள்ளை மேலாடை அணிந்திருந்தார். அடிக்கடி பாட்டியிடம் எரிந்து விழுகிற குரலில் ஏதோ பேசினார். பாட்டி முகச் சிரிப்பு மாறாமல் பதில் சொன்னாள். அவர்கள் ஒருவேளை பார்த்திருப்பார்களோ?

''நந்தினி... இது என் கூட வேலை செய்யற ஜோதிராமன்.''

நந்தினி மறுபடி ஒரு செயற்கைச் சிரிப்பை அணிந்து கொண்டாள்.

இரவு. மண்டபம் ஏறக்குறைய காலியாக இருந்தது. ரொம்ப ரொம்ப நெருங்கிய சொந்தங்கள் மட்டும் சத்திரம் காலி பண்ணும் வரை கூடவே இருந்து விட்டுப் போவதற்காக, சாப்பிட்டு விட்டு கூடத்தில்



''மகாமக டூட்டிக்குப் போய் வந்ததிலிருந்து என்னைச் சுற்றி 50 ஆவிகள் நிற்பது போல கனவு வருது சார்...''

## WITH BEST COMPLIMENTS FROM THE FOLLOWING INSTITUTIONS RUN BY :

# VENKATESHA EDUCATION SOCIETY

No. 125, Armstrong Road, Shivajinagar,
BANGALORE - 560 001.

1. **M.V.J. COLLEGE OF ENGINEERING,**
   (Affiliated to Bangalore University)
   Channasandra, Kadugodi (Post)
   Near Whitefield,
   BANGALORE - 560 067. Phone : 842443, 842324

2. **M.V.J. POLYTECHNIC,**
   Channasandra, Kadugodi (Post)
   Near Whitefield,
   BANGALORE - 560 067. Phone : 842443, 842324

3. **M.V.J. COLLEGE OF EDUCATION,**
   Marathahalli,
   BANGALORE - 560 037. Phone : 568619

4. **VENKATESHA T.C.H. TRAINING COLLEGE,**
   Marathahalli,
   BANGALORE - 560 037. Phone : 568619

5. **BALACHANDAR T.C.H. TRAINING COLLEGE FOR WOMEN,**
   No. 125, Armstrong Road,
   Shivajinagar,
   BANGALORE - 560 001. Phone : 561740

6. **JAYENDRA T.C.H. TRAINING COLLEGE,**
   Koramangala,
   BANGALORE - 560 095.

**Dr. M.V. JAYARAMAN, M.A., D.Litt.,**
Founder, Secretary & Correspondent,
Venkatesha Education Society,
No. 125, Armstrong Road,
Shivajinagar,
BANGALORE - 560 001.

Phone No. :
Office : 561740
Resi. : 268996




ஃபேனுக்குக் கீழே கொத்துக் கொத்தாகத் தூங்கிக் கொண்டிருந்தன. வினோதமான குறட்டை ஒலிகள்.

நந்தினியின் அம்மா, நந்தினிக்குத் தலைவாரிக் கொண்டிருந்தாள். ரிசப்ஷன் கொண்டையெல்லாம் களைந்து விட்டு ஒரு எளிமையான தலைவாரல். அறையில் ஒரு விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. தங்கை கனவுகளுடன் அதே அறையில் ஒரு ஓரத்தில் கை கால்களைக் குறுக்கிப் படுத்திருந்தாள்.

அவள் சற்று நேரத்தில் கொண்டு சென்று விடப்பட வேண்டிய அறையில் இருந்து திடீரென்று தேவராஜின் குரல் ஓங்கி ஒலித்தது.

''யார் இங்க இந்த பெடஸ்டல் ஃபேனைக் கொண்டாந்து போட்டது?''

''நான்தான்'' என்று வெகு அடக்கக் குரல் ஒன்று பதில் அளித்தது.

''மாவு மிஷின் மாதிரி லொட லொடன்னு சத்தம். எதுக்கு இது?''

''ரூம்ல ஸீலிங் ஃபேன் இல்ல.. அதான்.''

''அதுக்காக...?''

''விசேஷம் நடக்கப் போற ரூம்பு. காத்து இல்லேன்னா நல்லா இருக்காதேன்னு...''

''காத்து இல்லாட்டி நல்லா இருக்காது தான். ராத்திரி முழுக்க லொடலொடன்னு சத்தம் இருந்தா நல்லா இருக்கும்... அப்படித்தானே?''

''இல்ல... மாத்திடறேன்.''

''மொதல்ல செய்... போ.''

அம்மா நந்தினியின் முகவாயை அவள் முகத்துப் பக்கமாய்த் திருப்பினாள்.

''என்ன இது... கண்ல தண்ணி?''

''ஒண்ணுமில்லையே...''

''இன்னும் நீ பழசையெல்லாம் நெனைச்சிட்டிருக்கே நந்தினி... அப்படித் தானே?''

''அவ்வளோ சீக்கிரம் மறந்துடுமாம்மா?''

''மறந்துடணும். ஒம் புருஷன் கோவக்காரனா இருக்கான். நீ பாட்டுக்கு மனசை ரொய்ங் ரொய்ங்னு ரவுண்டடிக்க விட்டிட்டிருந்தா, போன சுருக்குலேயே உன்னைப் பொட்டலம் கட்டித் திருப்பி அனுப்பிடுவான் புரியுதா?''

''ம்...''

''வந்திருந்தான் போல இருக்குது?''

''நீதாம்மா ஞாபகப்படுத்தற.''

அலையடித்து மோதும் நினைவுகளை அழித்து விட முடியுமா? அடித்துத் துரத்த முடியுமா?

நந்தினி மெல்ல எழுந்தாள். கால்கள் பஞ்சால் ஆன மாதிரித் தோன்றியது.

''அவனை மறந்துட்டு உள்ளே போடீ'' என்றாள் அம்மா. அவளை அடிக்கண்ணால் உற்றுப் பார்த்துக் கொண்டே.

(தொடரும்)



# இராம மந்திரம்



'ராமா' என்ற மந்திரத்தின் பொருள் மகிழ்விப்பவன் என்பதாகும். ராம மந்திரத்தை உச்சரிக்கும்பொழுது உள்ளிருக்கும் ஆனந்தத்தை மறைத்துக் கொண்டிருக்கும் திரை விலகுகிறது. உள்ளிருக்கும் ஆனந்தம் அப்பொழுது தங்குதடையின்றி வெளிப்படுகின்றது. சதா மகிழ்வுற்றிருப்பது யோகத்தின் பாங்கு ஆகும். ராம மந்திரத்தை உச்சரித்தால் ஒருவன் யோகி ஆகலாம். அப்படி ராம மந்திரத்தை உச்சரித்து வால்மீகி என்னும் மஹரிஷி யோகியானார்.

தாரக மந்திரம் என்று சொல்லப்படும் ராம மந்திரத்தைச் சிவனார் இடைவிடாது உச்சரித்து வருகிறார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் காசிக்கு சென்றிருந்தார். அங்கு அவர் ஞானக் காட்சியில் இவ்வுண்மையைக் கண்டார். காசியில் உடலை உகுக்கின்றவர்களுக்கு முக்திக்கு இடைஞ்சலாக இருக்கும் கர்மத்தை மாதா அன்னபூரணி ஒதுக்கி வைக்கின்றனர். காசியில் உடலை உகுக்கும் ஜீவனுடைய காதில் சிவனார் ராம மந்திரத்தை ஜீவன் வாங்கிக் கொண்டு கிரம முக்திக்கு போகின்றான்.

கந்த புராணத்தில் காசி காண்டத்தில் சொல்லப்பட்டுள்ள இந்நிகழ்ச்சி ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு ஞானக் காட்சியாக தென்பட்டது.

சிவனார் ஓதும் மந்திரம் ராம என்னும் தாரகப் பிரம்மமாகும். அது எத்தகையது. அது சிவனாருடைய சொருபமேயாகும். சிவனாருடைய சொருபத்திற்கு அது புறம்பானதன்று. ஹரா என்பது சிவன் அம்சம். உமா என்பது அம்பிகையின் அம்சம். சிவ சக்தியாகப் பிரிக்க முடியா அர்த்தநாரீசுவரராகச் சிவன் இருக்கின்றார். மராமரா என்று சொன்னது எப்படி ராம என்று ஆனதோ அப்படி ஹரா உமா, ஹரா உமா, ஹரா உமா என்று சதா சொல்லிக்கொண்டே இருந்தால் அது ராம என்னும் மந்திரம் அமைந்திருக்கின்றது.

எனவே, ராம என்னும் மந்திரம் தசரதுடைய காலத்தில் வந்ததன்று. அது அனாதி. சதா இயற்கையில் பிரணவத்தினுடைய அம்சமாக பிரம்மமாக இந்த ஒசை இருந்து கொண்டிருக்கிறது.

ஆதாரம்: தர்மச்சக்கரம்

---


அத்துடன் கிராண்ட் ஸ்வீட்டுகளை வாங்கி நல்லோருக்கு விநியோகம் செய்யவும்.

திருமண வைபவங்களுக்கு: சீர் முறுக்கு, சீர் முள்ளுத் தேன்குழல், தேன்குழல், சீர் அதிரசம், அப்பம், திரட்டுப்பால், பருப்புத் தேங்காய் வகைகள் முதலியவை செய்துதரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை-600 020.
போன்: 412557

# வி.ஐ.பி.க்களின் விடுமுறைக் கனவுகள்!

யாகத் தூங்கி, நிதானமாய் எழுந்து, சமைத்துச் சாப்பிட்டு என் ஒரே மகனுடன் பொழுதைச் செலவிடுவேன்... அவனை அழைத்துக் கொண்டு சிங்கப்பூர் போய் வரும் கனவும் எனக்கு உண்டு;



## லீவை வீணாக்காமல்

''உள்ளூரிலேயே இருக்கும் அம்மா வீட்டுக்குக் கூடப் போக முடிவதில்லை என்ற குறை ஒரு பக்கம் இருந்தாலும் என் வீட்டிலேயே செலவழிக்க எனக்கு நேரம் கிடைப்பதில்லையே!... அதனால் எனக்கு ஒருநாள் 'லீவு' அமைந்தால், அந்த ஒரு நாளை வீணாக்காமல் வீட்டிலேயே கழிப்பேன். நிம்மதி



முதலில் இந்த 'ஒரு நாள் கனவு' நிறை
வேறட்டும் அப்புறம் அதைப் பற்றிச் சிந்திக்கலாம்....''
- 'பேசும் படம்' மற்றும் 'ராஜம்' இதழ்
களின் இணையாசிரியர் சந்திரா ராஜசேகர்.



## குழந்தைகள் முகத்தில் மகிழ்ச்சியைக் காண...

''என் குழந்தைகளின் பள்ளியில் நடக்கும் 'ஸ்கூல் டே' 'பாரன்ட்ஸ் டே' போன்ற எந்த நிகழ்ச்சியிலும் என்னால் கலந்து கொள்ள முடிவதில்லை. எனவே எனக்கு ஒரு நாள் விடுமுறை கிடைத்தால் அது குழந்தைகளின் பள்ளி விழா நாளாக இருக்க வேண் டும் என்பதே என் கனவு. அந்த தினத்தில் அவர்கள் ஸ்கூலுக்குப் போய் மற்ற பெற்றோர்களைப் போல் விழாவில் கலந்து கொள்ளணும். என் குழந்தைகள் ஆசையும் ஏக்கமும் தீர்ந்து சந்தோஷப்படுவதைப் பார்க்கணும். திரும்பி வீடு வந்து குழந்தைகளோடு குழந்தையாய் அவர்களுடன் விளையாடணும்...'' - இப்படிச் சொல்பவர் நடிகர், டைரக்டர் கே. பாக்ய ராஜ்.



# ஜிப்பு-ஜானு




## லீவா, மூச்!

''லீவா...? மூச்! ஒரு நாளைக்குக் கூட வேலை செய்யாமல் இருக்க நினைக்கிறது என்னைப் பொறுத்தவரை தேசத் துரோகம்! ஒரு நாளைக்கு 20 - 22 மணி நேரம் உழைச்சுப் பழக்கப்பட்டுப் போனவன் நான். வீட்டிலே இருந்தால் எனக்குத் தூக்கமே வராது! தொழிற்சாலையில் மிஷின்கள் நடுவே கட்டிலைப் போட்டுக் கொண்டால், அந்தச் சப்தத்தில் நன்றாகத் தூக்கம் வரும். மிஷின் சப்தம் மாறி ஒலித்தால் உடனே தெரிந்து விடும்; எழுந்து மிஷினைச் சரி பார்ப்பேன்...'' என்கிறார் பட்டர்ஃபிளை க்ரூப் ஆஃப் கம்பெனீஸின் சேர்மன் முருகேச செட்டியார்.

## கற்பனையில்தானா கேதாரிநாத்?

சிறுமியாக இருந்த போது சுவாமி விபுலானந்தர் எழுதிய 'இமயம் சேர்ந்த காக்கை' என்ற கட்டுரையை நான் படித்தேன். அது முதலே கோதாரநாத் பத்ரிநாத் - இமய ஸ்தலங்களுக்குச் சென்று வர வேண்டும் என்று எனக்கு ஆசைக் கனவு. ஆனால் அந்த நாளில் பாதை அவ்வளவு சரியாக இல்லை; திருமணமாகிக் குழந்தைகள் பிறந்த பின் அவர்களை விட்டு விட்டும் போக முடியாத, அழைத்துக் கொண்டும் போக முடியாத இரண்டுங் கெட்டான் நிலை.

குழந்தைகள் வளர்ந்த பிறகு போகலாமென்றால் அதற்குள் நான் பேராசிரியையாகி விட்டேன். லீவு நாட்களில் தேர்வு மேற்பார்வை பணி வந்து விட்டது. இதனால் பலமுறை யாத்ரா சர்வீஸில் பதிவு செய்து கொண்ட பிறகும் போக முடியாமல் நேர்ந்து விட்டது. இப்போது போகலாமென்றால் உடல்நிலை ஒத்துழைக்க மாட்டேன் என்கிறது. டில்லியிலிருந்து கேதர் பத்ரி போய் வந்த சீனியர் ஆபீசர்கள் குழுவுடன் என்னை அனுப்ப மறுத்து விட்டார்கள் என் குடும்பத்தினர்... அப்பர் பெருமான் திருவையாற்றில் முழுகி கைலாசத்தைக் கண்டது போல் இனி நான் கற்பனையில்தான் கேதாரிநாத், பத்ரிநாத்தைக் காண முடியும் என்று நினைக்கிறேன்....'' என்று ஆதங்கப்படுபவர் டாக்டர் லலிதா காமேஸ்வரன்.

தொகுப்பு : பானுமதி ராமச்சந்திரன்

## பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | படத்தின் பெயர் : | இடைவேளை வரை கிராமத்தில் சுற்றும் கதை பின் பட்டணம் ஓடி மறுபடியும் க்ளைமாக்ஸில் கிராமத்திற்குத் திரும்புகிறது. ஒரு படத்தில் இரண்டு கதைகள்! | அ |
| 2. | கதை : | விசேஷமாய்ச் சொல்கிறார் போல் இல்லையென்றாலும் பாடல் காட்சிகளில் கொஞ்சம் பளிச். | ஆ |
| 3. | திரைக்கதை : | மற்றுமொரு இன்ஸ்டிடியூட் இயக்குனர். கொஞ்சம் முயன்றால் ஆபாவாணன் அருகில் போகலாம். | இ |
| 4. | வசனம் : | தயாரிப்பாளர் படம் பற்றிய முழுப்பொறுப்பையும் டைரக்டர் வசம் ஒப்படைத்து விட்டாற் போலிருக்கிறது. | ஈ |
| 5. | பாடல்கள் : | **கஸ்தூரி மஞ்சள்** | உ |
| 6. | இசை : | கொஞ்சம் யோசித்து விட்டுப் போங்கள். | ஊ |
| 7. | ஒளிப்பதிவு : | கொஞ்சமும் ம ன த் தி ல் பதிகிறார் போலில்லை. | எ |
| 8. | டைரக்ஷன் : | கிராமத்தில் குட்டி கலாட்டாவுடன் முறைப் பெண்ணை (ரூபிணி) திருமணம் முடித்த கோபி (புதுமுகம் ஜெகதீஷ், அலட்டாத நடிப்பு) சென்னை வந்து இசையமைப்பாளர் தேவாவின் குழுவில் பாடகராகிறார். சிலை கடத்தல் பேர்வழி, விஜயகுமார் பற்றிய ஆதாரங்களை, ஒரு நபர் இசை அரங்க வாசலில் கோபி கையில் திணித்து விட்டபின் திடுக் திருப்பங்கள். | ஏ |
| 9. | தயாரிப்பாளர் : | 'முந்நூறு நாள் சுமந்து' அம்மா பற்றிய வாலியின் பாடல் மனத்தில் பதிகிறது. மற்றவையும் வாலியாம்! | ஐ |
| 10. | ஃபைனல் கமெண்ட் : | தேனிசைத் தென்றல் தேவாவின் விரிய இசை மழை! | ஒ |

- மயிலை ஸ்ரீதரன்



# பிரகாசமான வருங்காலத்துக்கு சிறப்பான ஆரம்ப விழா.

## கருத்துக்கினிய போட்டிகள்! மனதுக்கினிய பரிசுகள்!

எங்கே திரும்பினாலும் ஸ்ரீராம் சிட்ஸ் பற்றியே பேச்சு. 'எதிர்காலம் எப்படி இருக்கும்?' என்று எங்கள் 4,00,000 சந்தாதாரர்களில் எவரிடம் வேண்டுமானாலும் கேட்டுப்பாருங்கள். 'பத்திரமாகவும் பிரகாசமாகவும் இருக்கும்' என்று நம்பிக்கையோடு நறுக்குத் தெறித்தாற்போலப் பதில் சொல்வார்கள். காரணம், உயரும் விலைவாசி இருந்த போதிலும் ஸ்ரீராம் சிட்ஸின் துணையுடன் எத்தனையோ சூழ்நிலைகளைச் சமாளித்துத் தங்கள் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றியவர்கள் அவர்கள்.

திருமணம், மேற்படிப்பு, சொந்தவீடு, சொந்த வாகனம்... இப்படி வாழ்க்கையின் எல்லா நல்ல அம்சங்களையுமே அவர்களால் அடைய முடிந்திருக்கிறது.

நீங்களும் அவற்றை அடைய முடியும். ஸ்ரீராம் சிட்ஸில் சேருவது அதற்குச் சிறப்பான ஆரம்பமாக அமையும். அது மட்டுமல்ல. நீங்கள் சிட்டுச் சேருவதை மறக்க முடியாத நிகழ்ச்சியாக்க அற்புதமான பரிசுகளும் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் போட்டிகள். ஒவ்வொரு நாளும் பரிசுகள். இந்த 10 நாட்களில் நீங்கள் வெல்லுவதற்காக 2100 பரிசுகள்.

வருங்காலத்தில் நீங்கள் பெறக்கூடிய எல்லா வளங்களையும் எண்ணிப் பாருங்கள். அவற்றை அடைவதற்குத் தயாராகுங்கள். ஸ்ரீராம் சிட்ஸுக்கு வாருங்கள்.

**ரூ. 75,000 வரை மதிப்புள்ள சீட்டுகளை எடுப்பவர்களுக்கு பொதுத்துறை, தனியார் துறை, அரசு அல்லது அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனங்களில் பணியாற்றும் 3 பேர் உத்திரவாதம் அளித்தாலே போதும். வேலையிலிருக்கும் பெண் சந்தாதாரர் ரூ.15,000 வரை மதிப்புள்ள சீட்டுகளை எடுக்கும் போது, அவருடைய கணவருடைய உத்திரவாதமே போதுமானது.**

| சீட்டு மதிப்பு | சந்தாதாரர் பரிசு |
|---|---|
| 1. 200 x 40 = 8,000 | ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ப்ரேக்ஃபாஸ்ட் செட் |
| 2. 250 x 40 = 10,000 | 4 கிராம் வெள்ளிப் பதக்கம் |
| 3. 500 x 30 = 15,000 | ஹால்மார்க் குக் அண்ட் சர்வ் பான் |
| 4. 625 x 40 = 25,000 | 'விட்வேர்' சுடாம் |
| 5. 500 x 60 = 30,000 | மில்டன் ஸ்லிக் தெர்மோ லஞ்ச் பாக்ஸ் |
| 6. 1,000 x 50 = 50,000 | காஸி காப்பர் பாட்டம் கிரிடில் |
| 7. 1,250 x 60 = 75,000 | காஸி காப்பர் பாட்டம் டோப், மூடியுடன் |
| 8. 1,000 x 100 / 2,500 x 40 = 1,00,000 | ஹால்மார்க் ட்யூரோதெர்ம் குக்வேர் |
| 9. 4,000 x 50 = 2,00,000 | 25 கிராம் வெள்ளிக் காசு (இரண்டு) |
| 10. 10,000 x 30 = 3,00,000 | 2 கிராம் தங்கப் பதக்கம் |
| 11. 20,000 x 50 = 10,00,000 | 8 கிராம் தங்கப் பதக்கம் |

நாளுமுடிக்கப்பட்டவைப் தவிர

| அறிமுகப்படுத்துவோர் பரிசு |
|---|
| 1. ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் ஐஸ்கிரீம் கப்புகள், ஸ்பூன்களுடன் (இரண்டு) |
| 2. மில்டன் சூப்பர் கப்புகள் |
| 3. காஸி ஸ்வீட் டிரே (இரண்டு) |
| 4. ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் சர்விஸ் பௌல் |
| 5. மில்டன் ஒனிக்ஸ் டம்ப் ஜக் |
| 6. காஸி ஸில்வர் வாடில் |
| 7. காஸி மில்க் ஜாடி |
| 8. டிப்மைட் மகாராஜா செட் |
| 9. 20 கிராம் வெள்ளிக் காசு |
| 10. 20 கிராம் வெள்ளிக் காசு |
| 11. நஸின் மோஜெலிசா பிளாஸ்க் |

ALL INDIA DEPOSIT MOBILISATION DRIVE TILL 30.4.92

போட்டிகளும் பரிசுகளும் இணைந்து வழங்குவோர்: ஸ்ரீவைட ஜாடிகள் & பாட்டில்கள்

SHRIRAM GROUP COMPANIES MADRAS

**ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மென்ட்ஸ் பி.லிமிடெட்.**

நிர்வாக அலுவலகம்: 'சுப்பிரமணியம் பில்டிங்' 1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை-600 002. போன்: 474451/475536/470400/473932.

*ஸ்ரீராம் சிட்ஸ் — பலருக்கும் பல வகையிலும் பலன்.*



ஸ்ரீராம்
சீட்டு விழா
1992 4-13 ஏப்ரல்
சந்தாதாரர் பரிசு
அறிமுகப்படுத்துவோர் பரிசு
ADWAVE/SCI/4376 TAM A 1

# சிவகாமியின் சபதம்

## முன்கதைச் சுருக்கம்

"காஞ்சி சுந்தரி காவலின்றி இருக்கிறாள்; வழியில் எங்கும் தங்காமல் நேரே வரவும்" என்ற ஒற்றன் நாகநந்தியின் ஓலை வாதாபி புலிகேசிக்குக் கிடைத்திருந்தால், காஞ்சியும் அத்துடன் பல்லவப் பேரரசும் சளுக்க சாம்ராஜ்யத்துடன் இணைந்திருக்கும். அவ்வாறு நேராமல் நாகநந்தியின் சூழ்ச்சிகளை எதிர் சூழ்ச்சிகள் செய்து முறியடித்து, புலிகேசியை வட பெண்ணைக் கரையிலேயே பலகாலம் தாமதிக்கச் செய்து காஞ்சிக் கோட்டையைப் பலப்படுத்தினார் பல்லவ சக்கரவர்த்தி மகேந்திர வர்மர்.

அவர் மகன், மாமல்ல நரசிம்ம பல்லவனுக்கும் சிற்பி மகளும் ஆடலரசியுமான சிவகாமிக்கும் இடையில் காதல் மலர்ந்து வலுப்பெற்று அசைக்க முடியாததாகிவிட்டிருந்தது.

இதே நேரத்தில் புலிகேசியின் ஒற்றனாக வந்த புத்த பிக்ஷு நாகநந்திக்கும் சிவகாமியின் கலைத்திறன் மீது மோகம் ஏற்பட்டது. எதிரி என்ற காரணத்துடன் பொறாமையும் சேர, மாமல்லனை மறைந்திருந்து கொலை செய்யவும் முயன்றார் புத்த பிக்ஷு. தெய்வ அருளாலும் பல்லவ ஒற்றர்களின் திறமையாலும் தப்பினார் மாமல்லர்.

மகேந்திர பல்லவர், நாட்டின் எதிர்காலத்தை உத்தேசித்து, சிவகாமி தன் காதலைத் தியாகம் செய்ய வேண்டும் என்று கோரினார். சிவகாமி உறுதியாக மறுத்து விட்டாள்.

வடபெண்ணைக் கரையிலிருந்து பின் வாங்கிய பல்லவ சேனை காஞ்சிக் கோட்டைக்குள் புக, காஞ்சி முற்றுகை தொடங்கியது. பல காலம் முற்றுகை நடத்தியும் கோட்டையைப் பிடிக்க முடியாத புலிகேசி சமாதான தூது அனுப்பினான். அவனை நம்பி, கோட்டைக்குள் அழைத்து விருந்துபசாரம் செய்தார் மகேந்திரர். சிவகாமி புலிகேசி முன்னிலையில் ஆட அழைக்கப்பட்டாள்.

ஒரு பலவீனமான கணத்தில், மகேந்திரர் தாம் புலிகேசியைத் தாமதப்படுத்தச் செய்த சூழ்ச்சிகளைச் சொல்லிவிட, புலிகேசி தான் ஏமாந்ததை எண்ணி ஆத்திரம் அடைந்தான். விடைபெற்று வாதாபி திரும்புகையில் பல்லவ கலைச் செல்வங்களை அழிக்கும்படியும், சிற்பிகளை அங்கஹீனப்படுத்தும்படியும் இளம் பெண்களைச் சிறைப்படுத்தும்படியும் தம் படைகளுக்குக் கட்டளையிட்டான்.

தந்தை ஆயனர் சிற்பியும் மகள் சிவகாமியும் சளுக்க வீரர்களிடம் சிக்கிக் கொண்டு தவித்த நேரத்தில் கலைக் காதலரான நாகநந்தி உதவினார். ஆயனரின் உயிர் காப்பாற்றப்பட்டது. ஆனால் சிவகாமி கைப்பற்றப்பட்டு வாதாபிக்கு அழைத்துச் செல்லப்படுவதை அவர் தடுக்கவில்லை.

ஓர் அரண்மனையில் சிறைவைக்கப்பட்டாள் சிவகாமி. வாதாபி வீதிகளில் சுதந்திரமாக உலா வரும் உரிமையைப் புலிகேசி சிவகாமிக்கு அளித்தான். ஒரு நாள் வாதாபி நாற்சந்தியில், அடிமைகளாக இழுத்து வரப்பட்ட பல்லவக் குடிமக்கள் சாட்டையால் அடிக்கப்படுவதைக் கண்டாள் சிவகாமி. அந்தக் கொடுமை நிறுத்தப்பட வேண்டுமெனில் தான் நாற்சந்திகளில் நடனமாட வேண்டும் எனப் புலிகேசி நிபந்தனை விதித்திருப்பதை அறிந்தாள். பல்லவ மக்களைக் காக்க அன்று முதல் தினமும் ஒரு நாற்சந்தியில் நடனமாடினாள் சிவகாமி.

அப்படியொரு நாள் ஆடுகையில் புத்த பிக்ஷு நாகநந்தி அங்கே வந்து அக் காட்சியைக் கண்டார். தாம் வேங்கி நாட்டுக்குச் சென்றிருந்த போது புலிகேசி இப்படி சிவகாமியையும் அவள் கலையையும் அவமானப்படுத்தியிருப்பதைக் கண்டு வேதனைப்பட்டார். அன்று இரவு, சிவகாமி தங்கியிருந்த அரண்மனைக்குச் சென்ற புத்த பிக்ஷு, அவளுக்கு இத்தகைய அவமானம் நேர்ந்ததற்காக மன்னிப்புக் கேட்டார். சிவகாமி அவர் உண்மையில் யார் என்று வினவ, தாம் புலிகேசியின் சகோதரன் என்ற ரகசியத்தை வெளியிட்டார் நாகநந்தி. சிவகாமியை விடுவித்துத் திரும்பவும் பல்லவ நாட்டுக்கே அனுப்பப் புலிகேசியின் அனுமதியுடன் வந்திருப்பதாகவும் சொன்னார்.

சிவகாமி திரும்பிச் செல்ல மறுத்தாள்.

தன் இதயம் கவர்ந்த வீர மாமல்லர் படையெடுத்து வந்து வாதாபியை அழித்துத் தரைமட்டமாக்கி அங்கு தமிழக மக்களுக்கும் தனக்கும் நேர்ந்த அவமானங்களுக்குப் பழிக்குப் பழி வாங்கின பிறகே அங்கிருந்து கிளம்பப் போவதாக வீர சபதம் செய்தாள் சிவகாமி.

சிவகாமியின் சபதம் அவளை இழக்க விரும்பாத

பிக்ஷுவின் அதரங்களில் வெற்றிப் புன்னகையை வர வழைத்தது.

சிவகாமியின் நாற்சந்தி நடனத்தைப் பிக்ஷு கண்ட அதே நேரத்தில் பல்லவ ஒற்றர் தலைவன் சத்ருக்னனும் பார்த்தான். சிவகாமியை மீட்டுச் செல்ல மாறு வேடம் தரித்து வந்து, வாதாபியை அடுத்து, காட்டில் தங்கியிருந்த இளவரசர் மாமல்லர், பல்லவப் படைத் தளபதி பரஞ்சோதி, ஒற்றன் குண்டோதரன், ரத சாரதி கண்ணபிரான் ஆகியோரிடம் சென்று, தான் பார்த்தவற்றைக் கூறினான் சத்ருக்னன். புத்த பிக்ஷு நாகநந்தியையும் தான் கண்டதாக அவன் குறிப்பிட, மாமல்லர் மனம் பதறினார்.

## ஐம்பத்திரண்டாம் அத்தியாயம்

# வளையற்காரன்

நாகநந்தி என்ற பெயரைக் கேட்டவுடனே அங்கிருந்தவர் அனைவருக்கும் தூக்கி வாரிப்போட்டது.

மாமல்லர், ''ஆஹா! புத்த பிக்ஷுவா? அப்படியானால் குண்டோதரன் கூறிய செய்தி பொய்யா?'' என்று சொல்லிய வண்ணம் குண்டோதரனை நோக்கினார்.

''இல்லை, பிரபு! குண்டோதரன் கூறிய செய்தி உண்மைதான். வாதாபிக்கு வரும் வழியில் பிக்ஷு வேங்கி நகரத்துக்குத்தான் போனார். துரதிர்ஷ்டவசமாக நேற்றுத் திரும்பி வந்துவிட்டார். அவருடைய வரவினால் நம்முடைய காரியம் ஒன்றுக்குப் பத்து மடங்கு கடினமாகி விட்டது. இன்னும் இரண்டு நாளைக்கு முன்னால் மட்டும் நாம் வந்திருந்தால்?....'' என்றான் சத்ருக்னன்.

''பிக்ஷு நேற்றுத்தான் திரும்பி வந்தாரா? உனக்கு எப்படித் தெரியும், சத்ருக்னா!'' என்று சேனாபதி பரஞ்சோதி வினவினார்.

நகரமெல்லாம் அதைப்பற்றித்தான் பேச்சு, தளபதி! ஜனங்கள் பேசிக் கொண்டதிலிருந்துதான் தெரிந்து கொண்டேன். புலிகேசியின் சகோதரன் விஷ்ணுவர்த்தனன் சென்ற வருஷம் வேங்கி மன்னனாக முடிசூட்டிக் கொண்டானல்லவா? எந்த வேளையில் மகுடாபிஷேகம் செய்து கொண்டானோ, தெரியவில்லை; சில நாளைக்கு முன்பு அவன் மாண்டு போனான். அவனுடைய மனைவியையும் ஆறு மாதத்துக் கைக்குழந்தையையும் அழைத்துக்கொண்டு நாகநந்தி நேற்றுத் திரும்பி வந்தாராம்'' என்று சத்ருக்னன் கூறினான்.

''சளுக்க சாம்ராஜ்யத்தின் அஸ்தமனம் நெருங்கி விட்டது என்று பல்லவேந்திரர் கூறியது வீண்போகவில்லை. விஷ்ணுவர்த்தனன் எப்படி இறந்தானாம்?'' என்று பரஞ்சோதி கேட்டார்.

''விஷ்ணுவர்த்தனன் வேங்கிப் படைகளை முழுவதும் நாசம் செய்ய முடியவில்லை. நம்முடைய சக்கரவர்த்தி சொல்லி அனுப்பியிருந்தபடி வேங்கிப் படைகள் பின் வாங்கிச் சென்று கிருஷ்ணை கோதாவரி நதிக் கரைக் காடுகளில் ஒளிந்து கொண்டிருந்தன. விஷ்ணுவர்த்தனன் முடி சூட்டிக் கொண்ட பிறகு நாடெங்கும் கலகங்கள் மூண்டன. ஒளிந்திருந்த படை வீரர்கள் அங்கங்கே திடீர் திடீரென்று கிளம்பித் தாக்கினார்கள். கலகத்தைத்தானே அடக்கப் போவதாக விருது கூறிக் கொண்டு விஷ்ணுவர்த்தனன் கிளம்பினான். ஒரு சண்டையில் படுகாயமடைந்து விழுந்தான். நாடெங்கும் கலகங்கள் அதிகமாயின. இந்த சமயத்தில்தான் நாகநந்தியும் அங்கே போய்ச் சேர்ந்தார். விஷ்ணுவின் மனைவியையும் குழந்தையையும் கொண்டு வந்து சேர்த்தார். விஷ்ணுவர்த்தனன் மனைவி துர்விநீதனுடைய மகள் என்பது தங்களுக்குத் தெரியுமல்லவா, பிரபு?''

''அதைப்பற்றியெல்லாம் இப்போது என்ன கவலை, சத்ருக்னா? நாம் வந்த காரியத்தைப் பற்றிச் சொல்லாமல் ஊர்க் கதையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறாயே? மேலே நடந்ததைச் சொல்லு!'' என்றார் மாமல்லர்.

''நாகநந்தி பிக்ஷுவைப் பார்த்து வியப்பும் திகைப்பும் அடைந்த சிவகாமி அம்மை, சீக்கிரத்தில் சமாளித்துக் கொண்டு பல்லக்கில் போய் ஏறினார். பல்லக்கைச் சற்றுத் தூரம் நான் தொடர்ந்து சென்றேன். ஆரவாரமின்றி அமைதி குடிகொண்டிருந்த ஒரு வீதிக்குள் பல்லக்குச் சென்று அழகான மாளிகை ஒன்றின் வாசலில் நின்றது. சிவகாமி அம்மை பல்லக்கிலிருந்து இறங்கி அந்த மாளிகைக்குள்ளே போனார். வீதி முனையிலேயே நான் கொஞ்ச நேரம் நின்று என்ன செய்யலாம் என்று யோசித்தேன். பிறகு மாளிகை வாசலை நெருங்கினேன்.

அமரர் கல்கி



**காலம்**

**காலத்தை வீணாக்குவதைப் போன்ற சுலபமான காரியம் எதுவுமில்லை. அப்படி வீணாக்காமல் இருப்பதைப் போன்ற சிரமமான காரியமும் எதுவும் இல்லை.**

**- ஹென்றி போர்டு**

**ஆவடி சு. கோபி**

காவலாளிகள் இருவர் அங்கு இருந்தார்கள். அவர்களைப் பார்த்து, 'காஞ்சி நகரத்து நாட்டியப் பெண் இருப்பது இந்த வீட்டிலே தானே?' என்று கேட்டேன். ''ஆமாம்! எதற்காகக் கேட்கிறாய்?' என்றார்கள். 'நான் வளைச் செட்டி; அழகான வளைகள் கொண்டு வந்திருக்கிறேன். அம்மையிடம் காட்ட வேண்டும்' என்றேன். 'இரவு நேரத்தில் இந்த வீட்டுக்குள் யாரும் புகுவதற்கு அனுமதியில்லை, நாளைப் பகலில் வா!' என்றார்கள். சற்று நேரம் அவர்களுடன் வம்பு பேசிப் பல விஷயங்கள் தெரிந்து கொண்டேன். சிவகாமி அம்மையும், ஒரு தோழியும் சமையற்காரியும் மட்டும் அந்த வீட்டுக்குள் இருப்பதாகவும், வேறு யாரும் இல்லை, வருவதுமில்லையென்பதாகவும் தெரிந்து கொண்டேன். ஒரே ஒரு தடவை புலிகேசிச் சக்கர்வர்த்தி அங்கு வந்து இராஜ சபையில் நடனம் ஆடும்படி கேட்டாராம். அம்மை அதை மறுத்து விட்டபடியால் இம்மாதிரி வாதாபி வீதிகளில் தினம் நாட்டியமாடும்படி தண்டனை விதித்தாராம். இதை அறிந்ததும் எனக்குக் கோபம் கோபமாய் வந்தது. மனத்திற்குள்ளே அந்தக் கொடுமனம் படைத்த ராட்சதப் பதரைத் திட்டிக்கொண்டு கிளம்பினேன். வீதி முனைக்குச் சென்றதும் ஒரு பக்கத்திலிருந்து தீவர்த்திப் பிடித்தகாவலர்கள்புடைசூழ ஒரு பல்லக்கு வருவதைக் கண்டேன். ஒரு வீட்டுத் திண்ணையில் தூணின் பின்னால் ஒளிந்து கொண்டு பல்லக்கில் வருவது யார் என்று கவனித்தேன். நான் எதிர் பார்த்தது போலவே நாகநந்தி பிக்ஷுதான் பல்லக்கில் இருந்தார்.....''

அப்போது நறநறவென்று, மாமல்லர் பல்லைக் கடிக்கும் சத்தம் கேட்டது. சேனாபதி பரஞ்சோதி குறுக்கிட்டு. ''சத்ருக்னா! ஏன் கதையை வளர்த்திக் கொண்டே போகிறாய்? அம்மையைச் சந்தித்துப் பேசினாயா? ஏதாவது செய்தி உண்டா? அதைச் சொல்லு!'' என்றார்.

பரஞ்சோதியைச் சிறிது கோபமாக மாமல்லர்பார்த்துவிட்டு, ''சத்ருக்னா! எதையும் விடவேண்டாம், நாகநந்தி எங்கே போனார்? சிவகாமியின் வீட்டுக்குள்ளேயா?'' என்று வினவினார்.

''ஆம், பிரபு! அம்மையின் மாளிகைக்குள்தான் போனார். ஒருநாழிகை நேரம் வீட்டுக்குள்ளே இருந்துவிட்டு வெளியேறினார். அந்த ஒரு நாழிகை நேரமும் நானும் அந்த வீதியிலேயே சுற்றி வந்து கொண்டிருந்தேன். ஒரு தடவை வீட்டு வாசலுக்கு அருகில் சென்று காவலரில் ஒருவனிடம், 'சமீபத்தில் சத்திரம் சாவடி எங்கேயாவது இருக்கிறதா?' என்று விசாரித்தேன். அப்போது உள்ளே சிவகாமி அம்மை புத்த பிக்ஷுவின் தலையில் நெருப்புத் தணலைக் கொட்டிக் கொண்டிருந்தார். அவ்வளவு கோபமாக அவர் பேசியது என் காதில் விழுந்தது. அதில் எனக்குப் பரம திருப்தி ஏற்பட்டது.....''

''இங்கே எல்லோருக்கும் அப்படித்தான்!'' என்றான் குண்டோதரன்.

''அதே வீதியில் இருந்த ஒரு சத்திரத்தில் படுத்து இரவு நிம்மதியாகத் தூங்கினேன். இன்று பொழுது விடிந்து சற்று நேரம் ஆனதும் அம்மையின் மாளிகைக்குப் போனேன். என்னைப் பார்த்ததும் சிவகாமி அம்மைக்கு ஒரே வியப்பாய்ப் போய் விட்டது. பக்கத்திலிருந்த தோழியை ஏதோ காரியமாக உள்ளே போகச் சொல்லிவிட்டு, ''சத்ருக்னா! இது என்ன? காஞ்சிக்கு நீ போகவில்லையா? என்னைப் பின் தொடர்ந்தே வந்துவிட்டாயா?'' என்று கேட்டார்.

'இல்லை, அம்மணி! காஞ்சிக்குப் போய் மாமல்லரிடம் தாங்கள் கூறிய செய்தியைச் சொன்னேன். அவரும் வந்திருக்கிறார். சேனாபதியும் வந்திருக்கிறார்!' என்றேன்.

இதைக் கேட்டதும் அம்மை உற்சாகமும் பரபரப்பும் அடைந்து, 'சைனியம் எங்கே இறங்கியிருக்கிறது?' என்று கேட்டார்.

சைனியத்தோடு வரவில்லையென்றும், மாமல்லரோடு சேனாபதியும் கண்ணபிரானும் வந்திருக்கிறார்கள் என்றும், கோட்டைக்கு வெளியே இந்த மலையடிவாரத்தில் இறங்கியிருக்கிறார்கள் என்றும் தெரிவித்

**''பிரபு! பல வருஷங்களுக்கு முன்னால், பல யுகங்களுக்கு முன்னால் என்னை இளவரசர் ஒருவர் காதலிப்பதாகச் சொன்னார்...''**



தேன். நாளை அமாவாசை இரவில் எல்லோரும் வருகிறோம் என்றும், தோழிப் பெண்ணை எங்கேயாவது அனுப்பிவிட்டு நம்முடன் புறப்பட ஆயத்தமாயிருக்க வேண்டும் என்றும் சொல்லி விட்டு வந்தேன்!'' என்று சத்ருக்னன் முடித்தான்.

''சத்ருக்னா! சிவகாமி முடிவாக என்ன சொன்னாள்? ஏதேனும் செய்தி உண்டா?'' என்று மாமல்லர் கேட்டார்.

''ஒன்றுமில்லை, பிரபு! அம்மை அதிகமாகப் பேசாமல் அமாவாசை இரவு நம்மை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகச் சொல்லி எனக்கு விடை கொடுத்தார். அவ்வளவுதான்!''

இதைக் கேட்ட மாமல்லர் சிந்தனையில் ஆழ்ந்தார்.

## ஐம்பத்து மூன்றாம் அத்தியாயம்

# சந்தேகம்

அமாவாசை அன்று இரவு சிவகாமி தன்னுடைய மாளிகையில் தன்னந்தனியாக உட்கார்ந்திருந்தாள்.

அவளுக்குத் துணையாயிருந்த தோழி நோய்வாய்ப்பட்டிருந்த தன்னுடைய அன்னையைப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தமையால், அதை வியாஜமாகக் கொண்டு அன்றிரவு அவளை வீட்டுக்கு அனுப்பி விட்டாள்.

இப்போது நுந்தா விளக்கு ஒன்றே சிவகாமிக்குத் துணையாக எரிந்து கொண்டிருந்தது. அவளுடைய உள்ளமோ பல்வேறு சிந்தனைகளில் ஆழ்ந்திருந்தது.

மாமல்லர் வரப்போகிறார் என்று எண்ணியபோதெல்லாம் அவளுடைய இருதயம். மேலெழும்பி வந்து தொண்டையை அடைத்துக் கொண்டது. ஆத்திரமும் ஆங்காரமும் ஒரு பக்கத்தில் பொங்கின. துக்கமும் ஆர்வமும் இன்னொரு புறத்தில் பெருகின.

மாமல்லரிடம் வைத்த காதலினாலல்லவா இந்தத் துன்பங்களுக்கெல்லாம் ஆளானோம் என்ற எண்ணம் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. தனது நிலைமைக்குகந்த சிற்பியின் மகன் ஒருவனைக் காதலித்துக் கலியாணம் செய்து கொண்டிருந்தால், தான் இந்த அவகேட்டுக்கெல்லாம் ஆளாகியிருக்க வேண்டியதில்லையல்லவா?

காடு சூழ்ந்த தனி வீட்டில் வசித்த தன்னை மாமல்லர் ஏன் தேடி வந்து இப்படிப் பித்துப் பிடிக்கச் செய்ய வேண்டும்? அப்படிச் செய்தவர் மண்டபப் பட்டுக் கிராமத்தில் ஏன் தன்னைத் தன்னந் தனியாக விட்டு விட்டுப் போக வேண்டும்? மாமல்லர் மேலுள்ள ஆசை காரணமாகத் தானே காஞ்சிக்கு அவள் வர நேர்ந்தது! மறுபடியும் அவருடைய காதல் காரணமாகத் தானே கோட்டையிலிருந்து சுரங்க வழியாக வெளிவர நேர்ந்தது! ஆகா! தன்னுடைய துன்பங்களுக்கெல்லாம் காரணம் அவர் தான்!

இப்படியாக மாமல்லரிடம் ஒருபுறம் ஆத்திரத்தை வளர்த்துக் கொண்டு வந்தாள் என்றாலும், நேரம் ஆக ஆக, 'ஐயோ! அவர் வரவில்லையே?' என்ற ஏக்கமும் ஒருபுறம் அதிகமாகி வந்தது.

அர்த்த ராத்திரியில் சிவகாமி ஆழ்ந்த சிந்தனையிலிருந்த போது திடீரென்று அவள் எதிரில் தாடியும் மீசையுமான முகத் தோற்றமுடைய இருவரைக் கண்டதும் திகிலடைந்தவளாய் நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

ஆனாலும் அப்படி வந்தவர்களுடைய முகத்தோற்றம் பயங்கரத்தை விளைவிப்பதாக இல்லை. எப்போதோ பார்த்த முகங்களாகவும் தோன்றின.

''யார் நீங்கள்? இந்த நள்ளிரவு வேளையில் எதற்காக இங்கே வந்தீர்கள்?'' என்று அதிகாரத் தொனியில் கேட்டாள்.

''சிவகாமி! என்னைத் தெரியவில்லையா?'' என்று மாமல்லரின் குரல் கேட்டதும், சிவகாமியின் முகத்தில் வியப்புடன் கூடிய புன்னகை மலர்ந்தது.

எத்தனையோ காலத்துக்குப் பிறகு சிவகாமியின் முகத்தில் தோன்றிய அந்தப் புன்னகை அவளுடைய முகத்திற்கு எல்லையற்ற வனப்பை அளித்தது.

ஆனால், அந்த முகமலர்ச்சியானது மாமல்லரின் உள்ளத்தில் மகிழ்ச்சியை உண்டாக்கவில்லை, 'ஆ! இவள் இவ்விடம் உற்சாகமாகத்தான் இருக்கிறாள்!' என்ற எண்ணம் அவர் அகத்தில் உண்டாகி முகம் சுருங்கும்படிச் செய்தது.

''பிரபு! தாங்கள்தானா?'' என்று உணர்ச்சியினால் கம்மிய குரலில் கேட்டுக் கொண்டு சிவகாமி எழுந்தாள்.

''ஆமாம், நான்தான்! வாதாபிச் சக்கரவர்த்தியின் மாளிகையில் வைபோகமாக வாழும்போது பழைய மனிதர்களைப் பற்றி எப்படி ஞாபகம் இருக்கும்?'' என்று மாமல்லர் கடுமையான குரலில் கூறினார்.

அந்தக் கொடிய மொழிகளைக் கேட்ட

சிவகாமி இக்பிரமையடைந்தவள் போல் மாமல்லரைப் பார்த்தது பார்த்தபடி நின் றாள். இவர் உண்மையில் மாமல்லர்தானா அல்லது வேஷதாரியா என்று அவளுக்கு ஐயம் தோன்றி விட்டது.

இப்படி ஒருவரை யொருவர் வெறித் துப் பார்த்துக் கொண்டு சும்மா நின்றதைக் கவனித்த தளபதி பரஞ்சோதி, அந்தச் சந்தர்ப் பத்தில் தாம் அங்கிருப்பது அநுசிதம் என்பதை உணர்ந்தார். உடனே மாமல்லரின் காதருகில் வந்து, ''பிரபு! காலதாமதம் செய்யக்கூடாது! அதிக நேரம் நமக்கில்லை'' என்று சொல்லி விட்டு, அப்பால் முன் கட்டுக்குச் சென்றார்.

பரஞ்சோதி மறைந்த பிறகு மாமல்லர், ''ஓகோ! இன்னும் ஞாபகம் வரவில்லை போலிருக்கிறது. போனால் போகட்டும், உன் தந்தை ஆயனரையாவது ஞாபகமிருக் கிறதா, சிவகாமி? ஆடல் பாடல் விநோதங் களில் அவரையும் மறந்து விட்டாயா?'' என் றார்.

சிவகாமியின் புருவங்கள் நெறிந்தன. கோபத்தினால் சிவந்த கண்கள் அகல விரிந்தன; இதழ்கள் துடித்தன.

உள்ளத்தில் பொங்கி வந்த கோபத்தை யெல்லாம் பெரு முயற்சி செய்து அடக்கிக் கொண்டு, ''இளவரசே! என் தந்தை சௌக் கியமாயிருக்கிறாரா? எங்கே இருக்கிறார்? எப்படி இருக்கிறார்?'' என்று கேட்டாள்.

''ஆம்; ஆயனர் சௌக்கியமாயிருக் கிறார். கால்களில் ஒன்று முறிந்து, ஏக புதல்வியை இழந்தவர் எவ்வளவு சௌக் கியமாயிருக்கலாமோ, அவ்வளவு சௌக் கியமாயிருக்கிறார். 'சிவகாமி எங்கே? என் அருமை மகள் எங்கே?' என்று வந்தவர் போனவரையெல்லாம் கேட்டுக் கொண் டிருக்கிறார். சிவகாமி புறப்படு, போக லாம்!''

சிவகாமியின் கண்களில் நீர் ததும்பியது. ஆயினும் அவள் மாமல்லருடன் புறப்படு வதற்கு யத்தனம் செய்வதாகக் காண வில்லை.

''சிவகாமி! ஏன் இப்படி நிற்கிறாய்!

## அருள்வாக்கு

மனிதப் பிறவி எடுத்ததன் பயனே அன்பு செலுத்துவதுதான். அன்பு செலுத்துவதில் உள்ள ஆனந்தம் வேறு எதிலும் இல்லை. தனக்கென்று பொருள் சேர்ப்பதில், புகழ் சேர்ப்பதில், அலங்காரம் செய்து கொள்வதில் தாற்காலிகமாக இன்பம் கிட்டலாம். ஆனாலும் இவற்றில் உள்ளம் நிறைவு பெறுவதில்லை. உள்ளத்துக்கு நிறைவான ஆனந்தம் அன்பு செலுத்துவதி லேயே உண்டாகிறது. அன்பு செலுத்தும் போது நமக்கு எத்தனை கஷ்டம் வந்தாலும், தேக சிரமம் வந்தாலும், பணம் செலவானாலும் இதெல்லாம் தெரிவதேயில்லை. அன்பின் ஆனந்தமும் நிறைவுமே இந்தத் துன்பத் துக்கெல்லாம் மேலாகத் தெரிகிறது. அன்பு செலுத்தாத வாழ்க்கை வியர்த்தமே.

அன்பு செலுத்தும் போது துன்பமே தெரிவ தில்லை என்றேன். ஆனால் கடைசியில் ஒரு நாள் அன்பு செலுத்தப்பட்ட வஸ்துவே நமக்குப் பெரிய துன்பத்தைக் கொடுத்து விடுகிறது. நாம் ஒருவரிடம் அன்பு வைக்கிறோம். கடைசியில் ஒரு நாள் அவர் நம்மை விட்டுப் போயே போய் விடுகிறார். அல்லது நாமாவது அவரை விட்டு ஒரு நாள் போகத்தான் போகிறோம்.

அன்பின் முடிவான பலன் துன்பம்தானா என்று பெரிய சலிப்பு உண்டாகி விடுகிறது.

அன்பு செய்தாலும் முடிவில் துன்பம்; அன்பு இல்லாமல் இருந்தாலோ வாழ்க்கையில் ருசியே இல்லை. இப்படியானால் என்ன செய் வது? மாறாத, மாளாத அன்பை உண்டாக்கிக் கொள்வதே வழி. நம்முடைய அன்புக்குரிய வஸ்து நம்மை விட்டு என்றும் பிரிந்து போகாத தாக இருக்க வேண்டும். அப்படி ஒரு வஸ்து இருந்து அதனிடம் அன்பை வைத்து விட்டால் நாமும் அதுவும் ஒரு நாளும் பிரியப் போவ தில்லை. எப்போதும் ஆனந்தமாக, நிறைவாக இருக்கலாம்.

அதாவது, என்றும் மாறாமல் இருக்கிற ஒரே வஸ்துவான பரமாத்மாவிடம் அன்பைப் பூரண மாக வைத்து விட வேண்டும். பரமாத்மா நம்மை விட்டு ஒருபோதும் நீங்குவதில்லை. நம் சரீரத்தி லிருந்து உயிர் பிரிந்தாலும், பிரிகிற உயிர் பரமாத்மாவிடமிருந்து பிரியாமல் அவரிடமே கலந்து விடும். அவரிடம் வைக்கிற அன்பே சாசுவதமாக இருக்க முடியும்.

**- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச் சார்ய சுவாமிகள்.**



உன் தந்தையை உயிரோடு காண விரும் பினால் உடனே புறப்படு!'' என்றார் மாமல்லர்.

இன்னமும் சிவகாமி அசையாமல் சும்மா நின்றாள்.

''இது என்ன, சிவகாமி! காஞ்சிக்கு வர உனக்கு இஷ்டமில்லையா? ஆகா! அப்போதே சந்தேகித்தேன். அது உண்மையா யிற்று!'' என்று மறுபடியும் மாமல்லர் குத்தலாகச் சொன்னார்.

சிவகாமியின் மௌனம் அப்போது கலைந்தது. ''பிரபு! என்ன சந்தேகித் தீர்கள்?'' என்று கேட்டாள்.

''அதைப் பற்றி இப்போது என்ன? பிறகு சொல்கிறேன்.''

''என்ன சந்தேகித்தீர்கள்! சொல்லுங்கள் பிரபு!''

''இப்போதே சொல்ல வேண்டுமா?''

''அவசியம் சொல்ல வேண்டும்.''

''வாதாபிச் சக்கரவர்த்தியின் மாளிகை யில் சுகபோகத்துடன் வாழ்ந்தவர்களுக்கு என்னோடு புறப்பட்டுவர இஷ்டமாயிராது என்று சந்தேகித்தேன்.''

இதைக் கேட்டதும் சிவகாமி சிரித்தாள்! நள்ளிரவு நேரத்தில் அந்தச் சிரிப்பின் ஒலி மாமல்லரின் காதுக்கு நாராசமாயிருந்தது. சிரிப்பை நிறுத்தியதும் சிவகாமி உறுதியான குரலில் கூறினாள்:

''ஆம் பல்லவ குமாரா! உங்கள் சந்தேகம் உண்மைதான். எனக்கு இந்த மாளிகை யின் சுகபோகத்தைவிட்டு வர இஷ்டமில்லை. வாதாபி நகரை விட்டு வரவும் மனம் இல்லை. நீங்கள் போகலாம்!''

இவ்விதம் சிவகாமி கூறியதும், மாமல்லர்கண்களில் தீப்பொறி பறக்க, ''ஆகா பெரியவர்கள் கூறியிருப்பது எவ்வளவு உண்மை!'' என்றார்.

''பெரியவர்கள் என்ன கூறியிருக்கிறார்கள்?''

''ஸ்திரீகள் சபல சித்தமுடையவர்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.''

''அந்த உண்மையை இப்போது கண்டு கொண்டீர்கள் அல்லவா? போய் வாருங்கள், பிரபு.''

''ஆகா! உன்னைத் தேடி நூறு காத தூரம் வந்தேனே? என்னைப் போன்ற புத்திசாலி யார்?'' என்று தமக்குத்தாமே சொல்லிக் கொண்டார் மாமல்லர். பிறகு, ''சிவகாமி நீ எனக்காக வரவேண்டாம். உன் தந்தைக் காகக் கிளம்பிவா! உன் தோழி கமலிக்காகப் புறப்பட்டு வா! உன்னைக் கட்டாயம் அழைத்து வருவதாக அவர்களிடம் சபதம் செய்துவிட்டு வந்தேன்!'' என்றார் மாமல்லர்.

''நானும் ஒரு சபதம் செய்திருக்கிறேன், பிரபு!''

''நீயும் சபதம் செய்திருக்கிறாயா? என்ன சபதம்?''

''தங்களிடம் எதற்காகச் சொல்ல வேண்டும்?''

''சொல்லு சிவகாமி! சீக்கிரம் சொல்!''

''சொன்னால் நீங்கள் நம்பப் போவ தில்லை. சபல புத்தியுள்ள அபலைப் பெண் ணின் சபதந்தானே?''

''பாதகமில்லை, சொல்! நேரமா கிறது!''

''இந்த வாதாபி நகரம் தீப்பற்றி எரிந்து, இந்நகரின் வீடுகள் எல்லாம் சாம்பலா வதையும், வீதிகளிலெல்லாம் இரத்த வெள் ளம் ஓடுவதையும், நாற்சந்திகள் பிணக் காடாய்க் கிடப்பதையும் கண்ணாலே பார்த்த பிறகுதான் இந்நகரை விட்டுக் கிளம்புவேன் என்று சபதம் செய்திருக் கிறேன்!''

''என்ன கோரமான சபதம்! இப்படி ஒரு சபதத்தை எதற்காகச் செய்தாய் சிவ காமி?''

''பிரபு! இந்த நகருக்கு வரும் வழி யில் நான் பார்த்த கோரக் காட்சிகளை யெல்லாம் நீங்கள் பார்த்திருந்தால் எதற் காகச் சபதம் செய்தேன் என்று கேட்க மாட் டீர்கள். இந்த வாதாபி நகரின் நாற்சந்தி களிலே தமிழ்நாட்டு ஸ்திரீ புருஷர்கள் கட்டப்பட்ட கரங்களுடனே கொண்டு வந்து நிறுத்தப்பட்டதையும், சாட்டையினால் அவர்கள் அடிக்கப்பட்டதையும், அவர்க ளுக்கு முன்னால் பல்லவ தேசத்தின் நடன கலாராணி நாட்டியமாடியதையும் தாங்கள் பார்த்திருந்தால், சபதம் ஏன்-எதற்காக-என் றெல்லாம் கேட்க மாட்டீர்கள்.''

''சிவகாமி! அதையெல்லாம் நான் நேரில் பார்க்காவிட்டாலும், எனக்குத் தெரிந்தவைதான். இருந்தாலும் நீ இவ்வளவு கடுமையான சபதம் எடுத்துக் கொள்ள லாமா?''

''பிரபு! பல வருஷங்களுக்கு முன்னால், - பல யுகங்களுக்கு முன்னால், - என்னை இளவரசர் ஒருவர் காதலிப்பதாகச் சொன் னார். என்னைத் தமது பட்டமகிஷியாக்கிக் கொள்வதாக வாக்குறுதி கூறினார். என்னை ஒரு நாளும் மறப்பதில்லை என்று வேலின் மேல் ஆணையாக வாக்களித்தார். தாமரைக் குளக்கரையில் பூரண சந்திரனின் நிலவில், 'இந்த ஜன்மத்திலும் எந்த ஜன்மத்திலும் நீயே என் வாழ்க்கைத் துணைவி' என்று சத்தியம் செய்தார். அவர் சுத்தவீரர் என்றும், சொன்ன சொல் தவறாதவர் என்றும் நம்பி யிருந்தேன். அந்த நம்பிக்கை காரணமாகவே அத்தகைய சபதம் செய்தேன்!'' என்று சிவகாமி கம்பீரமான குரலில் கூறி மாமல் லரை ஏறிட்டுப் பார்த்தாள். அந்தப் பார்வை கூரிய வேலைப்போல் மாமல்லருடைய நெஞ்சிலே பாய்ந்து அவரை நிலைகுலையச் செய்தது.

(தொடரும்)




# SANGAMAM

**HMV பெருமையுடன்**
**அளிக்கும் "சங்கமம்"**

கர்நாடக இசை மேதை
மஹாராஜபுரம் சந்தானமும்
மெல்லிசை மன்னர் M. S. விசுவநாதனும்

முதல்முறையாக
இணைந்து வழங்கும்
தெவிட்டாத தேனிசை

கர்நாடக இசையும் மெல்லிசையும்
ஒன்றுபடும் விந்தையை "சங்கமம்"-இரட்டைக்
காஸெட்டுகளில் கேட்கலாம்.

உங்கள் அருகாமையிலுள்ள
HMV டீலரை அணுகுங்கள்! "சங்கமம்"
வாங்கி கேட்டு மகிழுங்கள்!!

RPG ENTERPRISES

HMV

# பயம்

ஜெயகாந்தன்

தொலைபேசி கூவிற்று.

''ஹலோ....''

''ஜெயராம சர்மா இருக்காரா?''

''யாரு பேசறது?''

''யாரு மாலாவா?''

''கே.ஆர்.எஸ். மாமா பேசறேன். அப்பாவைக் கூப்பிடு... என்ன பண்றார்?....''

''அப்பா.... கே.ஆர்.எஸ். மாமா.''

பெயரைக் கேட்டதும், செய்தித்தாள் படித்துக் கொண்டிருந்த ஜெயராமசர்மா, கையில் பேப்பருடன் டெலிபோனை வாங்கிக் கொண்டார்.

கே.ஆர்.எஸ். என்னும் கே.ஆர். சீனுவாசன் (ஸ்ரீநிவாசன் என்பதை நியூமெராலஜிக்காக சீனுவாசன் என்று மாற்றிக் கொண்டார்) உடன் பணியாற்றும் நண்பர். ஏறத்தாழ ஒரே வயது. ரசனையும் கிட்டத் தட்ட ஒரே மாதிரி. எனவே, சிநேகிதம் அந்நியோன்னியமாய் வளர்ந்தது.

''என்ன கே.ஆர்.எஸ்?''

''நம்ம சாரி போயிட்டான்.''

''வாட்?... நம்ம சாரியா?... நேத்திக்கு ராத்திரி இங்கே வந்திருந்தானே? என்ன அநியாயமா இருக்கு.... எப்ப?... என்ன ஆச்சு?...''

நெஞ்சு படபடத்தது, தலை சுழன்றது. கையிலிருந்த செய்தித்தாள் கீழே விழுந்து புரண்டு துயரம் கொண்டாடிற்று. சுவரைப் பிடித்துக் கொண்டார் சர்மா.

''...இன்னிக்கு மார்னிங் வாக் போயிட்டு வந்திருக்கான். சேர்லே சாஞ்சிண்டு பேப்பர் பாத்திண்டிருக்கற போதே 'மாசிவ் ஹார்ட் அட்டாக்'... விதின் ஃபைவ் மினிட்ஸ் எல்லாம் ஆயிடுத்து... இப்பத்தான் மெஸேஜ் வந்தது... சரி உடனே அவன் வீட்டுக்கு வந்துரு... நான் அங்கேதான் போறேன்.''

தொலைபேசியைத் துண்டித்துவிட்டு, பிரமை பிடித்தாற் போல் நின்று கொண்டிருந்தார் சர்மா.

'சாரி போய் விட்டானா? எப்படி? நம்பவே முடியல்லியே? நேத்திக்கு ராத்திரி இங்கே ஒக்காந்து புது எகனாமிக் பாலிஸியைப் பத்தி விலாவாரியாப் பேசிண்டிருந்தவன் காலம்பர இல்லேன்னா?... நாப்பத்தியெட்டு வயசு இருக்குமா? ஆமாம் நாப்பத்திநாலாம் வருஷம் மார்ச் மாசம் அவன். ஜூலை மாசம் நான். ஆகஸ்டு கே.ஆர்.எஸ்.... எனக்குத் தெரிஞ்சு ஒரு நாள் கூட படுத்துண்டதில்லை அவன். இருமல் தும்மல் கூட வந்ததில்லை... அவனா போயிட்டான்? வீசநாழிலே பூ உதிர்ற மாதிரிப் போயிட்டானே!... நானெல்லாம் எந்த மூலை?... நின்னால் கால்வலி. ஒக்காந்தா முதுகு வலி....'

பிரம்பு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்த ஜெயராம சர்மாவிற்கு நெஞ்சு வலிக்கிறார் போல இருந்தது. அடிவயிற்றைக் கலக்கிற்று.

அவரை நம்பி மனைவி, அம்மா தவிர, இருபத்திரெண்டு வயதில் ஷோபா. இப்போதுதான் தற்காலிகமாய் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் சம்பளத்தில் வேலைக்குப் போய்க் கொண்டிருக்கிறாள். பதினாறு வயது வித்யா. ஒன்பது வயது மாலா - பிள்ளைதான் பிறக்கும் என்ற அம்மாவின் நம்பிக்கையால், கருக்கலைப்பைத் தப்பிப் பிறந்தவள். சொத்து, பத்து எதுவுமில்லாமல் எழுபத்தையாயிரம் ரூபாய் கடனில் கட்டிய அறு நூறு சதுர அடி வீடு. வெள்ளையடிக்கக் கையில் பணமில்லாமல் இரண்டு வருஷமாய் ஒத்திப் போட்டுக் கொண்டு வந்தாகிறது. ஒருவன் சம்பளத்தை நம்பி, கடனில் ஒளிந்து வாழ்கிற ஐந்து ஜீவன்கள்.

தனக்கு ஏதாவது ஆகிவிட்டால் என்ன ஆகும்?

'சாரி பாடாவது தேவலை... வொய்ப் வேலை பாக்கறா... ஒரே பிள்ளை. டில்லிலே எஞ்சினீயரிங் ஃபைனல் இயர்.'

ஜெயராம சர்மாவிற்குத் தலையைச் சுற்றுகிறார் போல் இருந்தது.

அன்று ஒருநாள் அம்மா சொன்னது நினைவுக்கு வந்தது.

''....அடிக்கடி தலையைச் சுத்தறது. தலையைச் சுத்தறது அப்படீம்பர் ஒங்கப்பா. பித்தம்னு அவரே வைத்தியம் பாத்துண்டு, இஞ்சி சொரசம் வச்சுக் குடுக்கச் சொல்லுவர்..... அந்த நாள்லே இவ்வளவு வைத்தியம் கெடையாது... ஒரு நா, தடால்னு தலைசுத்திக் கொல்லைலே விழுந்துட்டார். அப்பறமா காட்டாஸ்பத்திரிக்கு வண்டிலே அழைச்சுண்டு போச்சு.... என்னமோ பெஷர் ஜாஸ்தின்னா... அப்போ ஒனக்குப் பதினைச்சு வயசு... பத்தாவது படிச்சிண்டுருந்தே... ரெண்டு மாசம் படுக்கைலே இருந்தார்.... நாப்பத்தெட்டு



வயசே நம்மாத்துக்கு ஒரு கண்டம்... உங்க தாத்தாக்கு ரத்த சோகை வந்தது நாப்பத்தி யெட்டு முடிஞ்சு நாப்பத்தொம்பதாம் வய சுலே.... உங்கப்பாவுக்கு பெஷர்... நம்ம கையிலே என்ன இருக்கு... சிவ சிவ....''

அம்மா சொல்வது அசரீரி வாக்குமாதிரி நம்மை எச்சரிக்கத்தானோ? நம் உடம்பை டாக்டரிடம் காண்பித்துப் பரிசோதித்துக் கொள்ள 'இது ஒரு டிவைன் டைரக் ஷனோ?'

அன்று மாலையே வீட்டில் யாரிட மும் சொல்லாமல் - ஒரு கல்யாண வர வேற்பு என்று மனைவியிடம் கூறியிருந் தார்; இல்லாவிட்டால் அனாவசிமாய்க் காபரா அடைந்து விடுவாள் - மருத்துவ ரிடம் போனார்.

ஆஸ்பத்திரி வாசனையே குடலைக் கலக்கிற்று.

வரவேற்பறையில் அமர்ந்திருக்கும் போது தன்னையறியாமல் மனம் 'சிவாய ந ம வெ ன் று சிந்தித்திருப்போர்க்கு அபாயமேதுமில்லை' என்று முணுமுணுத் துக் கொண்டிருப்பதை உணர்ந்தார். 'இப்படி முழுவாக்கியமாய்ப் பலஸ்ருதி யைச் சொல்வதால் என்ன பலன்? 'சிவாய நமஹ, சிவாய நமஹ' என்றால் போதாதோ?

மனத்தைக் கட்டிப்பிடித்துச் 'சிவாய நமஹ சிவாய நமஹ' என்று சொல்லிக் கொண் டிருந்தார்.

டாக்டரைப் பார்க்க அமர்ந்திருப் பவர்களில் தம் வயதொத்த வர்கள் எவ்வளவு பேர் இருக்கி றார்கள் என்று ஜாடையாய் எண்ணிப் பார்த்தார். வந்திருப்போர்களில் பெரும் பாலோருக்கு அவர் வயதுதான் இருக்கும் போல் தெரிந்தது. உடல் சன்னமாய் விதிர்விதிர்த்தது.

''...நாப்பத்தஞ்சு வயசாயிட்டாலே ஜாக்கிரதையாத் தான் இருக்கணும். கொலஸ்ட்ரால் செக்கப் பண்ணணும்... பி.பி. பாத்துக்கணும். எல்லாத்துக்கும் 'பேஸ்' என்ன தெரியுமோ? ஷுகர்தான்... ரொம்ப ஜாக்ரதையா இருக்கணும்... நான் காப்பிக்குக் கூட சர்க்கரை போட்டுக்கறது இல்லே தெரியுமோ?''

பக்கத்திலிருந்தவர் அடுத்தவரிடம் கூறிக் கொண்டிருந்ததை நாசூக்காகக் கவ னித்தார். வார்த்தைகள் கூர்மையாக உள்ளே பாய்ந்தன.


'நாளை முதல் காப்பிக்குச் சர்க்கரையே போட்டுக்கப்படாது... வீட்டுல ஸ்வீட்டே பண்ணாதேன்னு ஸ்ட்ரிக்டாச் சொல்ல ணும்....'


'சிவாய நமவென்று சிந்தித்திருப் பார்க்கு... சீச்சீ... இல்லே இல்லே. சிவாய நமஹ, சிவாய நமஹ.'

மனம் உருவேற்றியது.

மளிகை சாமான் லிஸ்ட் மாதிரி டாக்டர் வரிசையாய் ஏதேதோ பரிசோதனை களை எழுதினார்.

''கொஞ்சம் காஸ்ட்லி தான். இருந்தா ஓரம் எல்லா டெஸ்டும் ஒரு தரம் பண்ணினாத் தான் வேர் யூ ஸ்டாண்ட்னு தெரியும்... எப் பிடி இருந்தாலும் டயட் கன்ட்





**"உங்க சினிமா மோகத்தில் இடி விழ. புதுசா நாம கட்டின வீட்டுக்கு 'இதுதாண்டா வீடு'ன்னா பெயர் வைக்கறது!"**

ரோல் அவசியம். கொஞ்சம் எக்ஸர்ஸைஸ் பண்ணணும்... வாக்கிங் ஈஸ் எ மஸ்ட்....''

டாக்டர் ஏதோ சொல்லிக் கொண்டே போனார்.

மருந்துச் சீட்டை வாங்கிக் கொண்டு வெளியே வந்தார் சர்மா. சற்றுத் தளர்ச்சியாய் இருந்தது. பணத்திற்கு ஏற்பாடு பண்ண வேண்டும்....

சாலைக்கு வந்ததும் வானுயர ஓங்கி நின்ற கோயில் கோபுரம், மணியடித்துக் கூப்பிட்டது. பழைய கோயில். ஞான சம்பந்தர் வந்து பாடிய ஸ்தலம். இவ்வளவு வருஷமாய் இந்தப் பாதையில் வந்து போய்க் கொண்டிருக்கிறோம். எத்தனை தடவை கோயிலுக்குள் போயிருப்போம்? மூன்று நான்கு தடவை இருக்குமா?.... சே..... ரொம்ப மோசம்... உள்ளே போனால் பத்தே நிமிஷம். மனமுருகப் பிரார்த்தனை செய்தால் எவ்வளவு பலன் இருக்கும்? வாழ்நாளை வீணாக்கி விட்டோமே! கடவுள் அருளைவிட மருந்து ஒன்று உண்டா என்ன? இனிமே எந்த ராஜா எந்த பட்டணம் போனாலும் சரி, கோவிலுக்குப் போகாம விடறதில்லே... டாக்டரும் வேண்டாம் ஒரு டெஸ்டும் வேண்டாம்.....

அந்த நினைவே உற்சாகமாயிருந்தது.

கோயிலுக்குள் சென்றார். ஒவ்வொரு விக்ரகமாய் நின்று நின்று பிரார்த்தித்தார்.

மனம் சமாதானமாகி லேசாயிற்று. உடம்புக்கு ஒன்றும் வராது என்று தெம்பாய் இருந்தது. விபூதியை அழுத்தமாய் நெற்றியில் தீற்றிக் கொண்டார்.

வெளியே புத்தகக் கடையில் 'மார்க்கண்டேயர் அருளிய மிருத்யுஞ்சய ஸ்தோத்திரம்' என்ற புத்தகம் கண்ணில் பட்டது. 'மரணபயம் நீங்க காலையில் குளித்து விட்டுப் பாராயணம் செய்யவும்' என்று அட்டையில் எழுதியிருந்ததைப் பார்த்ததும் உடம்பு புல்லரித்தது.

'மருந்தும் மாயமும் எதற்கு?... இதைப் பாராயணம் செய்' என்று சுவாமி கட்டளை விடுகிறாரோ?

கண்களில் கண்ணீர் மல்க எட்டணா கொடுத்து அந்தப் புத்தகத்தை வாங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்டார். தன் முன் வாழ்ந்த பெரியோர்கள் மீது காரணமில்லாமலேயே மதிப்பும் மரியாதையும் எழுந்தன.

இனி தினசரி காலையில் குளித்து விட்டுப் பாராயணம் செய்துவிட்டுத்தான் அலுவலகம் செல்வது என்று வைராக்கியம் செய்து கொண்டார்.

* * * * * *

பேப்பரில் வந்த செய்தி வயிற்றைக் கலக்கிற்று. 'அபிட்சுபரி' என்று தலைப்பிட்டுப் புகைப் படத்துடன் வெளியிட்டிருந்தார்கள்.

நாகராஜனாம் எச்.எம்.டியில் பெரிய ஆபீஸராம். வயது நாற்பத்தியேழாம். நேற்று காலை திடீரென்று காலமாகி விட்டாராம். மூன்று பெண்களாம்.

நாற்காலியில் சரிந்து உட்கார்ந்து கொண்டார் சர்மா. கண்ணாடியைத் துடைத்துப் போட்டுக் கொண்டார். நெஞ்சு படபடத்தது. நாக்கு வறண்டது. அடிவயிற்றில் ஏதோ புரண்டது....

இன்றைக்கே டாக்டரிடம் போய் எல்லாச் சோதனைகளும் செய்து கொள்ள வேண்டும். 'அப்போதே எழுதிக் கொடுத்தேனே. ஏன் லேட்?' என்பார். 'ஆபீஸ் வேலையா டில்லி போயிருந்தேன்' என்று ஏதாவது சொல்லிச் சமாளிக்க வேண்டியது தான்....

பேப்பரை விசிறி எறிந்துவிட்டு வேகமாய் எழுந்தார். தலை சுற்றுகிற மாதிரி இருந்தது. சமாளித்துக் கொண்டார். மிருத்யுஞ்சய ஸ்தோத்திரம் நினைவுக்கு வந்தது.

''சாவித்திரி... மிருத்யுஞ்ஜய ஸ்தோத்திரப் புஸ்தகத்தை எடுத்துவை... குளிச்சுட்டுப் பாராயணம் பண்ணியாகணும்.....''

வேகவேகமாய்க் குளிக்கப் போனார்.

''....அது எ ங் கே க் கெடக்கோ என்னமோ? அன்னிக்கு ஒருநாள் திக்கித் தெணறி படிச்சுட்டு எங்கேயோ வச்சாச்சு... எங்கே இருக்கோ தெரியல்லே... தேடணும். சமையலுக்கு வேற நாழியாயிடுத்து... ம மாலா!.. அப்பாவோட பாராயணப் புஸ்தகத்தைப் பாத்தியோ?''

சாவித்திரி புத்தகக் குப்பைகளைத் தேடினாள்.

'சிவாய நமஹ, சிவாய நமஹ' என்று முணுமுணுத்துக் கொண்டே குளிக்கலானார் ஜெயராம சர்மா. 'இன்னிக்குக் கோயிலுக்குப் போயாகணும்' என்று தீர்மானித்துக் கொண்டார். 'இனிமே கோயிலை விடறதே இல்லை' என்று மீண்டும் உறுதியெடுத்துக் கொண்டார்.

# குமரியில் ஒரு குற்றாலம்!

குற்றால அருவி போல் குமரி மாவட்டத்திலும் ஓர் அருவி உண்டு. 'குமரிக் குற்றாலம்' என்று செல்லமாக அழைக்கப்படும், இந்த அருவியின் பெயர்





திற்பரப்பு. (திக்கெல்லாம் பரந்து விரிந்து பாய்வதால் திற்பரப்பு என்று பெயர் ஏற்பட்டது) இதன் அருகில் சிவன் கோவில் ஒன்றும் உள்ளது.

நாகர்கோவிலிலிருந்து 35 கி. மீ. தூரத்தில் குலசேகரத்தின் அருகில் அமைந்துள்ளது இந்த அருவி. வருடம் முழுவதும் தண்ணீர் பாயும் இந்த அருவியில், மழைக் காலத்தில் தண்ணீர் சீற்றத்துடன் பெரும் ஓசையுடன் விழுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். மழைக் காலங்களில் குளிக்கத் தடை விதிக்கப்படும். மற்றக் காலங்களில் குளிப்பதற்கு வசதியாக இருக்கும்.

கோடைக் காலத்தில் கேரளாவிலிருந்தும், தமிழ்நாட்டிலிருந்தும் திற்பரப்புக்கு வரும் பயணிகள் கூட்டம் வருடா வருடம் அதிகரித்து வருகிறது. திருவனந்தபுரம் தொலைக்காட்சியில், இந்த அருவியைப் பற்றி ஒரு சிறிய டாக்குமென்டரி படம் போல், அடிக்கடி Filler ஆக ஒளி பரப்புவது உண்டு. இதனால் கேரளாவில் இந்த அருவிக்கு அதிகச் செல்வாக்கு.

திற்பரப்பு அருவியைச் சிறந்த சுற்றுலா மையமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாகர்கோவில், மார்த்தாண்டம், தக்கலையிலிருந்தெல்லாம் திற்பரப்புக்கு அடிக்கடி பஸ் இருக்கிறது. குமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி, பத்மனாபபுரம் அரண்மனை ஆகியவற்றிற்கு அடுத்தபடியாகச் சுற்றுலா பயணிகளை மிகவும் கவர்ந்த இடம் திற்பரப்பு அருவிதான்.

ஆண்டு முழுவதும் தண்ணீர் வழியும் இந்த அருவியைப் பார்த்து ரசிக்கவும் ஆனந்தமாய்க் குளிக்கவும் கோடை விடுமுறையில் போகலாமே!

படம், தகவல் : பைரவி

# இராயப்பேட்டை பெனிபிட் பண்டு லிமிடெட்

RBF

மத்திய அரசின் "நிதி கம்பெனி" என்ற அங்கீகாரம் பெற்றவர்கள்
பதிவு அலுவலகம் : "கோகலே பவன்" வெஸ்ட் காட் சாலை, சென்னை-600014.
போன் : 831180, 846445, 831755 P.O. Box : 5555

* பிக்சட் டெபாசிட்டுகளுக்கு 20% வரை வட்டி.
* சேவிங்க்ஸ் கணக்குகள் மீது 9.5% வரை வட்டி.
* உங்கள் டெபாசிட்டுகள் 45 மாதங்களில் 2 மடங்காகவும், 90 மாதங்களில் 4 மடங்காகவும், 135 மாதங்களில் 6 மடங்காகவும் ஆகிறது.

சேமிப்புத் திட்டங்கள் :

- பென்ஷனர் பாரடைஸ் திட்டம்
- நிரந்தர வைப்புத் திட்டம்
- பேரனை குபேரனாக்குங்கள் முதலீடு திட்டம்
- ராஜயோகம் வைப்புத் திட்டம்
- இரட்டிப்பாக்கித்தரும் திட்டம்
- ரெக்கரிங் டெபாசிட் திட்டம்
- சேமிப்புக் கணக்குத் திட்டம்

தொடர்ந்து நகைக்கடன் தருகிறோம்.

கடனுக்கு உச்ச வரம்பில்லை!
தருவதில் தாமதமில்லை!!
R.D. கட்ட வேண்டியதில்லை!!!

## தங்கள் முதல் செலவு சேமிப்பாக இருக்கட்டும்.

## முன் யோசனையோடு முதலீடு செய்யுங்கள்

தன்னை ஒரு பெனிபிட் பண்டு அல்லது நிதி கம்பெனி என்று கூறி விளம்பரம் செய்யும் நிறுவனங்கள் மலிந்து போன இந்த நாளில் *RBF*-ன் கீழ்கண்ட ஆலோசனைகள் முதலீட்டாளர்களுக்கு உதவிகரமாயிருக்கும் என்ற நம்பிக்கையில் இதை வெளியிடுகிறோம். இந்த நியதிகள் 'நிதி' எனும் அங்கீகாரம் பெற்ற பெனிபிட் பண்டுகள் பற்றி மட்டுமே சம்பந்தப்பட்டது.

| | ஆம் | இல்லை |
|---|---|---|
| 1. கம்பெனி சட்டப்படி பதிவு பெற்ற நிறுவனமா ? | ✓ | |
| 2. ரிசர்வ் வங்கிக்கு வருடந்தோறும் தவறாது Return submitt செய்கிறார்களா ? | ✓ | |
| 3. நகை கடன் 8.30 மணி முதல் மாலை 3.30 வரை தொடர்ந்து தருகிறார்களா ? | ✓ | |
| 4. காலை 8.30 மணி முதல் மாலை 3.30 மணிக்குள் பணம் கட்டிய உடனேயே நகையை திரும்ப தருகிறார்களா ? | ✓ | |
| 5. கம்பெனியின் சேமிப்பு திட்டங்களும், அவைகளுக்கு அவர்கள் வைத்துள்ள பெயர்களும் சுயமானதா ? | ✓ | |
| 6. டெபாசிட் செய்தவுடன், டெபாசிட் சர்டிபிகேட்டும், ஒரு ஆண்டிற்கான மாதாந்திர வட்டிக்கான காசோலை தருகின்ற நிறுவனமா ? | ✓ | |
| 7. இந்தியாவின் எந்த பகுதியிலும் சம மதிப்பில் (At Par) மாற்றத்தக்க காசோலை தருகின்ற நிதி நிறுவனமா ? | ✓ | |
| 8. தனக்கென சொந்தமான கட்டிடத்தில் நிறுவனம் அமைந்துள்ளதா ? | ✓ | |
| 9. குறைந்தபட்சம் மூன்று டைரக்டர்களின் முழுநேர கண்காணிப்பில் இயங்குகின்ற நிறுவனமா ? | ✓ | |

RBF மேற்கண்ட அனைத்து கேள்விகளுக்கும் ஆம் என்று பதில் தரும் முத்திரை பதித்த நிறுவனமாகும்

# RBF THE BEST ALL ROUNDER

**★ Avail Jewel Loan Rs. 2000/- Per Sovereign**
**Jewel Loan given from 8.30 a.m. to 3 p.m. Continuously**

## ROYAPETTAH BENEFIT FUND LIMITED

(Central Govt. approved "NIDHI" Company)

GOKHALE BHAVAN, 8, WEST COTT ROAD, ROYAPETTAH,
MADRAS-600 014. PHONE: 831180, 846445, 831755, P.O. BOX 5555
FRIDAY HOLIDAY

## DEPOSIT SCHEMES *

### I. FIXED DEPOSIT SCHEME *

| Period | 45 Days | 3 Months | 6 Months | 1 Year | 2 Years | 4 Years | 5 Years |
|---|---|---|---|---|---|---|---|
| Rate of Interest p.a. | 12% | 13% | 15% | 17% | 18% | 19% | 20% |

### II. C.D. SCHEME * DEPOSIT DOUBLES IN 45 MONTHS · TRIPLES IN 68 MONTHS.

| Amount of Deposit | MATURITY VALUE AFTER | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 12 Months | 24 Months | 36 Months | 45 Months | 50 Months | 60 Months | 68 Months |
| Rs. 1,000 | 1,180 | 1,430 | 1,705 | 2,000 | 2,190 | 2,690 | 3,000 |
| Rs. 5,000 | 5,920 | 7,150 | 8,545 | 10,000 | 10,900 | 13,400 | 15,000 |
| Rs. 7,500 | 8,880 | 10,725 | 12,820 | 15,000 | 16,400 | 20,200 | 22,500 |
| Rs. 10,000 | 11,840 | 14,300 | 17,100 | 20,000 | 21,900 | 26,900 | 30,000 |

### III. CASH CERTIFICATE *

| Period | Amount | Certificate Value |
|---|---|---|
| 36 Months | 2,925 | 5,000 |
| | 5,850 | 10,000 |
| | 8,775 | 15,000 |
| | 11,700 | 20,000 |

### IV. RECURRING DEPOSIT

| Monthly Deposit | MATURITY VALUE AFTER | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 12 Months | 24 Months | 36 Months | 45 Months | 50 Months | 60 Months |
| Rs. 25 | 330 | 720 | 1,180 | 1,620 | 1,870 | 2,510 |
| Rs. 50 | 660 | 1,440 | 2,360 | 3,230 | 3,740 | 5,030 |
| Rs. 75 | 990 | 2,160 | 3,540 | 4,850 | 5,610 | 7,540 |
| Rs. 100 | 1,320 | 2,880 | 4,720 | 6,460 | 7,480 | 10,050 |

**PENSIONERS' PARADISE SCHEME ★** **KUBER DEPOSIT SCHEME ★**

**RAJAYOGAM DEPOSIT SCHEME ★**

100 கோடி லட்சியம் - தேடிவரும் நிச்சயம்



கணவனின் ஊதியப் பட்டியலைப் பார்த்ததிலிருந்து சுனந்தாவின் மனம் நிலை கொள்ளாமல் தவிக்க ஆரம்பித்திருந்தது.

அலுவலகத்தின் கோப்புகளில் மனம் பதியாமல், முரண்டு பிடிக்கும் குழந்தை போல, சண்டித்தனம் செய்தது.

இதுவரை அவள் கணவன் சுபாஷ் எந்த ஒரு விஷயத்தையும் அவளிடம் மறைத்ததில்லை. ஆனால் இப்போது.... •

பி.எஃப்பில் பத்தாயிரம் கடன் வாங்கியதைத் தன்னிடம் ஏன் மறைக்க வேண்டும்? கணவன் தனக்குத் தெரியாமல் ஏதோ செய்கிறானோ என்ற நினைப்பே, அவள் கண்களில் கண்ணீரை வரவழைத்தது.

சுனந்தா, இதுவரையில் கணவன் என்ன சம்பளம் வாங்குகிறான், என்ன செலவு செய்கிறான் என்பதைப் பற்றிக் கவலைப் பட்டதில்லை. தன் ஊதியத்தையும் கணவனிடம் அப்படியே கொடுத்து விட்டு நிம்மதியாக இருந்து விடும் ரகம்.

அஸ்வினி



கணவன் பேரில் அவ்வளவு நம்பிக்கை! அந்த நம்பிக்கையை முறியடித்து விட்டு, இப்படியொரு நம்பிக்கைத் துரோகமா?

நினைக்க, நினைக்க நிம்மதியே தொலைந்து போயிற்று.

''அதெல்லாம் ஒண்ணுமில்லேடி,'' மழுப்பினாள் சுனந்தா.

''சும்மா டபாய்க்காதே. வெளியூர் போயிருக்கற உன் ஹப்பி எப்போ வருவார்னு கனவுல மிதந்துட்டிருக்கே, இல்லே'' சீண்டினாள் உஷா.

''ஏய், இப்ப சும்மா இருக்கப் போறியா, இல்லையா? அவர் எப்ப வந்தா எனக்கென்ன?'' வள்ளென்று விழுந்த சுனந்தாவை, அப்போதுதான் கவனித்தாள் உஷா. அவள் உண்மையிலேயே ஏதோ சீரியஸாக இருக்கிறாள் என்று உறைத்தது.

''ஏய், சாரிடி சுனந்தா. ஏன் ஒரு மாதிரி இருக்கே? என்ன பிராப்ளம்னு என்கிட்டே சொல்லக்கூடாதா?'' உஷா கேட்டதுதான் தாமதம் உடைந்து விட்டாள் சுனந்தா.

மனத்திலுள்ள ஆதங்கத்தைச் சிநேகிதியிடம் கொட்டித் தீர்த்து விட்டாள்.

''இப்ப, சொல்லு உஷா, எங்கிட்டே இதைச் சொல்லாம ஏன் மறைக்கணும்?''

''நிச்சயமாகக் கூடாதுதான். ஏதாவது முக்கியமான விஷயமா இருந்து, அப்புறம் சொல்லிக்கலாம் என்று நினைச்சிருக்கலாமில்லையா?''

''இல்லே, உஷா. நான் அவர் கிட்டே எதையாவது மறைக்கிறேனா? அவர் என் கிட்டே சின்ஸியரா இல்லையோன்னு சந்தேகமா இருக்கு உஷா....''

''நீ கண்டதை இமேஜின் பண்ணிட்டுப்

# மனத்தில் ஒரு முள்...

தனக்குத் தெரியாமல் அப்படி என்ன பெரிய செலவு இருக்க முடியும்? தனக்கு இப்போது தெரிந்து இந்த பி.எஃப் லோன், தெரியாமல் வேறு ஏதாவது செய்திருப்பாரோ?

ஆபீஸ் விஷயமாக வெளியூர் போயிருக்கும் கணவன் வந்தவுடன் விசாரித்துத் தெரிந்து கொண்டால்தான், தூக்கம் வரும் போல இருந்தது. முகம் சோகத்தைப் பிரதிபலித்தது.

''என்னடி, சுனந்தா! காலையிலிருந்து நானும் பார்க்கறேன். என்னத்தையோ பறிகொடுத்த மாதிரி, பிரமை பிடிச்சு உட்கார்ந்திருக்கே, என்ன ஆச்சு?'' சுனந்தாவின் சிநேகிதி உஷாதான், அவளை உலுக்காத குறையாகக் கேட்டாள்.

பேசாத்த சுனந்தா. அவர் ஊரிலிருந்து வந்தவுடனே இதைப் பற்றி நேரா கேட்டுடேன்.... வா கொஞ்ச நேரம் வெளியே போய், காப்பி சாப்பிட்டுட்டு வரலாம்.''

சுனந்தா, அப்போதைக்குத் தான் மன உளைச்சலிலிருந்து மீண்டாள்.

வீட்டுக்கு வந்தவுடன் வேதாளம் திரும்பவும் முருங்கை மரம் ஏறிக் கொண்டது. மனம் பழைய சம்பவங்களை அசை போட ஆரம்பித்தது.

சுனந்தாவும், சுபாஷும் இரு வீட்டாரையும் விரோதித்துக் கொண்டு தான் காதல்

திருமணம் புரிந்து கொண்டார்கள். சுபாஷ் வீட்டில் கல்யாணத்திற்கு வந்து விட்டாவது போனார்கள்.

சுனந்தா வீட்டில் ஏக எதிர்ப்பு. ஆசீர்வாதம் வாங்க வந்த தம்பதிகளை அவமதித்துப் பேசி அனுப்பின தன் பிறந்த வீட்டாரின் மேல் சுனந்தாவுக்கு ஒரு துவேஷமே ஏற்பட்டது. கணவனைப் பார்க்கவே கஷ்டமாக இருந்தது.

''எப்ப வீடு தேடி வந்த உங்களை, நாக்குல நரம்பில்லாம பேசி அவமதிச்சாங்களோ, அவங்களோட உறவுக்கு இன்னியோட தலை முழுகிடறேன். இனிமே எனக்கு எல்லாமே நீங்கதான்.'' மனைவியின் ஆவேசத்தைப் பார்த்து, அன்போடு அவளை அரவணைத்துச் சமாதானப்படுத்தினான் சுபாஷ்.



"என் நாய் புத்திசாலி, தினமும் பேப்பரைக் கவ்வி வரும்!"

"இதில் என்ன புத்திசாலித்தனம் இருக்கிறது?"

"அது கவ்வி வருவது அடுத்த வீட்டுப் பேப்பரை."

- வலங்கைமான் நூர்தீன்

''சுனந்தா! என்ன இருந்தாலும், அவங்க பெரியவங்க. ஜாதி விட்டு ஜாதி கல்யாணத்தை அவங்களால அவ்வளவு சுலபமா ஜீரணிக்க முடியாதுங்கறது உண்மை. அவங்களோட எண்ணத்தை நாமளும் மதிக்கக் கத்துக்கணும்.....''

சுனந்தாவை, சுபாஷ் பொக்கிஷமாகத் தான் பாதுகாத்தான்.

பழைய நினைவுகளிலிருந்து மெல்ல விடுபட்டுச் சுய நினைவுக்கு வந்த சுனந்தாவுக்குத் தன் மீதே ஒரு கழிவிரக்கம் ஏற்பட்டது. சுய பச்சாதாபத்தில் உருகினாள்.

'அவன் உன்னை எத்தனை நாள் வெச்சுக்கறான்னு பார்க்கலாம்'னு எங்க வீட்டுல சவால் விட்டாங்களே. உண்மையிலேயே பிரச்னை ஆரம்பமாயிடுச்சா?

எண்ணங்களைப் பலவந்தமாக உதறி விட்டு, வீட்டு வேலையில் மனத்தைச் செலுத்த முயன்றாள்.

ஊரிலிருந்து சுபாஷ் திரும்பி விட்டான். வழக்கம் போல் எல்லாம் நடந்தது. சுனந்தா தன் மன உளைச்சலை அதிகம் காண்பித்துக் கொள்ளவில்லை.

இரண்டு நாள் கழித்து மெதுவாக ஆரம்பித்தாள்.

''ஏங்க, எங்க ஆபிஸில கொலீக் ஒருத்தருக்கு அவசரப் பணத் தேவை. பழைய காலத்து அட்டிகை ஒன்றை விற்கிறார். நான் பி.எஃப் லோன் போடலாம்னு நினைச்சிருக்கேன். நீங்களும் போட்டீங்கன்னா, வாங்கிடலாம்.''

''இப்ப அதுக்கு என்ன அவசரம் சுனந்தா? பார்த்துக்கலாம். அதுவுமில்லாம இப்ப பி.எஃப்ல லோன் ஒண்ணும் போட முடியாது.''

''ஏன்?''

''ஏன்னா, அப்படித்தான். பின்னாடி ப்ளாட் வாங்கணும்னா வேணும்.''

அத்தோடு, அவனை வற்புறுத்தாமல் விட்டு விட்டாள். ஆக, அவன் பொய் சொல்கிறான் என்பது ஊர்ஜிதமாகிவிட்டது. லோன் போட்ட விஷயத்தையே மறைத்து விட்டானே!

கணவன் மேல் இருந்த நம்பிக்கையும், மதிப்பும் குறைந்து போய், ஏதோ விஷயம் இருக்கிறது என்று மனம் குடைய ஆரம்பித்தது. அவன் வாயிலிருந்து உண்மையை எப்படியாவது வரவழைத்து விட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

அன்று ஆபிஸில் அவளை யாரோ வயதானவர் பார்க்க வந்திருப்பதாகப் பியூன் வந்து சொன்ன போது, யாராக இருக்கும் என்று யோசனை செய்து கொண்டே வந்தாள்.

அப்பா!

'இவர் எதற்கு வந்தார்?' அவரைப் பார்க்கக்கூட பிடிக்காமல், முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''அம்மா, சுனந்தா! உன்னோட கோபம் நியாயம்தாம்மா. முதல்ல என்னை மன்னிச்சுடு. நீயும், மாப்பிள்ளையும் கொடுத்த பணம்தான் எங்க மானத்தைக் காப்பாத்தி இருக்கு. வாழா வெட்டியா வந்த உங்க அக்காவை வாழ வெச்சிருக்கு.

''நான் எவ்வளவு பேசியும் அதை மனசுல வெச்சுக்காம நீயும், மாப்பிள்ளையும் சமயத்துக்குச் செஞ்ச இந்த உதவியை என்னால மறக்கவே முடியாது. மாப்பிள்ளை, ஜாதியில ஒண்ணுமில்லே,




''ஃப்ரெஷ்டேஸ் என் அன்றாடப் பழக்கங்களில் ஒன்றாகிவிட்டது. ஆபீஸிலும் சரி, சதா மீட்டிங்னு அலையும்போதும் சரி, நான் எத்தனை புத்துணர்ச்சியுடனும், தன்னம்பிக்கையுடனும் இருக்கேன் தெரியுமா...''


*''ஒரு பேண்ட்டி லைனர் இத்தனை சௌகரியம் தருகிறதா?''*

''நிச்சயமா. இது ஈரக்கசிவையெல்லாம் உறிஞ்சிக் கொண்டு விடுகிறது. வெளிப்படுவதுகூட எனக்குத் தெரிவதே இல்லை! அட! டியோடரண்ட்பற்றி சொல்ல மறந்துட்டேன்!''

*''டியோடரண்டா! இன்னும் என்னென்ன இருக்கு?''*

இது ரொம்ப சின்னதா, மெல்லிசா இருக்கறதால, அணிந்திருக்கும் உணர்வே தெரியாது. கைவசம் என் ஹேண்ட்பேகில் எப்பவுமே ஒண்ணு இருக்கும். சில சமயம் ஆபீஸ் விட்டதும் அப்படியே சிலரைப் போய் பார்க்க வேண்டியிருக்கும். பேண்ட்டியை மாற்ற முடியாது. அப்ப இது எவ்வளவு சௌகரியம் தெரியுமா?''

*''சரி, சரி! நான் ஒப்புக்கறேன்.''*




**ஃப்ரெஷ்டேஸ் பேண்ட்டி லைனர்... எப்போதும் புத்தம்புதிய பேண்ட்டி அணிந்திருக்கும் உணர்வு.**

வேலை செய்யும் போது, பயணத்தின் போது, உடற்பயிற்சியின் போது, கர்ப்பமாக இருக்கும் போதும்.

**ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்**

Freshdays is a TM of J&J, U.S.A.

everest/91/JJ/284 tm

மனிதாபிமானம்தான் சிறந்ததுன்னு நிரூபிச்சிட்டார்மா. நம்ம ஜாதியிலேயே பண்ணிக்கிட்ட பெரிய மாப்பிள்ளையாலேதான் எத்தனை கஷ்டம்? நான் நல்லாப் புரிஞ்சிக்கிட்டேன்மா. உங்க வீட்டுக்கே வந்து இதைச் சொல்லணும்னுதான் ஆசை. ஆனா உனக்குப் பிடிக்காதோன்னு நினைக்கத்தான் இங்கே வந்தேன்.

''நீயும், மாப்பிள்ளையும் அவசியம் வீட்டுக்கு வரணும்மா.''

கண்களில் கண்ணீர் தளும்பி அவர் பேசி முடிக்க, மெள்ள, மெள்ள பெரிய மூச்சுத் திணறலிலிருந்து விடுபட்ட மாதிரி இருந்தது சுனந்தாவுக்கு.

''என்னம்மா! உடம்புக்கு என்ன? ஏன் கண்ணெல்லாம் கலங்கி இருக்கு? ஆபீஸில ஏதாவது பிராப்ளமா?'' அன்றிரவு அன்புடன் அவள் தலையைக் கோதியவாறு கேட்ட கணவனைப் பார்த்ததும் துக்கம் பீரிட்டுக் கொண்டு வந்தது. அவன் நெஞ்சில் முகம் புதைத்து விசித்தாள்.

''என்னம்மா? விஷயத்தைச் சொல்லு.''

''நீங்க பி.எஃப் லோன் போட்டீங்கல்ல?''


''ஓ! விஷயம் உனக்குத் தெரிஞ்சு போச்சா! இதுக்காகவா அப்ஸெட் ஆயிருக்கே.....''

''இதுக்காகவான்னு சுலபமா கேக்கறீங்க. ஏன் என்கிட்டே மறைச்சீங்க? இதுவரைக்கும் என்கிட்டே சொல்லாம எதையாவது செஞ்சிருக்கீங்களா?''

''இப்ப, உங்க அப்பா வந்து விஷயத்தைப் போட்டு உடைச்சுட்டாராக்கும். என்னை மன்னிச்சுடு சுனந்தா! உங்க அப்பா மேல இருக்கற வெறுப்புல, அவருக்கு உதவி பண்ணக்கூடாதுன்னு மறுத்துடுவியோன்னு தான், நானே பணம் கொடுத்துட்டேன். அப்புறமா மெதுவா விஷயத்தைச் சொல்லலாம்னு நினைச்சேன். அதுக்குள்ளே, அர்ஜென்ட்டா ஆபீஸ் டூர் போக வேண்டி வந்துடுச்சு.....''

''ஆமாம்! இப்ப ரொம்ப சுலபமா விளக்கம் சொல்றீங்க... ஆனா இவ்வளவு பெரிய விஷயத்தை நீங்க மறைச்சதாலே எவ்வளவு மனக் கஷ்டம் பட்டேன் தெரியுமா....? உண்மையைப் புரிஞ்சுக்காம உங்களை ரொம்ப தப்பா நினைச்சு, ஒரு வாரமா மனசால நான் பட்ட வேதனை இருக்கே, கொடுமைங்க. இப்படி வேண்டாத சந்தேகம் வர்றதுக்கும்... பின்னாலே அப்படி சந்தேகப் பட்டோமேன்னு நான் மனசு நொந்து போகிறதுக்குப் நீங்க இடம் கொடுத்துட்டீங்களே....?!''

உடைந்து போய் அழுத மனைவியைச் சமாதானப்படுத்தினான், சுபாஷ்.



## பம்பாய்க் கடிதம் :

# ஏ.ஸி. வசதியுடன் வாழும் விவசாயிகள்!

பழ வியாபாரத்திற்குப் பெயர் பெற்ற பம்பாய் க்ராஃபோர்டு மார்க்கெட்டில் எங்கும் கண்கவரும் பச்சை வண்ண திராட்சைக் கொத்துக்கள்தான்! நாசிக்கில் மட்டும் ஒரு சீஸனுக்கு 60,000 டன்னுக்கு மேல் திராட்சை பயிராகிறது! ஒரு ஏக்கருக்கு 12 டன் வரை விளையும் இது. பயிரிடுபவருக்கு ரூ 70,000 வரை (ஏக்கருக்கு) லாபம் கொடுக்கும். திராட்சை பயிரிட்டு வாழும் 2000 குடியானவர் குடும்பங்கள், செல்வச் செழிப்பில் அறைக்கு ஒரு டீ.வி.யும், ஏ. ஸி. வசதியும், வாஷிங் மிஷினுமாக வாழ்கின்றனர்! இங்கு விளையும் திராட்சை அழகாக பேக் செய்யப்பட்டு அமெரிக்கா, ஐரோப்பா, அரபு நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி ஆகிறது!

## மாம்பழம் டஜன் ரூ. 400/-

அல்போன்ஸோ மாம்பழங்கள், இந்த ஆண்டு சீஸனுக்குச் சற்று முன்னதாகவே வர ஆரம்பித்து விட்டன. விலைதான் எட்டாத உயரத்தில். டஜன் ரூ. 300 முதல் ரூ 400 வரை! ஏப்ரல், மே, மாதங்களில் பாதியாகக் குறையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ரத்னகிரி மாவட்டம், கோவா போன்ற கடற்கரைப் பகுதிகளிலிருந்து இவை பம்பாய்க்கு வருகின்றன.

## ஸ்டேட் பாங்க் குபேரர்கள்!

நூறு ரூபாய்க்கு வாங்கப்பட்ட ஸ்டேட் பாங்க் பங்கு, மார்ச் 6 ஆம் தேதி ரூ 22,000க்கு விற்கப்பட்டது! பின்னர் அது ரூ 12,000க்கு இறங்கி, மீண்டும் ஏறுமுகத்தில் இருக்கிறது. இந்தப் பங்கை 'ரைட்ஸ்' சலுகையில் வாங்கிய ரிசர்வ் பாங்க், ஸ்டேட் பாங்க் அலுவலர்கள் பலர் இன்று குபேரர்கள் ஆகியிருக்கிறார்கள்! ஆயிரக் கணக்கானோர் கூட்டோடு கூட்டாக இவற்றை விற்க முயல, 'பங்கு மாற்றம் வேண்டி மனுக்கள் வந்து குவிந்த வண்ணமே இருக்கின்றன' என்கிறது ஸ்டேட் பாங்க் மெயின் பிராஞ்ச்!

## விபத்துக்களைத் தடுக்க விளம்பரங்கள்:

பம்பாய் டிராஃபிக் போலீஸார் விபத்துக்களைக் குறைக்க விளம்பரத் துறையின் உதவியை நாடுகிறார்கள். "உங்கள் கார் எவ்வளவு வேகமாகப் போகிறது என்று இங்கு பரீட்சித்துப் பார்த்தால், உங்கள் வாகனம் இதுவாகத்தான் இருக்கும்" என்ற விளம்பரப் பலகையோடு ஊனமுற்றோர் உபயோகிக்கும் ஒரு சக்கர நாற்காலி சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது! மற்றொரு விளம்பரப் பலகையில் "உங்களுக்கு இந்த வாகனத்தில் பயணிக்க ஏன் ஆசை?" என்ற வாசகத்துடன் முப்பரிமாணத்தில் ஒரு ஆம்புலன்ஸ் வேன்!

## முன்னணியில் மகாராஷ்டிரம் :

வருடாந்திரத் தொழில் துறை சர்வே, மகா ராஷ்டிரம்தான் மிக அதிகமாகத் தொழில்மயமாக்கப்பட்ட மாநிலம் என்று சுட்டிக்காட்டுகிறது. இந்தியாவின் மொத்தத் தொழில் உற்பத்தியில் 21% மகாராஷ்டிரத்தில் தான். சென்ற ஆண்டு புதிதாகத் துவக்கப்பட்ட தொழில்களில் 22% மகாராஷ்டிரத்தில்! இம் மாநிலத்தில் ஒவ்வொரு ஒரு இலட்சம் மக்களில் 1674 பேர் தொழிலகங் களில் வேலை செய்கிறார்கள். குஜராத் (1738 பேர்), பஞ்சாப்(1724 பேர்) மாநிலங்களுக்கு அடுத்தபடி மூன்றாவது இடத்தை வகிக்கிறது மகாராஷ்டிரம்.

## போலீஸ் - பயங்கரவாதிகள் யுத்தம் :

"பம்பாயின் பாந்த்ரா மலைப்பகுதிக் குடிசைகளில் பஞ்சாப் பயங்கரவாதிகள் ஏராளமான ஆயுதங்கள், வெடிமருந்துகளுடன் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள்" என்ற செய்தி கிடைத்ததும் பம்பாய் போலீஸ் தனது பயங்கரவாதிகள் எதிர்ப்புப் படை (Anti Terrorist squad) யுடன் அப்பகுதியை வளைத்துக் கொண்டது. பயங்கரவாதிகள், குடிசைகளுக்கு நெருப்பு வைத்து விட்டு, அந்தக் கலவரத்தில் தப்பியோடப் பார்த்த போது போலீஸின் குண்டுகளுக்கும், தாங்களே வைத்திருந்த வெடிமருந்துகளுக்கும் இரையாகி மாண்டார்கள். பயங்கர வாதிகளின் வேலைகள் பஞ்சாபை விட்டு வெளி மாநிலங்களுக்கும் பரவி வருவதைக் கண்டு மகாராஷ்டிர அரசு எதிர்ப்புப் படைக்காக 144 கான்ஸ்டபிள் பதவிகளை உண்டாக்கி இருக்கிறது. அரசாங்கரீதியாகப் புது வேலை வாய்ப்புக்களை உருவாக்கத் தடை இருந்த போதிலும் இதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

- ராஜீவி நரசிம்மன்

நீங்கள் கேட்டவை - தராசு

# கே.ஏ. கே.யிடம் வாங்கிக் கட்டிக் கொண்டீர்களா?



மதிப்பதும் ஏற்பதும்

● கோ. குப்புசாமி, கோரணம்பட்டி.

? ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி அடிக்கடி பாத யாத்திரை நடத்துகிறாரே?

! தப்பித் தவறி திரும்பவும் பதவிக்கு வந்து விட்டால் பாத யாத்திரை மறுபடி தனி விமான யாத்திரையாக மாறி விடும்!

● பி. குமார், சேலம்.

? உலக நாடக தினத்தையொட்டி ஒளிபரப்பப்பட்ட நாடகம் பற்றி..?

! புதுமை நாடகம் புரியக்கூடிய நாடகமாகவும் இருந்தால் நல்லது.

● முத்து ஆனந்த், வேலூர்.

? ஒவ்வொரு கட்சியுமே பச்சை குத்திக் கொள்வதைக் கொள்கைகளில் ஒன்றாக்கி விட்டால்...?

! ''நாங்கள் பதவிக்கு வந்தால் மக்கள் எல்லோருக்கும் பச்சை குத்தி விடுவோம்'' என்று தேர்தல் அறிக்கையில் சேர்ப்பார்கள். வழக்கம் போல் மக்கள் அதை சீரியஸாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள்! அவர்களும் வாக்குறுதியை நிறைவேற்ற மாட்டார்கள்!

● என். கே. ஈசுவரி, பெங்களூர்.

? சினிமா தலைப்புக்களில் மட்டும் ஜாதிகள் தலைகாட்டலாமா?

! அது கதையையும், நிலைக்களனையும், கதை நடக்கும் காலகட்டத்தையும் பொறுத்தது.

● இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.

? 'தேசத்தின் ஒற்றுமை காங்கிரஸ் கட்சியின் ஒற்றுமையைப் பொறுத்தது' என்று பிரதமர் நரசிம்மராவ் கூறியிருப்பது எந்த அளவுக்குச் சரி?

! இன்றைய ஆட்சி நிலைப்பது இந்தியாவுக்கு அவசியம். இன்றைய ஆட்சி நிலைக்க, காங்கிரஸுக்குள் ஒற்றுமை அவசியம். ஆக, யோசித்தால் பிரதமர் கூற்றில் உண்மை இருப்பது புரியும். ஆனால் எந்த காங்கிரஸ்காரர் யோசிக்கிறார்?

● எஸ். அருள்மொழி, காட்டூர்.

? 'வீட்டில் பெரியவர்கள் தரும் மெஸ்ஸேஜையே கேட்டு நடக்காத நாம் நாடகம் மூலம் சொன்னால் மட்டும் கேட்டு நடக்கப் போகிறோமா? எனவே, நாடகத்தில் பொழுதுபோக்கு அம்சம் இருந்தால் போதும்' என்கிறாரே கிரேஸிமோகன்.

! இது கிரேஸி ஐடியா. உண்மை அல்ல. வீட்டில் பெரியவர்கள் நேரடியாகப் புத்தி மதி சொல்வார்கள். அதையே நாடகம் கதையுடன் இணைத்து உணர்ச்சிகரமாகச் (நகைச்சுவை உணர்வாகவும் இருக்கலாம்) சொல்கிறது. முன்னதை விடப் பின்னதற்கே வலிமை அதிகம். இது பல சந்தர்ப்பங்களில் (காந்திஜி வாழ்க்கை வரலாறு உள்பட) நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இலக்கு உள்ளதே இலக்கியம். சிந்தனை தான் மாற்றங்களின் விதை; முன்னேற்றத்தின் முளை. கிரேஸி கூறுவது போல் உலக மகா படைப்பாளிகள் நினைத்திருந்தால் இந்த உலகம் பண்பாட்டில் இன்னும் பரம ஏழையாகவே இருக்கும்.

● கமலேஸ்வரன், சத்தியமங்கலம்.

? 'நமது எம். ஜி. ஆர்.' வாங்கப் பணம் உள்ள நூலகத்துக்கு 'தினமணி' வாங்கப் பணம் இல்லையாமே? என்ன சார் இது, நியாயம்?

! தினமணி மட்டுமல்ல; வேறு பல நல்ல சஞ்சிகைகளையும் வாங்கப் பணம் இல்லாதது காரணமல்ல; மனமில்லாததே காரணம்.

● ஆர். கோபாலன், ஸ்ரீரங்கம்.

? சுமார் 150 ஆண்டுகளாக வெளிவந்த ஆங்கில இதழ் 'பஞ்ச்' நின்று போகக்கூடிய அளவுக்கு வாசகர்களின் ரசனை மாறியது வருந்தத்தக்கதுதானே!

! வாசகர்களின் ரசனை மாறியதற்கு ஏற்ப பஞ்ச் மாறாமல் இருந்ததும் வருந்தத்தக்கது தான். ஓரளவு விட்டுக் கொடுத்திருக்கலாம்.

கிரேஸி ஐடியா



அழையா விருந்தாளி?



● மல்லிகை மன்னன், மதுரை.

***? 'அழையா விருந்தாளியாகத்தான் நான் மனமின்றி சட்டசபைக்குச் சென்று வருகிறேன்' என்று மனம் வருந்திச் சொல்லி இருக்கிறாரே பண்ருட்டி?***


! மக்கள் வோட்டுப் போட்டு சட்டசபைக்கு இவரை அனுப்பியிருக்கும் போது, அங்கே அமர, பேச இவருக்கு உரிமை இருக்கும் போது, இதென்ன அர்த்தமற்ற பேச்சு! யார், யாரை விருந்தினராகக் கருதி அழைப்பது? வோட்டளித்த மக்கள் இவருக்கு முன்னால் சட்டசபையில் போய் அமர்ந்து கொண்டு 'வாங்க, வாங்க' என்று வ்ரவேற்கவா முடியும்?



தேச ஒற்றுமை...



கை விரிப்பு



பாதயாத்திரை...

● கே. முத்துசாமி, நாரேந்தல்தோப்பு.

***? உலக கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் நிலைமை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?***

! தோற்றதைக் கூட ஸ்போர்ட்டிவ்வாக எடுத்துக் கொண்டு விடலாம். ஆனால் தோற்றதற்குக் காரணம் என்று ஆளாளுக்கு ஒன்று கூறி, அப்புறம் 'நான் அப்படிச் சொல்லலை, இப்படித்தான் சொன்னேன்' என்று விளக்கம் சொல்லி... கஷ்டமடா சாமி!

● எம். பிரபு, குமராட்சி.

***? இந்த மாதத்தில் தங்கள் மனத்தை நெருடியது...?***

! அதற்கென்ன பஞ்சம்! அ. தி. மு. க. எம். எல். ஏ. தாக்கப்பட்டது; 'காரணம், அவர் சொந்த விவகாரம்' என்று 'ஜெ' விளக்கம் அளித்தது; 'மாமூலை சட்டபூர்வமாக்கலாம்' என்ற யோசனை; 'அப்படியானால் அதற்கு வரி விதிக்கலாமே' என்ற நெடுஞ்செழியனின் ஆசை; 'என்னைக் கொல்ல புலிகள் ஊடுருவல்' என்ற 'ஜெ'யின் அறிக்கை; 'ஊடுருவலுக்குச் சான்று இல்லை' என்ற போலீஸ் அதிகாரியின் கூற்று; 'உள்துறை அமைச்சகத்துக்கு உ. பி. அரசு அனுப்பிய கடிதம் பற்றி எனக்குத் தெரியாது' என்று எஸ். பி. சவான் கை விரித்த சம்பவம்; சுந்தரலிங்கம் தோரண வாயில் என்று ஏற்கெனவே ஒன்று இருக்க, கருணாநிதி வாயிலில் அவர் பெயரை நீக்கி, 'சுந்தரலிங்கம் தோரணவாயில்' என்று பெயர் சூட்டப்போவதாக முதல்வரின் அறிவிப்பு... ரொம்பச் சொன்னால் போரடிக்கும்!

● த. சத்தியநாராயணன், அயன்புரம்.

***? மாணவர் காங்கிரஸ் மாநாடு எப்படி?***

! காங்கிரஸ் ஒற்றுமை மாநாடு ஒன்று அவசியம் என்பதை உணர்த்திய வன்முறை மாநாடாக விளங்கியது.

● ஆர். சுப்பாராவ், திருக்கோவலூர். ❑

***? தமிழக சட்டசபையில் மீண்டும் 'பாஞ்சாலி புராணம்' அரங்கேறுகிறதே, என்ன கோளாறு?***

! 'அவைக் குறிப்புக்கள் எழுதப்பட்ட விதத்தில் கோளாறு' என்று ஒரு தரப்பும் 'இன்றைய முதல்வர் அன்று நடந்து கொண்ட விதத்தில் கோளாறு' என்று மறு தரப்பும் கூற, நமக்குப் புரிவது, இருதரப்பிலும் உள்ள மனக் கோளாறு!

● ரகுவீர், சென்னை.

***? கே. ஏ. கே. யிடம் வாங்கிக் கட்டிக் கொண்டீர்கள் போலிருக்கே?***

! அவர் கருத்துக்களை மதிக்கிறேன்; ஆனால் முழுமையாக ஏற்கவில்லை. என் வாதத்தில் வலுவுண்டு என்பதற்கு மீண்டும் ஒரு சான்று கிடைத்திருக்கிறது. ஜெயின் பிறந்த நாள் அன்று விடுவிக்கப்பட்ட இன்னொரு கைதியான கணேசனும் மறுபடி சிலை திருடி சகாக்களால் கொல்லப்பட்டான். சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டாலொழிய நமது நீதிமுறை ஒருவனை தண்டிப்பதில்லை. மேல் கோர்ட்டு வேறு கருணையோடு கவனிக்கிறது. மற்றொரு முக்கிய விஷயம் : மேல்நாடுகளில் தண்டனை பெறும் குற்றவாளிகள் மன நோயச் சிகிச்சை பெற வாய்ப்புண்டு. இங்கு அதெல்லாம் கிடையாது. உதாரணம், அண்மையில் டைசனுக்கு அளிக்கப்பட்ட தண்டனை, அவன் மனநோய் மருத்து வரை நாட வேண்டும் எனவும் விதிக்கிறது!

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
ஆர். சுப்பராவ்,
94, கீழ வீதி,
திருக்கோவலூர் – 605 757.


சோப்பும் ஷாம்பும் இனி எதற்கு
'உதயம்' பாத் பவுடர்
இருக்கவே இருக்கு
To open, twist and pull cap
UDAYAM
BATH POWDER
Siddha Proprietory Medicine
Nett Contents 200 Gms
''உதயம்'' பாத் பவுடர்
★ புதுமையானது.
★ புனிதமானது.
★ கேசத்திற்கு புத்துணர்வு தருகிறது.
★ உடலுக்கு பாதுகாப்பு தருகிறது.
★ கேசத்திற்கு, உடலுக்கு இரண்டுக்குமே புத்துணர்வும், புதுமலர்ச்சியும், நறுமணத்தையும் மேனிக்கு பளபளப்பையும் தருவது ''உதயம்'' பாத் பவுடர்.
''உதயம்'' பாத் பவுடர்
★ இது ஒரு ஆயுர்வேத மூலிகைகளின் கூட்டு! இதற்கு இணையென்பதே வெத்து வேட்டு
★ இனி தேவையேயில்லை சோப்பும், ஷாம்பும்
★ உடலுக்கு பாதுகாப்பு தரவல்ல மூலிகைகளால் தயாரிக்கப்படுகிறது.
★ உங்கள் மேனி நாள் முழுவதும் சந்தன மணம் கமழும் புத்துணர்ச்சியுடன் இருக்கும்.
★ உங்களின் மலர்ந்த முகத்தை மேலும் சிவக்க செய்து மென்மையான மேனியையும் மெருகேற்றி மிளிர செய்கிறது.
★ முகத்திலுள்ள பருக்களையும், கரும்புள்ளி களையும் நீக்கி முகத்தை பளிச்சிடச் செய்கிறது.
★ வாலிபர்களுக்கு வசந்தத்தை கூட்டுவது வயோதிகர்களுக்கு இளமையை ஊட்டுவது உங்கள் ''உதயம்''.
★ மொத்தத்தில் இதற்கு ஈடு இணை உலகில் ஏதுமில்லை. உங்களின் இதயத்தில் ஐக்கியமாகும் ''உதயம்'' என்பதில் எங்களுக்கு ஐயமில்லை.
Manufacturers: M/s. KALI SIDDHA PRODUCTS, DARASURAM - 612 702, KUMBAKONAM, INDIA.
PHONE: 23589 FAX: 0435-21570 TELEX: 0467-206



வீணை சிட்டிபாபு

# கலைக் கோயில்: ஒரு 'கிளாசிக்'!

எல். வி. சுப்பையா வந்து சேர்ந்ததும் அவரிடம், அவர் நடிக்க வேண்டிய கதா பாத்திரம் பற்றிச் சுருக்கமாகக் கூறினேன். அவருக்கு ரொம்பவும் பிடித்துப் போயிற்று. மகிழ்ச்சியுடன் நடிக்கச் சம்மதமளித்தார். இதுதான் சமயமென்று நான் மெதுவாக அடுத்த தர்மசங்கடமான விஷயத்தை வெளியிட்டேன் : ''இந்தக் கதாபாத்திரம் தாடியுடன் இருந்தால் நன்றாயிருக்கும் என்று நினைக்கிறேன்; கங்காவும் அப்படியே ஸ்கெட்ச் போட்டிருக்கிறார்....''

நான் சொல்லி முடிப்பதற்குள் சுப்பையாவின் சந்தோஷம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. ''என்ன தாடி ஒட்டிக் கொள்ளணுமா? நம்மால் முடியாது ஸார்! வேறு யாரையாவது 'புக்' பண்ணிக்குங்க'' என்று கூறியபடி எழுந்து விட்டார்!

என்ன காரணமென்றே தெரியவில்லை. சுப்பையாவுக்கு தாடி 'மேக் அப்' என்றாலே அப்படி ஒரு அலர்ஜி!

புறப்பட யத்தனித்த சுப்பையாவை நான் தடுத்து நிறுத்தி, ''நான் சொல்றதைக் கொஞ்சம் கேட்டுக்குங்க; பிறகு உங்க முடிவு என்னவானாலும் சரி'' என்று சொல்லி விட்டு, அவர் நடிக்க வேண்டிய காரெக்டரின் சிறப்பை விளக்கினேன்; அத்துடன் கங்கா வரைந்திருந்த ஸ்கெட்சுகளைக் காட்டி, அதே நேரத்தில் அவர் பேச வேண்டிய அர்த்தமுள்ள வசனங்கள் சிலவற்றையும் எடுத்து விட்டேன்!

கேட்கக் கேட்க, சுப்பையாவுக்கு அந்த ரோலை மறுக்க மனசே வரவில்லை! ''சரிங்க, உங்களுக்காக என் கொள்கையைத் தளர்த்தி, இந்த ஒரு படத்தில் மட்டும் தாடி வைத்துக் கொண்டு நடிக்க ஒப்புக் கொள்கிறேன்'' என்றார்!

அவ்வளவுதான், யூனிட்டில் ஒரே சந்தோஷம்; ஒரே பரபரப்பு! அடுத்த சில நிமிஷங்களிலேயே ஷூட்டிங் ஆரம்பமாகி விட்டது!

கலைக் கோயில் படத்தில் ''தங்க ரதம் வந்தது'' என்று ஒரு பாடல். சூப்பர் ஹிட் ஆன பாடல் அது. இன்றும் பலருக்கு நிச்சயம் நினைவிருக்கும். இன்று கேட்டாலும் மெய்மறக்கச் செய்யும். அந்தப் பாடலைப் பாடியது யார் தெரியுமா? பாலமுரளி கிருஷ்ணா! இதில் ஆச்சர்யம் என்னவென்றால், அப்போதெல்லாம் அவர் சினிமாவில் பாட ஒப்புக் கொள்வதில்லை. ஆனால் எனக்கு பாலமுரளிதான் அதைப் பாட வேண்டும் என்று ஆசை. அவருடன் தொடர்பு கொண்டு ''டியூனைக் கேட்கச் சம்மதியுங்கள்; பிறகு விரும்பினால் பாடுங்கள், இல்லையென்றால் வேண்டாம்'' என்றேன். அவரும் இதற்கு மனமுவந்து சம்மதித்தார். டியூனைக் கேட்டாரோ இல்லையோ, ''இந்தப் பாட்டை நான்தான் பாடப் போகிறேன்'' என்று தமக்கே உரிய அழகிய சிரிப்புடன் அழுத்தம் திருத்தமாகக் கூறி விட்டார்!

கலைக் கோயில் படத்தின் கதை ஒரு வீணை வித்வான் பற்றியது. எனவே படம் முழுவதும் ஒரு சிறந்த வீணை வித்வானின் இசையைப் பயன்படுத்த வேண்டியிருந்

டைரக்டர் ஸ்ரீதர்





☛ பாலமுரளி கிருஷ்ணா

☛ எம். வி. சுப்பையா

தது. இதற்கு முழு ஒத்துழைப்புத் தந்தவர் வீணை சிட்டிபாபு.

படம் முடிந்தது. இசை, நடிப்பு, திரைக்கதை - வசனம், டைரக்ஷன் எல்லாமே அற்புதமாக அமைந்திருப்பதாக விமர்சனங்களும் வாழ்த்தின. ஆனால் படம் வர்த்தக ரீதியில் வெற்றி பெற வில்லை.

படம் ரிலீஸான சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாடக விழாவுக்குத் தலைமை தாங்கப் போயிருந்த இடத்தில் எனக்கு அருகில் அமர்ந்திருந்த சௌந்தரா கைலாசம், ''கலைக் கோயில் பார்த்தேன். ஸ்ரீதர்! இதுபோன்ற படங்களை நீங்க நிறைய எடுக்கணும்'' என்றார்.

நான் சற்று விரக்தியுடன், ''நிறைய என்ன, இதுபோல இன்னும் ஒரு படம் எடுத்தாலே போதும்; நான் நடுத் தெருவுக்கு வந்து விடுவேன்'' என்று சொன்னேன்.

விரக்தி ஒருபுறமிருந்தாலும், 'சிறந்த படம்' என்ற நல்லறிஞர்களின் பாராட்டு ஒரு பக்கம் திருப்தி அளிக்கவும் செய்தது. ஆனால் அது மட்டும் போதுமா, சொல்லுங்கள்! திரைப்படத் துறையில் மட்டுமல்ல; கலை உலகின் பல்வேறு பிரிவுகளிலும் இந்தப் பிரச்னை இன்றும் நிலவுகிறது. தமிழக மக்கள்தான் இதற்கு ஒரு நல்ல தீர்ப்பு வழங்க வேண்டும்.

கலைக் கோயில் பற்றிய நினைவுகளை எழுதி முடிக்கு முன்னர் முத்துராமன் எனக்கு அளித்த ஒத்துழைப்பு பற்றிச் சில வார்த்தைகள் சொல்லியாக வேண்டும். 'நெஞ்சில் ஓர் ஆலயம்' தொடங்கி, தொடர்ந்து பல படங்களில் அவருக்கு நான் வாய்ப்பு அளித்து வந்தேன். மற்ற பல படாதிபதிகளும் அவரை நாட, சினிமா உலகில் அவர் ரொம்ப 'பிஸி'யாகி விட்டார். ஆனாலும் கூட அவர் தம்மை அணுகும் அத்தனை புரொட்யூஸர்களிடமும் ஒரு கண்டிஷன் போடுவார். அது என்ன தெரியுமா? ''உங்கள் படத்துக்குத் தேதி கொடுக்கிறேன்; ஆனால் ஒன்று; என் வைத் திரை உலகுக்கு அறிமுகம் செய்து வைத்த ஸ்ரீதர் கால்ஷீட் கேட்டார் என்றால் அவருக்குத்தான் முன்னுரிமை. உங்களுக்குத் தேதி அட்ஜஸ்ட் செய்து கொடுப்பேன்'' என்று சொல்வார். அந்த அளவுக்கு அவர் என் மீது மதிப்பும் அன்பும் வைத்திருந்தார். முத்துராமன் போன்ற ஜென்டில்மன் சினிமாத் துறையில் மட்டுமல்ல; எந்தத் துறையிலும் அபூர்வம்தான்.

'காதலிக்க நேரமில்லை' அடைந்த மிகப் பெரிய வெற்றியைப் பார்த்து விட்டு அதனை இந்தியில் தயாரிக்கும் உரிமையைப் பெற, வட இந்தியத் தயாரிப்பாளர்கள் பலரும் போட்டியிட்டனர். பிரபல இந்திப் படத் தயாரிப்பாளர் குல்ஷன் ராய் ஐந்து லட்ச ரூபாய் தர முன்வந்தார். அந்தக் காலத்தில் ஐந்து லட்சம் என்பது மிகப் பெரிய தொகை. ஆனாலும் நான் விட்டுக் கொடுக்கவில்லை. ''சித்ராலயா தயாரிப்பாகவே இந்தியிலும் வெளியாகும்'' என்று கூறிவிட்டேன்.

அதன்படியே இந்தியில் படமெடுக்க ஏற்பாடுகளைத் தொடங்கினோம். 'பெரிய நடிகர்கள் வேண்டாம்; லோ பட்ஜெட் படமாகவே எடுப்போம்' என்று தீர்மானித்தோம். அதனால்தான் சங்கர் - ஜெய்கிஷனை இந்தப் படத்துக்கு நான் நாடவில்லை. அவர்களுடைய அன்றைய ரேட் இரண்டரை லட்சம் என்பது எனக்குத் தெரிய வந்தது. லோ-பட்ஜெட் படத்துக்குச் சரிப்பட்டு வராது. நட்புக்காக உயிரையே விடக்கூடிய ஜெய்கிஷன், நான் கோடி காட்டியிருந்தால் 'ரேட்'டைக் குறைத்துக் கொண்டிருக்கக்கூடும். ஆனால் நல்ல நண்பராக அவர் இருந்தபடியாலேயே அவரிடம் சலுகை கேட்க எனக்குக் கூச்சமாகவும் இருந்தது. எனவே வேறு ஒரு இசையமைப்பாளரை நாடினேன்.

''நீங்கள் என்ன கொடுத்தாலும் வாங்கிக் கொள்கிறோம்; உங்கள் படத்தில் பணியாற்ற வாய்ப்புக் கிடைப்பதே பெருமை'' என்று மகிழ்ச்சியுடன் முன் வந்த அந்த இசையமைப்பாளர் யார் தெரியுமா?

அதை அடுத்த வாரம் சொல்கிறேன். அத்துடன் 'காதலிக்க நேரமில்லை' இந்திப் படத் தயாரிப்பின் போது எனக்கு ஏற்பட்ட ஒரு மிகப் பெரிய சோதனை பற்றியும் விவரிக்கிறேன்!

குட் பை, டில் தென்!

# எங்களது தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துகள்...

''எனது ஒளிமயமான
எதிர்காலத்திற்கு
ஒரு திடமான பாதை''





எங்களுடன் சேர்ந்து வளருங்கள்!

## அண்ணாமலை பைனான்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்:
252, மேட்டுப்பாளையம் ரோடு, கோயமுத்தூர்-641 043.
போன் : 42224. தந்தி: ''ராஜ்தூத்''. டெலக்ஸ் : 0855-586 AFLIN

கிளைகள்: ● புதுடெல்லி ● பம்பாய் ● பெங்களூர் ● பூனே ● எர்ணாகுளம் ● கோழிக்கோடு ● பாண்டிச்சேரி ● சென்னை - அண்ணாநகர் - பூந்தமல்லி ஹைரோடு - தி.நகர் - மைலாப்பூர் - அண்ணா சாலை ● கோயமுத்தூர் ● ஈரோடு ● கள்ளகுறிச்சி ● காரைக்குடி ● கோபிசெட்டிபாளையம் ● மதுரை ● பொள்ளாச்சி ● சேலம் ● சத்தியமங்கலம் ● திருநெல்வேலி ● திருச்சி ● வேலூர்

# வாஸந்தி 24

## காதலும்

யசோதாவும் வெங்கடேஷும் கிளம்பிப் போய்ப் பத்து நாட்கள் ஆகி விட்டன. ஆனால் அன்று யசோதா கேட்ட கேள்வி இப்பவும் மயான மௌனத்தில் உறங்கும் வீட்டின் மூலை முடுக்கிலிருந்தெல்லாம் திடும்மென்று அவளை நோக்கிப் பாய்வது போலிருந்தது. யசோதா வருவதற்கு முன்பே, இந்தச் சுவர்களுள் அது பதுங்கியிருக்க வேண்டும் என்று தோன்றிற்று. "இங்கேயும் கொஞ்ச நாளா..." என்று மரண வாயிலில் தவித்து நின்ற அப்பாவின் வார்த்தைகளுக்குப் பின்னால் அது பைசாசமாக நின்றிருக்க வேண்டும்.

ஆத்மார்த்த தோழியின் நெருக்கத்துடன் யசோதா மிக மெல்லிய குரலில் கேட்டாள்.

"நீ அந்தப் பையனைக் காதலிக்கிறியா?"

ஒரு வினாடித் தடுமாறிப் போனாள் மீரா. பிறகு சமாளித்துக் கொண்டு, "வாட் டு யூ மீன்?" என்றாள். "நீங்க வெங்கடேஷைக் காதலிக்கக் கல்யாணம் செய்து கொண்ட மாதிரியா?"

"வெல்..."

ஆமாம் என்று சொல்லத் தயங்கும் யசோதாவைக் கண்டு முன்பு போல் பகபகவென்று சிரிக்க முடியவில்லை. கடந்த பதினைந்து நாட்களில் அவளது பால்யம் உதிர்ந்து வாழ்வின் அடுத்த கட்டத்திற்குத் தள்ளப்பட்டது போல் ஒரு புதிய நிதானம் ஏற்பட்டிருந்தது.

"காட்! இல்லே" என்று அவள் தலையசைத்தாள்.

எனக்கு அவன் ரொம்ப நல்ல சிநேகிதன். அமெரிக்காவிலே எரிக் எனக்குச் சிநேகிதனா இருந்த மாதிரி. ஐ லவ் ஹரி. ஆனா நீங்க நினைக்கிற மாதிரி இல்லே."

யசோதா மேற்கொண்டு அதைத் தொடாமல் பேச்சின் திசையைத் திருப்பி விட்டாள். அவள் ஊருக்குக் கிளம்பிச் சென்ற பிறகுதான் அது அப்பாவித்தனமான கேள்வி இல்லை என்று புரிந்தது. அவள் மூலம் அம்மா தனது சந்தேகத்தைத் தெரிவித்தாள் என்று தோன்றிற்று. அப்பாவை வதைத்த கேள்வியாக அது இருந்திருக்க வேண்டும் என்று புரிந்து, மனசு அதிர்ந்தது. அவள் கண்ணை மூடும்போதெல்லாம் கண்ணிமைக்குள் அப்பா நின்றார். "ஸாரி கண்ணம்மா" என்றார். "ஒரு நாளைக்கு என்னைப் புரிஞ்சுப்பே."

இப்போது புரிவது போல் இருந்தது. அப்பாவின் அபரிமிதமான அன்பும், தனது உடல்நிலையைப் பற்றின பயமும்தான் அப்படியெல்லாம் அவர் விபரீதமாகக் கவலைப்பட்டதற்குக் காரணம் என்று விசனமேற்பட்டது. அப்பாவின் மறைவை அம்மா ஆச்சரியகரமான தைரியத்துடன் தாங்கிக் கொண்டது போல் இருந்தது. அவருடைய அன்பினால் கிடைத்த பலமோ அல்லது இந்திய தத்துவார்த்த சமாதானமோ காரணமாக இருக்கலாம். அப்பா கச்சிதமாகத் தான் செய்ய நினைத்ததைச் செய்து விட்டார். அவருடைய அன்பான சுஜாதா வெள்ளைக்காரனின் தேசத்தில் தன்னந்தனியாக 'பிராப்ளம்' குழந்தைகளைச் சமாளிக்க வேண்டியதில்லை. குழந்தைகளை வேரோடு பிடுங்கி இந்திய மண்ணில் நட்டாகி விட்டது. அதில் அவர்கள் துளிர்ப்பதும் துளிர்க்காததும் அவர்களின் பிரச்னை.

அப்பாவின் செய்கையை இத்தனைக் கடுமையாகத் தான் விமர்சிப்பது தவறு என்று மீரா அடிக்கடி தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டாள். அவருடைய உடம்பு ஆரோக்கியமாக இருந்திருந்தால் இப்படிப்பட்ட ஏக்கங்களும் பயங்களும் தோன்றியிருக்காது. ஆனால் இந்தியா வந்த பிறகும் அந்த பயம் வேறுவிதமான பரிமாணங்கள் எடுத்தது ஆச்சரியமாக இருந்தது. ஒரு அங்கஹீன மாணவனைக் காதலித்து என்ன சிக்கலில் மாட்டிக் கொள்வாளோ என்ற பயம். "அவனுடைய சிநேகிதம் கனமாகப் போகும்." அவனது அங்கஹீனத்தைப் பற்றின உணர்வே அவளுக்கு இல்லை என்பதுதான் அவருக்குக் கவலை அளித்திருக்கும். ஒரு இயல்பான அழகிய சிநேகிதத்தைப் பற்றி இப்படிப்பட்ட கற்பனைகள் அவரை வதைத்தன என்று ஹரி அறிந்தால் அதிர்ந்து போவான் என்று அவளுக்குக் கூச்சமேற்பட்டது.

பயம் தெளியாமலே திடும்மென்று அப்பா, "இனிமேல் நீ பொறுப்பெடுத்துக்கணும்" என்று தமது

ஸ்தானத்தை அவனிடம் ஒப்படைத்து விட்டது போல் இருந்தது. அதை நினைத்துக் கவலை ஏற்பட்டது. ஆதாரா ஊன்று கோல்கள் என்று நினைத்தவையெல்லாம் எதிர்பாராமல் முறிந்து அந்தரத்தில் நிற்பது போல் இருந்தது.

"குழந்தை, எழுந்திருக்கல்லியா?'' என்ற பாட்டியின் குரல் கேட்டு மீரா எழுந்தாள். பாட்டியும் தாத்தாவும் தாங்களாகவே இங்கு தங்கி விட்டார்கள். அவர்களால் கூட இந்த முறை அவளுடைய மனத்தளர்ச்சியைப் போக்க முடியவில்லை. டான்ஸ் வகுப்பும் பாட்டு வகுப்பும் இல்லாமல் வீட்டிலேயே முடங்கும்படி ஆயிற்று. பார்வையற்ற மாணவர்களுடன் ஹரியும் எங்கோ கோடைக்கால காம்ப்புக்குப் போயிருந்தான். இப்பொழுதெல்லாம் பாட்டு கேட்கக் கூட உற்சாகமில்லாமல் போயிற்று.

அவள் கீழே இறங்கியதும் ''இன்னிக்கு உனக்கு ரிசல்ட் வருதில்லே?'' என்று அம்மா ஞாபகப்படுத்தினாள். ''ஸ்கூலுக்குப் போய் விசாரி. நாளைக்குத்தான் பேப்பர்லே வரும்.'' அவள் மௌனமாகத் தலையை ஆட்டிப் பால் தம்ளரை வாங்கிக் கொண்டாள். பாட்டி பூஜை செய்யும் மணி ஓசை கேட்டது. அப்பா மணி அடிப்பது போல் பிரமையேற்பட்டது. பாலைக் குடிக்காமல் அவள் அமர்ந்திருப்பதைக் கண்டு அம்மா அவள் தோளில் கையை வைத்தாள்.

''கலகலப்பா இருக்க முயற்சி பண்ணு மீரா. நீ இப்படி இருக்கிறது எனக்கு அதிக துக்கத்தைக் கொடுக்கறது.''

அம்மாவின் முகத்தைப் பார்க்கத் தெம்பில்லாமல் அவள் ''ஸாரி'' என்று முணுமுணுத்தபடி பாலைக் குடித்து, 'சிங்கி'ல் டம்ளரைப் போடும் போது டெலிபோன் ஒலித்தது.. ஹரியாக இருக்கும் என்ற நினைப்பு துளிர்த்துவிட்ட ஆவலுடன் அவள் விரைந்து எடுத்த போது ''வாழ்த்துக்கள்'' என்றான் ஹரி.

# வானவில்

அவன் என்ன சொன்னான் என்று கவனிக்காமல், ''ஏ, நீ எப்ப வந்தே?'' என்றாள் சந்தோஷத்துடன்.



''இப்பத்தான். அம்மா ஸ்கூல்லேர்ந்து போன் பண்ணாங்க. இங்கிலீஷிலேயும் ஸயன்ஸ் க்ரூப்லேயும் ஆல் இந்தியா ஃபர்ஸ்ட் நீ!''

அவளால் நம்ப முடியவில்லை. சட்டென்று பழைய உற்சாகம் தொற்றிக் கொள்ள, தன்னை மறந்து ''ஹே!'' என்று உயரக் கையைத் தூக்கி ஆர்ப்பரித்தாள். டெலிபோன் வாயைப் பொத்தி அம்மாவுக்குச் செய்தி சொன்ன போது வெகு நாள் கழித்து அம்மாவின் முகம் விளக்கேற்றினதைப் போல் பிரகாசமாயிற்று.

''ஸ்கூலுக்குப் போகல்லியா நீ?'' என்றான் ஹரி.

''இப்பப் போறேன். சாயங்காலம் உன்னை வந்து பார்க்கறேன் ஹரி'' என்று போனை வைத்து விட்டு அவள் தன்னைத்



"புருஷன் வீட்டுக்கு வந்த முதல் நாளே உனக்குக் கழுத்து சுளுக்கா... ஏண்டி?"

"என் மாமியார் மாதிரி, மோவா கட்டையைத் தோள் பட்டையில இடிக்க நானும் பதிலுக்குக் காட்டினேன்... பழக்கம் இல்லாததால சுளுக்கு வந்துடுச்சுடி!"

- சீர்காழி வி. ரேவதி

---

தயார்ப்படுத்திக் கொள்ள விரையும் போது, "சிவியுடைய ஆசிர்வாதம் குழந்தைகளை எப்பவும் ரட்சிக்கும் சுஜாதா" என்று பாட்டி சொல்வது காதில் விழுந்தது. அறைக்குச் சென்றதும் அருவமாய்ப் போய் விட்ட அப்பாவிடம் முஷ்டியைத் தூக்கி "டாட், ஐ ஹாவ் மேட் இட்' என்று சொல்கையில் கண்களில் நீர் முட்டிற்று.

பள்ளியில் அவளைக் கண்டதும் மாணவிகள் பெரிய ஆரவாரம் செய்தார்கள். மைதிலி மலர்ந்த முகத்துடன் அவளருகில் வந்து அணைத்துக் கொண்டாள்.

"உன்னாலே ஸ்கூலுக்குப் பெருமை மீரா..." என்ற குரல் நெகிழ்ந்திருந்தது.

"உங்க உதவியில்லாம என்னாலே எதுவும் செஞ்சிருக்க முடியாது மேம்" என்றாள் அவள் உண்மையாக. "நா ரொம்பப் பெரிய தடுமாற்றத்திலே இருந்தேன். அதை நீக்க தான் புரிஞ்சுக்கிட்டீங்க."

"நா இல்லேன்னா வேற யாராவது இருந்திருப்பாங்க" என்றாள் மைதிலி, இலேசாக. "காலேஜுக்கெல்லாம் அப்ளிகேஷன் போட ஆரம்பிக்கணும் மீரா. மேலே என்ன செய்யப் போறே?"

"மெடிகல்லுக்குச் சேரணும்னு ஆசை மேம்."

"உனக்கு சீட் சுலபமாக் கிடைக்கும்" என்றாள் மைதிலி. "ஹரி தில்லிக்குப் போறான் மீரா. அங்கே ப்ளைண்ட் ஸ்கூல்லே வேலை கிடைச்சிருக்கு. எம். ஏ. ஃபஸ்ட் கிளாஸிலே பாஸ் பண்ணியிருக்கான்."

"வாவ்!" என்றாள் மீரா சந்தோஷமாக.

"எனக்குச் சொல்லவேயில்லையே அவன்! போய்க் காதைத் திருகறேன். தில்லியிலே தனியா அவனாலே இருக்க முடியுமா மேம்?"

"முடியும். ப்ளைண்ட் ஹாஸ்டல் இருக்கு. அவனைப் போல இருக்கிற மத்தவங்களோட அவன் நிறையப் பழகணும். இங்கே ரொம்பக் குறுகிய வட்டத்துக்குள்ளே அவன் பழகறான். அது அவனுக்கு நல்லதில்லே. யதார்த்த உலகத்தைப் புரிஞ்சுக்க முடியாம போயிடும்."

"நோ மேம்!" என்று மீரா சிரித்தாள்.

"அவன் ஒரு ஞானியைப் போலன்னா பேசறான்?"

மைதிலியின் அதரங்களில் மெல்லிய புன்னகை விரிந்தது. "ஏட்டுச் சுரைக்காய் ஞானம் அது. உணர்ச்சிவசப்படும் போது பின்னுக்குப் போயிடும்."

மீரா விளங்காமல் நிற்கையில் அவள் தோளைப் பற்றி மைதிலி மிருதுவாகச் சொன்னாள்.

"நீயும் இன்னும் பெரிய வட்டத்திலே பழகணும். பெரிய சாதனைகள் செய்யக் கூடிய திறமை உங்கிட்ட இருக்கு. உங்கப்பாவுக்கு உன்னைப் பற்றி நிறையக் கனவுகள் இருந்தது மீரா."

வீட்டை நோக்கி பஸ்ஸில் செல்லும் போதும், இறங்கி வீட்டுக்கு நடக்கும் போதும் மைதிலியின் வார்த்தைகள் தொடர்ந்து வந்தன. அப்பா அவளைச் சந்தித்திருப்பார் என்று தோன்றிற்று. காட்! என்ன சொல்லியிருப்பார்? உன் மகனால் என் பெண்ணின் எதிர்காலம் பாழாகும் என்றா? அப்பாவின் கனவுகள், எதிர்பார்ப்புகள் எல்லாம் கர்ணனின் கவசகுண்டலங்களாய் அவளது தேகத்தின் அங்கமாகிப் போனது போல் இருந்தது. காற்றும் ஆகாசமும் வெப்பமும் அப்பா எங்கும் போய் விடவில்லை. இங்குதான் எங்கோ இருக்கிறார் என்ற பிரமையை ஏற்படுத்தின.

"மீரா!"

அவள் திரும்பினாள் மீனாட்சி. ஆளே மாறிப் போயிருந்தாள். ஹேர் ஸ்டைல் மாறியிருந்தது. உதட்டுச் சாயம் வயதைக் கூட்டிக் காண்பித்தது. எடுத்த எடுப்பில் "உங்கப்பா இறந்து போயிட்டாங்களாமே, ஸோ ஸாரி மீரா" என்றது மீராவுக்கு நெகிழ்ச்சியை ஏற்படுத்திற்று. சிறிது மௌனத்திற்குப் பிறகு "நீ எப்படியிருக்கே மீனாட்சி?" என்றாள். "உடம்பு சரியில்லேன்னு கேள்விப்பட்டேனே?"

மீனாட்சி தெருவைப் பார்த்தபடி பதில் சொன்னாள். "இப்ப சரியாயிட்டது. ஐ ஆம் ஃபைன். இப்ப எங்க கடையிலே வேலை பார்க்கறேன்."

"பரீட்சை எழுத மாட்டியா?"

''ப்ரைவேட்லே எழுதுவேன்.''

''மணியைப் பத்தின விஷயம் என்ன ஆச்சு?'' என்றாள் மீரா புன்னகையுடன்.

''அவனை மறந்தாச்சு'' என்று மீனாட்சி சிரித்தாள்.

'நா செத்துருவேன்' என்று அன்று அழுததையும் மறந்து போனாயா என்று மீரா தனக்குள் வியந்து கொண்டாள். நீதான் முட்டாள் என்று இவள் சிரிப்பது போல் இருந்தது. சிரிக்கும் போது மிஸஸ் செல்லப்பனின் சாயல் தெரிந்தது.

வீட்டிற்குத் திரும்பியதும் அமெரிக்க பல்கலைக் கழகத்திலிருந்து வந்த கடிதத்தை அம்மா புன்னகையுடன் காண்பித்தாள். அமெரிக்க பிரஜை என்று சலுகையினால் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்திருந்தது. அபூர்வமான உபகாரச் சம்பளத்துடன். குபீரென்று பொங்கிய உற்சாகம் உடனடியாக வடிந்தது. கடிதத்தை மீண்டும் உறையில் வைத்து, ''இப்ப எப்படிப் போவேன் உன்னை விட்டு விட்டு?'' என்றாள் மீரா. ''மணியைப் பத்திக் கவலைப்படாதே'' என்றாள் அம்மா உறுதியான குரலில். ''நான் தெளிஞ்சுக்குவேன். இங்கே ஏதாவது ஸ்கூல்லே வேலை பார்க்கலாம்னு இருக்கேன். மஹேஷும் மெள்ள அட்ஜஸ்ட் ஆயிடுவான். உனக்குத்தான் ஒரு மாறுதல் வேணும் மீரா. 'சீட்' கிடைச்சது பெரிய விஷயம். அதைத் தவற விடக் கூடாது.''

அவள் இன்னமும் யோசனையில் ஆழ்ந்தாள். அம்மாவின் பேச்சு வியப்பை அளித்தது. ''பார்க்கலாம்'' என்று அவள் நகரும் போது அம்மா அவள் தோளை அணைத்து, ''சாகறதுக்கு முந்தி அப்பாவுடைய மனசு தெளிஞ்சு போச்சு மீரா'' என்றாள். ''அமெரிக்க யூனிவர்ஸிடியிலே இடம் கிடைச்சா உன்னைக் கண்டிப்பா அனுப்பச் சொன்னார்.''

அதனாலேயே அம்மாவும் தெளிந்து விட்டாள் என்று மீராவுக்குத் தோன்றிற்று. அவர்களிடையே இருந்த உணர்வுபூர்வமான சங்கமம் பிரமிப்பை ஊட்டிற்று.

மாலை, ஆழ்வார்பேட்டையை நோக்கிச் செல்லும் போது எவ்வளவோ நாட்களாகக் கனன்று கொண்டிருந்த கோபங்களும் ஏமாற்றங்களும் அதிசயமாக மறைந்து, நன்றாக அலசிப் பிழிந்து உலர்த்திய வெள்ளைத் துணியாக இருந்தது மனசு. உறவுகளும், அவைதரும் சுகங்களும், அங்கு பொழியும் கருணை மழைகளும்தான் மானுடத்தை உய்யச் செய்யும் என்ற பிரக்ஞையில் மெழுகாய் உருகிற்று.

தனி நபரை விட குடும்பம் முக்கியம் என்றார் அப்பா. 'ஆனால் நான் உன்னை எந்தத் தியாகமும் செய்யச் சொல்லல்லே'- அப்பாவின் இந்த வாக்கியம் இப்போது குழப்பவில்லை.

'நான் மறக்க மாட்டேன் டாட்' என்றாள். மீண்டும் அமெரிக்கா செல்வது உற்சாகமாக இருந்தது. ஆனால் இந்தியாவுடன் அப்பா ஏற்படுத்தி விட்ட உறவை மறப்பது அசாத்தியமானது என்று அந்தக் கணம் நிச்சயமாயிற்று.

ஹரி வராந்தாவில் அமர்ந்திருந்தான். அவள் கேட்டைத் திறக்கும்போதே ''வா மீரா'' என்றான் பிரகாசமாக. அவள் நாலே எட்டில் அவனிடம் சென்று அவன் கையைப் பற்றினாள். ''உன்னைப் பார்க்க ரொம்ப சந்தோஷமா இருக்கு ஹரி'' என்றாள்.

''உன் குரலைக் கேட்டு எனக்குச் சந்தோஷம்'' என்று அவன் சிரித்தான். ''எப்ப ஸம்மர் காம்ப் முடியும்னு இருந்தது எனக்கு. தில்லி ப்ளைண்ட் ஸ்கூல்லே எனக்கு வேலை கிடைச்சிருக்கு மீரா!''

''தெரியும். நீ ஃபஸ்ட் கிளாஸிலே பாஸ் பண்ணதும் தெரியும். ஏன் முந்தியே சொல்லல்லே?'' என்று அவன் காதைத் திருகினாள். பிறகு ''போயிட்டுப் போறது, கையைக் குடு'' என்று கையைக் குலுக்கி




ஸ்ரீகாழி வி. ரேவதி

வாள்.

ஒன்றும் சொல்லாமல் அவன் சற்று நேரம் அவள் கையைப் பிடித்தபடி உட்கார்ந்திருந்தான் உணர்ச்சிவசப்பட்டவன் போல.

''டில்லியிலே இருக்கிற எந்த மெடிகல் காலேஜிலேயும் உனக்கு ஸீட் கிடைக்கும். அங்கே வந்துடேன் மீரா!'' என்றான்.

அவள் அவன் கையை வருடியபடி மெள்ளச் சொன்னாள். ''நான் அமெரிக்கா போறேன் ஹரி. அங்கே நல்ல யூனிவர்ஸிடியிலே இடம் கிடைச்சிருக்கு.''

அதிர்ந்து போனவனாய் ஹரி சில விநாடிகள் பேசாமல் இருந்தான்.

''ஏன் இந்தியா வெறுத்துப் போச்சா?''

அவன் குரலில் கோபமோ ஆதங்கமோ தொனித்தது.

''இல்லே'' என்றாள் அவள் மிருதுவாக. ''படிப்பு முடிஞ்சதும் வந்துடுவேன். அம்மாவும் மஹேஷும் இங்கேதான் இருப்பாங்க. அப்பா போன அதிர்ச்சியிலேர்ந்து நான் மீளணும் ஹரி. இங்கே இன்னும் எனக்குக் குழப்பமா இருக்கு. மெள்ளத்தான் தெளியும் போல இருக்கு. சில பேருக்குப் பக்குவம் வர நாளாகும். என்ன செய்யலாம்?''

''ஒண்ணும் செய்ய முடியாது'' என்றான் அவன் பரிகாசமாக. ஆனால் முகம் களையில்லாமல் இருந்தது.

''நான் உன்னை மிஸ் பண்ணுவேன் ஹரி'' என்றாள் மீரா. ''இந்தியா திரும்பியவுடன் உன்னைப் பார்க்க வருவேன். அதுக்குள்ளே உனக்கு டில்லியிலே யார் மேலேயாவது காதல் பிறந்து கல்யாணமாகியிருக்கும்'' அவன் சிரிக்கவில்லை. தீவிர யோசனையில் ஆழ்ந்திருந்தான். திடீரென்று சடசடவென்று மழை பெய்ய ஆரம்பித்தது. கூழாங் கல் போல் ஐஸ் கட்டிகள் விழுந்தன. அவனை உற்சாகப்படுத்தும் எண்ணத்துடன் ஒன்றை எடுத்து வந்து அவனது புறங்கையில் வைத்தாள். அவன் தனக்குள் பேசிக்கொள்பவனைப் போல் பேசினான்.

''எத்தனை தடவை காதல் பிறக்கும்? என்னுடைய காதல் வெளியிலே சொல்ல முடியாதது. சில பூக்கள் யாருக்கும் தெரியாமலே மலர்ந்து உதிர்ந்து போகிற மாதிரி...''

அவள் திடுக்கிட்டு அவனைப் பார்த்தாள். மலர்ந்து உதிர்ந்து போச்சா?'' என்றாள் மெள்ள சங்கடத்துடன்.

அவன் ஆமாம் என்று தலையசைத்தான்.

அவள் சற்று நேரம் சரம் சரமாய் விழும் மழைக் கம்பிகளைப் பார்த்தபடி நின்றாள். சட்டென்று மைதிலி சொன்னதெல்லாம் நினைவுக்கு வந்தது. மைதிலி ஒருத்திதான் தன்னை உணர்ந்து கொண்டவள் என்று பிரமிப்பு ஏற்பட்டது.

அவள் மெள்ள அவனருகில் வந்து மிதமிஞ்சிய வாஞ்சையுடன் அவன் கையைப் பற்றி நிதானமாகச் சொன்னாள்.

''மறுபடி பூக்கும். ஒரு தடவைதான் காதல் பிறக்கும் என்கிற சித்தாந்தத்திலே எனக்கு நம்பிக்கையில்லே. வேற நல்ல பெண் கிடைப்பா. உன்னைப் பூரணமாய்ப் புரிஞ்சுக்கிறவளா, காதலிக்கிற பக்குவம் உள்ளவளா - அதுக்கும் பக்குவம் வேணும் ஹரி!''

அவன் பதில் சொல்லவில்லை. பேச்சை மாற்றினான். மழை நின்றதும் அவள் கிளம்பினாள். ''நீ டில்லி போகிறதுக்கு முந்தி மறுபடி வருவேன். ஹரி ப்ளீஸ், உற்சாகமாயிரு'' என்றாள். அவன் கையை அசைத்தான். அவன் மெள்ளத் தெளிந்து கொள்வான் என்று பரிவுடன் நினைத்தபடி, கேட்டைத் தாண்டித் தெருவுக்கு வந்த போது வானத்தில் பளிச்சென்று சூரிய வெளிச்சம் படர்ந்திருந்தது. தூரிகையால் தீட்டியது போல் வானவில் தெரிந்தது. அவனிடம் அதைப் பற்றிச் சொல்லலாமா என்று நினைத்து, பேசாமல் புன்னகையுடன் மீரா நடந்தாள்.

(முற்றும்)



☐ நாட்டில் சுமார் 20 கோடி டியூப் லைட்டுகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுக்குத் தற்போது புழக்கத்துக்கு வந்துள்ள எலக்ட்ரானிக் 'சோக்'குகளைப் (CHOKE) பயன்படுத்தினால் ஒரு நாளைக்கு (அதே ஒளியைப் பெற்று) ஒரு கோடியே இருபது லட்சம் யூனிட்டுகள் மிச்சப்படுத்த முடியும். நாட்டில் நீர் இறைக்க, சுமார் ஒரு கோடி பம்பு செட்டுகள் பயன்படுத்தப்படுகின்றன. ஐ. எஸ். ஐ. முத்திரை பெற்றவைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தினால் ஒரு நாளைக்கு நாலரை கோடி யூனிட்டுகள் மிச்சமாகும்.

- அ. ஷண்முகசுந்தரம்

**SANSKRIT THROUGH CORRESPONDENCE**

# संस्कृतम्

# சமஸ்கிருதம்

தபால்மூலம் 6 மாதகால தமிழ் ஆங்கில வாயிலாக சிறப்புப் பயிற்சி

SANSKRIT THROUGH CORRESPONDENCE

**சமஸ்கிருத** மொழியை இப்பொழுது நீங்களும் தபால் மூலம் ஆறே மாதங்களில் பேச, எழுத படிக்கக் கற்றுக்கொள்ளலாம்.

தேர்ச்சிபெற்ற சமஸ்கிருத பண்டிதர்களால் இயற்றப்பட்ட பாடங்கள் மாதம் _ 5 முறை தபால் மூலம் அனுப்பப்படும். நூற்றுக்கணக்கானோர் இப்பயிற்சியில் சேர்ந்து தேவ மொழியான சமஸ்கிருதத்தை கற்றுக் கொண்டுள்ளனர். ஏன் நீங்களும் இன்றே சேர்ந்து ராமாயணம், மஹாபாரதம், பகவத்கீதை போன்ற காவியங்களை சமஸ்கிருத மொழியிலேயே படித்து பயன் பெறலாமே! அவைகளில் நல்ல செய்திகள் அடங்கியுள்ளன.

**இலவச Prospectus பெற 1/-ரு தபால்தலையுடன் இன்றே எழுதுங்கள். இறுதி தேதிக்குள் சேரும் அனைவருக்கும் பரிசு புத்தகம் ஒன்று உள்ளது என்பதனை நினைவில் நிறுத்துங்கள்.**


Programme Officer
**INDIANA SANSKRIT ACADEMY**
C/o. INDIANA ACADEMY OF MANAGEMENT SCIENCES,
Post Box No. 1108, Bhashyakarlu Road,
Coimbatore - 641 002, Tamil Nadu.

---

# 20

**20% வட்டி**

விபரங்களுக்கு



# ஐசிஎஸ்

221, சத்தியமூர்த்தி சாலை,
( தாரகராம சில்க்ஸ் எதிரில் )
ராம்நகர், கோயமுத்தூர் - 641 009. தொலைபேசி : 22326

ICS GROUP

50 ஆண்டுகால
மகத்தான சேவை

**பொன்விழா ஆண்டு : :**
**தங்க நகைப் பரிசு : 17**

# ஏமாறாதே!



## தந்திரமான நம்பிக்கைத் துரோகம்!

கல்லூரி நாட்களில் ஹாஸ்டலில் தங்கியிருந்த போது நடந்தது. பக்கத்து அறையில் வசதியான நண்பன். அவன் எடுபிடி வேலை செய்த இளைஞனிடம் ஒரு கடிதத்தைப் போஸ்ட் செய்யச் சொல்லிக் கொடுத்து, அப்படியே லாண்டரி துணியையும் வாங்கி வரச் சொல்லி அதற்கான ரசீதும் கொடுத்தனுப்பினான். போன எடுபிடி ஆள் திரும்பவேயில்லை. லாண்டரியில் விசாரித்தால் துணி வாங்கிப் போய் விட்டதாகச் சொன்னார்கள்!

ஊருக்கு எழுதிய கடிதத்துக்குப் பதில் வராமல் போகவே, நண்பன் கிளம்பி ஊர் சென்றான். அங்கு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. எடுபிடி ஆளிடம் போஸ்ட் செய்யச் சொல்லிக் கொடுத்த கடிதத்தில் 'ரூ 500 மணியார்டர் அனுப்பவும்' என்று எழுதியிருந்தான் நண்பன். 'மணியார்டரை' 'துணி மூலம்' என்று திருத்தி, கடிதத்தைக் கையோடு எடுத்துக் கொண்டு வந்து நண்பனின் அப்பாவிடம் பணம் கேட்டு வாங்கித் கம்பி நீட்டி விட்டிருந்தான் எடுபிடி.

''உங்கள் மகனுக்குப் பரீட்சை; நேரில் வர முடியவில்லை. அதனால் என்னை அனுப்பினார். பாருங்கள் அவர் துணிமணிகளை அடையாளத்துக்காக அணிந்து வந்திருக்கிறேன்'' என்று அந்த தந்திரக்கார அயோக்கியன் சொன்னதை நம்பி என் நண்பனின் அப்பாவும் ஏமாந்திருந்தார்!

- விழுப்புரம், கோ. நாராயணன்.

பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் மதிப்புள்ள தங்க நகைப் பரிசு பெறுபவர் :

*- கோ. நாராயணன்,*
*22, வ. உ. சி. தெரு (மாடி),*
*விழுப்புரம் - 605 602.*


## 'ராஜேஷ் குமாரி'ன் அழைப்பு!

பத்திரிகைகளில் வாசகர் கருத்து எழுதி ஓரளவு பெயர் எடுத்திருந்தேன். திடீரென்று எழுத்தாளர் ராஜேஷ் குமாரிடமிருந்து எனக்குப் பாராட்டுக் கடிதம் வந்தது - இவ்வருடத்தின் சிறந்த வாசகியாக என்னைத் தேர்வு செய்திருப்பதாகத் தெரிவித்திருந்தார். சில வாரங்கள் சென்று இன்னொரு கடிதம். அதில், குறிப்பிட்ட தேதியில் சில வாசகிகளுக்குத் தம் இல்லத்தில் விருந்து என்றும் அன்று எனக்கு அரைப் பவுன் மோதிரம் பரிசு வழங்கப் போவதாகவும் எழுதியிருந்தார். குறிப்பிட்ட தேதியில் என் கணவருடன் அவர் வீட்டுக்குப் போனேன். பெருத்த ஏமாற்றம்! ராஜேஷ்குமார் ஊரிலேயே இல்லை. எனக்கு வந்த கடிதங்களைப் பார்த்த அவர் பெற்றோர் அதில் அவர் கையெழுத்தே இல்லை எனக் கூறி விட்டனர். யாரோ திட்டமிட்டு ஏமாற்றியிருக்கிறார்கள்! 'உண்மை' ராஜேஷ்குமாரிடமிருந்து வருத்தம் தெரிவித்துக் கடிதம் வந்த போது மிகவும் ஆறுதலாக இருந்தது!

- கோவை, கே. ஆர். விஜயா.

## பத்து ரூபாயைக் காட்டிப் பறிப்பு!

ஆட்டோவில் நிறைய பணத்துடன் ஏறினார் நண்பர். இரவு நேரம். விளக்குக்



கம்பம் ஒன்றின் அருகே ஆட்டோ மக்கர் செய்து நின்று விட்டது. டிரைவர் அதைச் சரிபார்க்க இறங்க, நண்பர் ஆட்டோவை ஒட்டித் தரையில் வலதுபுறத்தில் கிடந்த புத்தம்புது பத்து ரூபாய் நோட்டைப் பார்த்திருக்கிறார். தம் பணப் பையை வண்டியிலேயே வைத்து விட்டு, பத்து ரூபாயை எடுத்துச் சட்டைப் பையில் பத்திரப்படுத்திக் கொண்டு மீண்டும் ஆட்டோவுக்குள் ஏறினால்... பணம் வைத்திருந்த பையைக் காணோம். திருட எண்ணியவன் பத்து ரூபாயைக் காட்டி ஏமாற்றியிருக்கிறான். நண்பரும் பத்து ரூபாய்க்கு ஆசைப்பட்டு பணப் பையை இழந்தார்.

- மதுரை, ப. வெங்கடேஷ்.

## மாட்னி ஷோவே அலர்ஜி!

மாட்னி ஷோவுக்கு இரண்டு 'பாஸ்' அனுப்பி வைத்தான் என் தம்பி. கணவரும்



நானும் அவசரமாகக் கிளம்பிச் சென்றோம். தியேட்டரை அடைந்ததும் என் மூக்குக் கண்ணாடியை மறந்து விட்டது கவனத்துக்கு வர, கணவரைத் திரும்பவும் வீட்டுக்கு அனுப்பினேன்.

வீட்டை அடைந்த என் கணவர் கதவு திறந்திருக்கக் கண்டார். உள்ளே... எங்களுக்கு 'பாஸ்' எடுத்து வந்து கொடுத்த ஆள் அலமாரியைத் திறந்து குடைந்து கொண்டிருந்தான்! அவனைப் பிடித்துப் போலீஸில் ஒப்படைத்து விட்டு தியேட்டரில் 'கொட்டு கொட்டு' என்று காத்திருந்த என்னிடம் வந்து அவர் நடந்த கதையைச் சொன்ன போது ஒரே அதிர்ச்சி!

இப்போதெல்லாம் எங்களுக்கு மாட்னி ஷோவே அலர்ஜி!

- புதுடெல்லி - 22, கே. பொன்னு.

## பாங்குக்குப் போகிறீர்களா...? எச்சரிக்கை!

பாங்கிலிருந்து பணம் எடுத்துக் கொண்டு வீடு திரும்புகையில் முதுகில் திடீரென்று ஒரே எரிச்சல். பல்லைக் கடித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்து, பணத்தை ஒரு பக்கமாக எறிந்து விட்டு குளிக்கப் போனேன். என் அகால குளியல் என் மனைவியைக் கலவரப்படுத்தியது. 'என்ன? என்ன?' என்று பாத்ரூம் கதவருகில் நின்று கேட்கலானாள். இதற்கிடையில் ஒரு பையன் குடிக்க தண்ணீர் வேண் டும் என்று கேட்டபடி வீட்டு நடையினுள் வந்து விட்டான். நேர் எதிர் வீட்டு வாச லில் ஒரு நிழலான ஆசாமி... என் மனை விக்கோ என் திடீர்ச் சங்கடத்தை எண்ணி மனக் குழப்பம். ஆயினும் தண்ணீர் கேட்ட சிறுவனை வெளியே விரட்டி விட்டாள்.

நடந்தது இதுதான் : சிறுவனும் நிழலான ஆசாமியும் நான் பணத்தைத் தவற விட வேண்டும் என்பதற்காக என் முதுகில் எதையோ தூவி நமைச்சல் எடுக்கச் செய்திருக்கிறார்கள். நாங்கள் உஷாராக இருந்ததால் ஏமாந்தது அவர்கள்தான்!

- சென்னை - 61, வி. சுப்ரமண்யம்.


## சம்பளம் இங்கே; கமிஷன் அங்கே!

என் உறவினர் தமது ஜவுளி மொத்த வியாபாரக் கடையில் நல்ல லாபம் சம்பாதித்து வந்தார். ஏழை சொந்தக்காரர் ஒருவருக்கு அதில் வேலை போட்டுத் தந்தார். அவரும் நன்றாகவே உழைத்தார். திடீரென்று என் நண்பரின் வியாபாரம் சரிய ஆரம்பித்தது. ஆராய்ந்து பார்த்த போது, இரக்கப்பட்டு வேலைக்கு எடுத்த புது சிப்பந்தி, வாடிக்கையாளர்களைப் போட்டி வியாபாரியிடம் வேண்டு மென்றே திசை திருப்பி விட்டுக் கொண்டிருந்தது அம்பலமாயிற்று. அதற்காக அந்த வியாபாரியிடம் அவர் கமிஷனும் அடித்துக் கொண்டிருந்தார்! இங்கே சம்பளம் அங்கே கமிஷன் வாங்கிய அவர் திறமையை என்னென்பது!

- சென்னை - 64, எஸ். சரோஜினி.

கல்கி

பாலு ஜுவல்லர்ஸ்




# ஒரு நாள் ஒரு வருடத்தை விட நீளமாவது எப்போது...?

!! சுமார் 15,000 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு அண்ட வெளியில் நிகழ்ந்த ஒரு பிரும்மாண்டமான வெடிப்புதான் (Big Bang Explosion) அண்ட கோளத்தை உருவாக்கியது என விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். வெடித்துச் சிதறிய துகள்கள்தான் நட்சத்திர மண்டலங்கள். இவை வெடிப்பின் உத்வேகத்தால் இன்னமும் நகர்ந்து கொண்டேயிருக்கின்றன....! இந்தச் 'சிதறல்' ஒரு கட்டத்தில் நிற்குமா அல்லது தொடர்ந்து கொண்டேயிருக்குமா... என்பது தெரியவில்லை.

!! சூரியனுக்கு அடுத்தபடியாக நமக்கு மிக அருகே உள்ள நட்சத்திரக் கூட்டம் அல்ஃபா சென்டாரி. (Alpha Centauri). இதுவே நான்கு ஒளியாண்டுகளுக்கும் அதிகமான தூரத்தில் உள்ளது....! அதாவது, மணிக்கு 88 கி.மி. வேகத்தில் பயணம் செய்தால் 193 ஆண்டுகளில் சூரியனை அடையலாம். அதே வேகத்தில் பயணம் செய்தால் அல்ஃபா சென்டாரியை அடைய 52 மில்லியன் ஆண்டுகள் ஆகும்!

!! சூரியனுக்கு மிக அருகே உள்ள கிரகம் மெர்குரி. சூரியனை நோக்கியுள்ள மெர்குரி கிரகத்தின் ஒரு பாதியில் வெப்பம் 700 டிகிரியையும் தொடும். மறுபாதியில் -250 டிகிரியைக் காட்டிலும் குறைவாக வெப்பம் அமைந்து குளிர் கற்பனைக் கெட்டாததாய் இருக்கும்! காரணம் இது தன்னைத்தானே சுற்றும் நேரமும் சூரியனைச் சுற்றி வரும் நேரமும் ஒன்றாக (88 நாள்) இருப்பதால் ஒரு பாதி சதா பகல், ஒரு பாதி சதா இரவு!

!! வீனஸ் கிரகம் (வெள்ளி) ஒரு முறை சுழன்று வர 243 நாட்களாகிறது! ஆனால் இது சூரியனை வலம் வருவதற்கு 225 நாட்கள்தான் எடுத்துக் கொள்கிறது. இதனால் வீனஸில் ஒரு 'நாள்' ஒரு 'வருடத்தை'க் காட்டிலும் நீளமானது!

!! மிகப் பெரிய கிரகமான ஜுபிடர்தான் (வியாழன்) மிக விரைவாகச் சுழல்கிறது. ஒரு முழு சுழற்சிக்கு இது எடுத்துக் கொள்வது பத்து மணி நேரத்துக்கும் குறைவு!

!! வான சாஸ்திரத்தை ஆராய்பவர்கள் இன்று சந்திக்கும் மிகப் பெரிய பிரச்னை பூமியைச் சுற்றிலும் கவிந்திருக் கும் புகைப் படலம்தான். இதனால் தொலை நோக்குக் கருவிகள் மூலம் பார்த்தாலும் தெளிவான காட்சிகள் தெரிவதில்லை. சஹாரா பாலைவனம், ஆண்டிஸ் மலைத் தொடர் போன்ற ஜன சஞ்சாரமில்லாத தூய வானவெளிப் பகுதிகளிலிருந்துதான் இப்போதெல்லாம் ஆராய்ச்சிகள் நடத்த முடிகிறது!

!! பூமியைப் போலவே அதைச் சுற்றிலும் உள்ள அண்ட வெளியிலும் நெரிசல் அதிகமாகி வருகிறது. உபயோகத்தில் உள்ள செயற்கைக் கோள்கள், தவிர உபயோகம் முடிந்து போன செயற்கைக் கோள்களும் ராக்கெட் பாகங்களும் பூமியை வலம் வந்து கொண்டிருக்கின்றன. இவற்றின் எண்ணிக்கை, சுமார் 4500 இருக்கும்!

தொகுப்பு : உதய் லால்

---

பாதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு: ரூ. 156/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு: ரூ. 78/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 200/- விமானத் தபால்: ரூ. 525/-.


பிளட் பிரஷர்
வராமல் தடுக்க,
வந்துவிட்டால் சமாளிக்க...
கல்கி
12.4.92 இதழுடன் இலவச இணைப்பு

## ரத்த அழுத்தம் என்னும் இயற்கை அற்புதம்

வில்லியம் ஹார்வி ஒரு விஞ்ஞானி. ஒரு குதிரையின் கழுத்துப் பகுதியில் ஒரு ரத்த நாளத்தை வெட்டி, வெட்டப்பட்ட பகுதியில் 'டக்'கென்று ஒரு கண்ணாடிக் குழாயைப் பொருத்தினார். ரத்தம் அதன் வழியே குபீ




ரென்று பாய்ந்து சென்று கூரையைத் தொட்டது!

இப்படி ஒரு குரூரச் சோதனையைச் செய்ததால்தான் ரத்த ஓட்டம் பற்றிய வியத்தகு உண்மைகள் தெரியவந்தன.

உடலுக்குள் சதா ஓடிக்கொண்டே இருக்கும் ரத்தம் ஒரு குறிப்பிட்ட வேகத்தில், அழுத்தத்துடன் பாய்கிறது என்பது உறுதிப்படுவதற்கு முன்னோடியாக இருந்தது ஹார்வியின் கண்டுபிடிப்பு. இதை அடிப்படையாகக் கொண்டு வேறு பல விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகள் செய்து ரத்த அழுத்தம் என்னும் இயற்கை அற்புதம் பற்றி மேலும் உலகுக்கு உணர்த்தினார்கள்.

ரத்த அழுத்தம் என்று சொன்னாலே ஆஸ்பத்திரி, மருந்து, டாக்டர் என்ற

டாக்டர் ஜின தாஸ், M.D., - Consultant,
மலர் ஹாஸ்பிடல்ஸ்



☛ டாக்டர் ஜினதாஸ்

கடுப்பூட்டும் விஷயங்கள்தானே நமக்கு ஞாபகம் வருகின்றன; அதில் இயற்கை அற்புதம் என்ன இருக்கிறது? என்று நீங்கள் எரிச்சலுடன் கேட்பது புரிகிறது. இதற்குக் காரணம், 'பிளட் பிரஷர்' என்று சொன்னாலே அது ஒரு நோயைக் குறிப்பதாக அர்த்தம் கொள் வதுதான். உண்மையில், 'ஹை பிளட் பிரஷர்' - மருத்துவர்களால் Hypertension என அழைக்கப்படுவதுதான் நோயாகக் கருதப்பட வேண்டியது. ஆனால் உடம் பின் ரத்த ஓட்டத்தில் இயற்கையில் நிலவும் பிரஷர் அவசியமானது. மிக முக்கியமான பணிகளுக்கு உதவுவது.

நம் உடல் பலகோடிக்கணக்கான செல்களால் ஆனது. இந்த செல்கள் ஒவ்வொன்றும் தங்கள் பணியைச் சீராகச் செய்ய ஆக்ஸிஜனும் ஊட்டச் சத்துக்களும் தேவை. நாம் மூச்சு வழியே உள்ளிழுக்கும் ஆக்ஸிஜனை யும் உணவு வடிவில் உட்கொள்ளும் சத்துக்களையும் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையிலுள்ள கோடானு கோடி செல்களுக்கும் கிடைக்கச் செய் வது நம் உடலில் சதா சர்வ காலமும் சுறுசுறுப்பாக ஓடிக் கொண்டிருக்கும் ரத்தம்தான். ரத்த நாளங்கள், (arteries) சிறுசிறு மெல்லிய நூல்போன்ற பிரிவு களாகப் (capillaries) பிரிந்து உடலின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் ரத்தத் தை எடுத்துச் செல்கின்றன. வேறு சில ரத்த நாளங்கள், உடல் செல்கள் வெளி யேற்றும் கழிவுப் பொருள்களைச் சுமந்து உடலின் சுத்திகரிப்பு மையங் களுக்கு எடுத்துச் செல்கின்றன. இந்த

இயக்கம் தங்கு தடையின்றிச் சீராக நடைபெற ஓயாமல் ஒழியாமல் இயங்கும் 'பம்ப்'தான் இதயம்.

இதயம் சுருங்கி ரத்தத்தைப் பம்ப் செய்யும்போது ரத்த அழுத்தம் கூடுதலாக உள்ளது. இதை systolic blood pressure என்கிறோம். இதயம் விரிந்த நிலைக்குத் திரும்பும் போது ரத்த அழுத்தமும் குறைகிறது. இதை diastolic blood pressure என்கிறோம். இதயத் துடிப்புக்கு ஏற்ப 'ஸிஸ்டாலிக்' 'டயஸ்டாலிக்' என ரத்த அழுத்தம் ஒவ்வொரு கணமும் நம் உடலுக்குள் மாறி மாறி நிலவுகிறது. இவ்வாறு இயல்பாகவே சீரான ரத்த அழுத்தம் நிலவுவதால்தான் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் ரத்தம் ஓடித் தன் பணியைச் செய்கிறது. இப்போது ஒப்புக் கொள்கிறீர்களல்லவா - ரத்த அழுத்தம் என்பது ஓர் இயற்கை அற்புதம் என்பதை......?!



## ஆபத்தாக மாறும் அற்புதம்!

சீராக இருக்க வேண்டிய ரத்த அழுத்தம் ஓர் அளவுக்கு மேல் அதிகரிக்கும் போது, இயற்கை அற்புதம் ஆபத்தாக மாறுகிறது.

''ஐயோ! அந்தம்மாவுக்கு B.P., எக்கச்சக்கமா ஏறிடுச்சு.... 140/115 இருக்கு....'' என்று பதற்றத்துடன் சொல்லப்படுவதை நீங்கள் கேட்டிருக்கலாம். பிளட் பிரஷர் 140/90 க்குக் குறைவாக இருந்தால் நார்மல் என்றும் கேள்விப்பட்டிருக்கலாம். ஒரு சரிவுக் கோட்டுக்கு இருபுறமும் குறிக்கப்படும் இந்த எண்கள் முறையே சிஸ்டாலிக் மற்றும் டயஸ்டாலிக் ரத்த அழுத்தத்தைக் குறிக்கும். இவற்றுள் டயஸ்டாலிக் ரத்த அழுத்தத்தின் அளவே மிக முக்கியமானது. இதயம் விரிந்த நிலையில் இருக்கும் போது, குறைவாக



இருக்க வேண்டிய ரத்த அழுத்தம் மிக அதிகமாக இருக்கிறது எனில் அது ஆபத்து அல்லவா.....?

## காட்டிக் கொடுக்கும் கருவி!

சரி. ரத்த அழுத்தத்தின் அளவை எப்படிக் கண்டுபிடிக்கிறோம்.....? இதற்குப் பரவலாகப் பயன்படுத்தப் படும் கருவி sphygmomanometer. இதைக் கண்டுபிடித்தவர் ஸ்டீஃபன் ஹேல்ஸ் என்ற விஞ்ஞானி (18 ஆம் நூற்றாண்டு).

இக் கருவி இரு பாகங்களைக் கொண்டது. ஒன்று : மில்லிமீட்டர் அளவைகள் கொண்ட ஒரு ஸ்கேலில் பொருத்தப்பட்ட பாதரஸம் அடங்கிய கண்ணாடி டியூப். மற்றொன்று : ஒரு சிறிய 'பல்பு' போன்ற ரப்பர் உருண்

டையுடன் கூடிய ரப்பர் 'cuff'. இந்த் cuff அல்லது ரப்பர் பட்டையைப் புஜத்தைச் சுற்றி இறுக்கிவிட்டு ரப்பர் பந்தை அழுத்தினால் அதனுள் காற்று செலுத் தப்படும். அதே சமயத்தில் கண்ணாடி டியூபில் உள்ள பாதரசம் டியூபின் மேல் பகுதிக்குத் தள்ளப்படும்.

புஜத்தைச் சுற்றி இறுக்கப்பட்ட பட்டை கையில் உள்ள ஒரு முக்கிய ரத்த நாளத்தை அழுத்தி ரத்த ஓட்டத்தைத் தடை செய்யும். இதற்கு அறிகுறியாக ம்ணிக்கட்டில் பல்ஸ் நின்று போகிறதா என்று பார்ப்போம். இவ்வாறு ரத்த ஓட்டம் முழுமையாகத் தடை செய்யப் பட்ட பிறகு, ரப்பர் பட்டையிலிருந்து காற்றை மெள்ள.... வெளியேற்று வோம். அதே சமயத்தில் ஸ்டெதஸ் கோப்பை முழங்கை அருகே பொருத் திக் கொள்வோம். தடைப்பட்ட ரத்த ஓட்டம் மீண்டும் ஆரம்பித்ததற்கு அறி குறியாக ஒரு ஓசை ஸ்டெத் வழியே கேட்கும். இந்த ஓசையைக் 'korotkoff sound' என்போம் (இதைக் கண்டுபிடித்த விஞ்ஞானியின் பெயர்.)

ரத்த ஓட்டத்துக்கு அறிகுறியான முதல் ஓசை கேட்கும்போது, ஸ்கேலில் பொருத்தப்பட்ட பாதரசம் எந்த அள வுக்கு இறங்கி வருகிறதோ அதுவே சிஸ்டாலிக் பிளட் பிரஷர் - அதாவது இதயம் சுருங்கிய நிலையில் உள்ள போது காணப்படும் ரத்த அழுத்தம்.

முதல் ஓசையைக் கேட்ட பிறகு நிறுத்தி விடாமல் தொடர்ந்து ஸ்டெத் மூலம் கேட்போம். கட்டிலிருந்து விடு பட்ட ரத்த நாளம் முழுமையாகத் திறந்து கொள்ளும் வினாடியில் பாத ரசம் எந்த அளவைக் காட்டுகிறதோ அதுவே டயஸ்டாலிக் பிளட் பிரஷர் - அதாவது இருதயம் விரிந்து இருக்கும் நிலையில் காணப்படும் ரத்த அழுத்தம்.

இவ்வாறு கண்டறிந்த எண்களைத் தான் சரிவுக் கோட்டின் இருபுறமும் mm Hg என்ற அளவையில் குறிக்கிறோம்.

(MM Hg = millimetres of mercury).

இந்தக் கருவியின் செயல்பாட்டை இவ்வளவு விளக்கமாகச் சொல்வதற்குக் காரணம் : ஒருவருக்கு ஹை பிளட் பிரஷர் உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ள உதவுவது இக் கருவிதான். (அல்லது இதே முறையில் இயங்கும் வேறு கருவிகள்). வேறு பல உடல் உபாதைகளுக்குத் தோன்றுவது போல் தீர்மானமான அறிகுறிகள் ஹை பிளட் பிரஷர் வந்துள்ளவர்களுக்கு ஆரம்பக் காலங்களில் தோன்றுவதில்லை. வழக்கமான அறிகுறிகளாகச் சொல்லப்படும் தலைசுற்றலோ மயக்கமோ இல்லாத ஒரு நபருக்குக் கூட ஹை பிளட் பிரஷர் இருக்கக் கூடும். 300/140 அழுத்தத்துடன் ஒருவர் சாவதானமாய் என் கிளினிக்குக்கு நடந்து வந்தார்! அவருக்கு எந்த வித அடையாளங்களும் தெரியவில்லை!

பிளட் பிரஷர் அதிகமாகி உடலின் முக்கிய உறுப்புகள் பாதிக்கப்பட்ட பிறகே சிலருக்கு உயர் ரத்த அழுத்த அறிகுறிகள் தோன்றும். எனவேதான் இந்த நோயை silent killer என்கிறார்கள்.

Silent killer என்று சொன்னால் பயமாக இருக்கிறதல்லவா? ஆனால் சினிமாவிலும் கதைகளிலும் வரும் கொலையாளிகளைப் போல் இந் நோய் 'பட்' டென்று உயிரைப் பறித்து விடாது. பிளட் பிரஷர் அதிகரிப்பினால் பல உடன் விளைவுகள் உண்டாகி உடலின் முக்கிய உறுப்புக்கள் பாதிக்கப் படும். இந்த பாதிப்பினால் நாளடைவில் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். எனவே இவ்வாறு உறுப்புக்கள் பாதிக்கப்படும் வரை காத்திராமல், ஒரு வயதுக்கு மேற்பட்டவர்கள் பிரஷருக்கான அறிகுறிகள் ஏதும் தோன்றாவிட்டாலும் அவ்வப்போது பிளட் பிரஷர் 'செக்' செய்து கொள்வது நல்லது. நார்மலாயிருந்தால் கவலை யில்லை; அதிகமாயிருந்தால்

உடனே - ஆரம்பத்திலேயே - சிகிச்சை மேற்கொள்ள லாம் அல்லவா?

## வேறுபடும் 'நார்மல்'கள்!

என்ன பாதிப்புகள் ஹை B.P. யால் வருகின்றன என்று சொல்கிறேன் : பய முறுத்துவதற்காக அல்ல, எச்சரிப்பதற்காக! ஆனால் அதற்கு முன்னதாக, முதலில் பிளட் பிரஷர் எந்த அளவில் இருந்தால் நார்மல் என்று தெரிந்து கொள்வோம். உலகின் பல இடங்களில் பொதுமக்களிடையே ஆராய்ச்சிகள் செய்து சுமார் 120/80 mm சராசரி, நார்மல் பிளட் பிரஷர் என்று கண்டுபிடித்துள்ளார்கள்.

ஆனால் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரிடையே கூட மனிதனுக்கு மனிதன் உடல் உயரம் வேறுபடுவது போல், பிளட் பிரஷரும் நிச்சயமாக வேறுபடும். நிறுத்து வைத்தது போல் எல்லோருக்கும் 120/80 mm இருக்காது. ஸிஸ்டாலிக் 90 mm முதல் 140 mm வரையிலும் எந்த அளவு வேண்டுமானாலும் இருக்கக்கூடும்; டயஸ்டாலிக் 60 mm முதல் 90 mm வரை எந்த எண்ணிக் கையிலும் அமையலாம். ஒரு சராசரி பாதுகாப்பு எல்லையாகத்தான் 140/90 mm ஐக் கடந்தால் உயர் ரத்த அழுத்தம் என உலகச் சுகாதார நிறுவனம் நிர்ணயித்திருக்கிறது.

இனம், வயது, உடல் அமைப்பு, ஆண்- பெண் வேறுபாடு, வாழும் இடம் போன்றவற்றைப் பொருத்து பிளட் பிரஷர் வேறுபடும். பல இனத்தவர் வாழும் அமெரிக்காவில் கறுப்பர்களுக்கு பிளட் பிரஷர் பொதுவாகச் சற்று அதிகமாகவே இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. கல்லூரிப் பெண்களுக்குச் சில சமயம் ரத்த அழுத்தம் மிகக் குறைவாக 80/60 என்று கூட அமையும்.



கருவுற்ற பெண்களுக்குக் குறைவாக இருக்கும். ஆனால் இவையெல்லாம் நார்மல்தான். ஹை நார்மல், லோ நார்மல் என்று இவற்றைக் குறிப்பிடுவோம். எங்கள் அனுபவத்தின் மூலம் நார்மல் அல்லாத ஹை எது என்பது எங்களுக்கு உடனே தெரியும்.

90 mm க்குள் இருக்க வேண்டிய Diastolic பிளட் பிரஷர்,


90 முதல் 104 இருந்தால் இலேசான ஹைபர்டென்ஷன்.

105 முதல் 114 இருந்தால் மிதமான ஹைபர்டென்ஷன்

115 க்கு மேல் இருந்தால் கடுமையான ஹைபர்டென்ஷன்

என்று இனம் பிரிக்கிறோம்.

வயதானவர்களுக்கு சிஸ்டாலிக் பிளட் பிரஷர் மட்டுமே அதிகமாக இருப்பதும் உண்டு. இதனை isolated systolic hypertension என்போம். முதுமை காரணமாக ரத்த நாளங்களின் எலாஸ்டிக் தன்மை குறைந்து, அவை கடினப்பட்டுப் போவதால் இது விளைகிறது.




இப்படத்தின் கறுப்புப் பகுதிகள் இதயத்திலிருந்து பம்ப் செய்யப்படும் ரத்தத்தின் ஓட்டத்தையும் வெள்ளைப் பகுதிகள் மீண்டும் இதயத்தை நோக்கிப் பாயும் ரத்த ஓட்டத்தையும் குறிக்கின்றன. முக்கிய ரத்த நாளங்கள் நூலிழை போன்ற காபிலரிகளாகப் பிரிவதைக் காணலாம்.

☛ ரத்த ஓட்டத்தைச் சித்திரிக்கும் வரைபடம். 1) இதயம் - வலது வென்ட்ரிகிள், 2) இதயம் - இடது வென்ட்ரிகிள், 3) வலது நுரையீரல், 4) இடது நுரையீரல், 5) தலை மற்றும் உடலின் மேல் பகுதி வழியே ரத்த ஓட்டம், 6), 7) முக்கிய ரத்த நாளங்கள், 8) வயிற்றுப் பகுதியில் ரத்த ஓட்டம், 9) உடலின் கீழ்ப் பகுதி மற்றும் கால்களில் ரத்த ஓட்டம்.

டாக்டர் பரிசோதிக்கும் போது இரு வெவ்வேறு தருணங்களிலாவது நார்மல் அல்லாத பிளட் பிரஷர் இருப்பது தெரிய வந்தால்தான் ஒருவர் ஹைபர் டென்ஷன் நோயாளியாகக் கருதப்படுகிறார். பரிசோதனை நேரத்தில் அவர் மன அமைதியுடன் இருப்பது அவசியம்.

## குறி வைத்துத் தாக்கும்!

சரி; எந்த அளவைக் கடந்தால் ஹைபர் டென்ஷன் முத்திரை குத்தப்படுகிறது என்று தெரிந்து கொண்டோம். இப்போது சொல்கிறேன் ஹை பிளட் பிரஷரால் என்ன பாதிப்புகள் என்று.... உடலின் முக்கிய உறுப்புக்களை அது குறி வைத்துத் தாக்கும்!

முதலில் பாதிக்கப்படுவது இதயம் தான். பிரஷர் அதிகமானால் இதயமும் அதிகமாக வேலை செய்ய வேண்டியிருக்கிறது. இயல்புக்கு அதிகமான வேலைக்கு ஈடு கொடுக்க அதன் தசைகள் தடிக்கின்றன - Enlarged heart! இதனால் இதயத்தின் செயல்பாடு பாதிக்கப்படுகிறது ; ஹார்ட் அட்டாக் வாய்ப்பு நான்கு மடங்கு அதிகரிக்கிறது.

அடுத்து பாதிக்கப்படுவன மூளையும் விழிகளும். உடலின் பல்வேறு இயக்கங்களையும் கட்டுப்படுத்தும் மூளையில் அதிக அழுத்தத்துடன் ரத்தம் பாய்வதால் மூளையில் உள்ள ரத்தக் குழாய் வெடித்து (brain haemorrhage) மரணம் சம்பவிக்கும். மூளையின் சுயக் கட்டுப்பாடு (auto regulation) இயக்கம் பாதிக்கப்பட்டு பராலிடிக் ஸ்ட்ரோக் - பக்கவாதம் வரலாம். மென்மையான விழித்திரையில் உள்ள ரத்த நாளங்கள் பாதிக்கப்படுவதால் கண் பார்வை கெடக்கூடும்.

ரத்த நாளங்களில் கசடுகள் அதிகம் தங்கி அடைப்பை ஏற்படுத்தி Athero Sclerosis என்ற நிலை ஏற்படுவது வயதாக ஆக சகஜம். இந்த நிலை ஹை பிளட் பிரஷரினால் துரிதமாக விளைந்துவிடுகிறது. இதுவும் ஹார்ட் அட்டாக்குக்கு வழி செய்யும்.

சிறு நீரகத்தின் சுத்திகரிப்புத் திறனும் குறைந்து போய், படிப்படியாக செயலிழந்தும் போகக் கூடும். தொடர்ந்து உயர் ரத்த அழுத்தம் உள்ளோருக்கு இது நிகழ்வது மிக சகஜம்.

நீரிழிவு நோய்க்கு ஹை B.P. வழி வகுக்கும். பலரிடம் இவை இரண்டும் சேர்ந்தே காணப்படுவதுண்டு.

இவையெல்லாம் இரவோடு இரவாக நிகழ்ந்து விடாது. சிறுகச் சிறுகத்தான் நிகழும். அதிலும், தங்களுக்கு ஹை பிளட் பிரஷர் உள்ளது என உணராமலே இருப்போருக்கும், உணர்ந்தும் சிகிச்சை செய்து கொள்ளாதோருக்கும், அரைகுறை சிகிச்சையோடு நிறுத்தி விடுவோருக்கும்தான் ஏற்படும். உடல் நலத்தில் கவனம் செலுத்துவோர் நம்பிக்கையோடு வாழலாம்.

## நாற்பதை நெருங்கினால் நிதானியுங்கள்!

உயர் ரத்த அழுத்தம் எனக்கு ஏன் வரவேண்டும்? நான் என்ன பாவம் செய்தேன்....? என்று அங்கலாய்ப்பவர்கள் உண்டு. இந்த நோயின் குணாதிசயமே அதுதான். அது யாரை வேண்டுமானாலும் பிடிக்கக்கூடும். பொதுவாக நாற்பதைக் கடந்தவர்களே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

- வம்சாவளிக் காரணம்
- மிகுந்த டென்ஷனான சூழலில் வேலை செய்வது

● உடல், சராசரியைக் காட்டிலும் பருமனாக இருப்பது....

'இவை யாவும் ஹை பிளட் பிரஷருக்குத் துணை புரிகின்றன. ஆனால் 'இதனால்தான் ஹை பிளட் பிரஷர் உண்டாகிறது' என்று குறிப்பிட்டு ஒரு காரணத்தைச் சொல்ல முடியாது. ஏனெனில் ஹை பிளட் பிரஷர் என்பது ஓர் 'உடல் நிலைப் பழுது'. டீ.பி., டைபாய்ட், மலேரியா போல் கிருமிகளால் உண்டாகும் வியாதி அல்ல அது.

ஒரு சில சமயங்களில், உடலின். வேறு குறைபாடுகள் காரணமாக ஹைபர் டென்ஷன் வருவதுண்டு. இதனை 'செகண்டரி ஹைபர் டென்ஷன்' என்கிறோம். சிறுநீரகத்தில் உண்டாகும் சிலவகைக் கோளாறுகள் காரணமாகவும் சில ஹார்மோன் சுரப்பிகளின் கூடுதலான இயக்கத்தாலும் இது நேரக்கூடும். ஹார்மோன்கள் அதிகமாகச் சுரப்பதால் உடலில் ட்யூமர் உண்






டாகலாம். அந்த ட்யூமரை அறுவைச் சிகிச்சை செய்து நீக்கிவிட்டால் B.P. தானாகக் குறைந்துவிடும். அ தே த போல் சிறுநீரகக் கோளாறு சீர்செய் யப்பட்டாலும் B.P. இயல்பு நிலைக் குத் திரும்பும்.

வேறு உடல் உபாதைகளின் விளை வாக அன்றித் தானாகவே வரும் primary hypertension ஐ முற்றிலும் குணமாக்கக் கூடிய சிகிச்சை என்பது இல்லை. ஹை பிளட் பிரஷரைக் கட்டுப்பாட்டில் வைக்க முடியுமே தவிர அதற்கு டாடா காட்டிவிட முடியாது. மூல காரணம் தெரிந்தால்தானே அதை முறியடிக்க லாம்! அப்படிச் செய்யும் காலமும் வரத் தான் போகிறது. நம்பிக்கையுடன் இருப் போம்.

## வந்துவிட்டால் சமாளிக்க...

ஹை பிளட் பிரஷரைக் கட்டுப்பாட் டுக்குக் கொண்டு வரும் சிகிச்சை முறை கள் என்ன?

முதலில் மருந்தல்லாத சிகிச்சை முறைகளைக் குறிப்பிடுகிறேன்: இவற் றை non-drug therapy என்று நாங்கள் அழைக்கிறோம்.


- முறையான, தொடர்ச்சியான, மிதமான உடற்பயிற்சி - வாக்கிங் மிக


நல்லது. ஏதேனும் ஸ்போர்ட்ஸ் பரிச்சயம் இருந்தால் மீண்டும் ஆடத் தொடங்கலாம். இது ரத்த ஓட்டத்தைச் சீராக வைக்க உதவும்.

● யோகாசனம், ஆழ்நிலை தியானம் போன்ற பயிற்சிகள். இவை மனத்தை அமைதிப்படுத்தும்.

ஆரம்பத்தில் யோகா ஆழ்நிலை தியானம் போன்றவற்றைச் சிபாரிசு செய்த போது பலர் கேலியாகச் சிரித்தார்கள். ஆனால் இன்று இவற்றின் சக்தி நிரூபண மான உண்மை. விஞ்ஞானிகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

● Bio feed back என்ற அதிசய சிகிச்சை முறையும் இப்போது வழக்கத்துக்கு வந்துள்ளது. மூளையின் அழுத்த அலை களைப் பதிவு செய்து அவற்றை மீண்டும் உடலுக்குள் செலுத்தி, ரத்த அழுத்தத்தைச் சீராக்குகிறார்கள். இது வெற்றிகரமாகப் பலன்






☛ உடலின் முக்கிய உறுப்புக்களுக்கு ரத்தம் பாய்வதைக் குறிக்கும் வரைபடம்.

தருகிறது.

'Behaviourial modifications' என்ற வாழ்க்கை முறை மாற்றங்களையும் ஹை B.P. உள்ள வருக்குச் சிபாரிசு செய்கிறோம். மிக உயர் ரத்த அழுத்த மின்றி 'border line' இல் இருப் பவருக்கு மருந்துகள் அவசியமில்லை. இந்த சிபாரிசுகளைக் கடைப்பிடித்தாலே போதும்.

- பரபரப்பான வாழ்க்கை முறையைத் தவிருங்கள்.
- புகை பிடித்தல், மது அருந்துதலைக் கைவிடுங்கள்.
- உணவில் உப்பைக் குறையுங்கள். (உப்பைத் தவிர்க்க வேண்டாம். குறைத்தாலே போதும்)
- கொழுப்புச் சத்து, கொலஸ்ட்ரால் அதிகம் உள்ள உணவு வகைகளைக் குறையுங்கள்; தவிர்ப்பதும் நல்லது.
- குடும்பத்தில் யாருக்கேனும் ஏற்கெனவே ஹை பி.பி. இருந்தால் சந்ததிகள் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

## ராஜாமணியின் கதை!


மருந்துகளைத்தான் வேளா வேளைக்கு விழுங்கிக் கொண்டு இருக்கிறோமே இந்தக் கட்டுப்பாடுகளெல்லாம் எதற்கு என்று நீங்கள் கேட்கலாம். இவர்களுக்கு ஒரு கதை சொல்கிறேன்.:

ராஜாமணி ஓர் இளம் எக்ஸிக்யூடிவ். துடிதுடிப்பானவன். தனியார் கம்பெனியில் சேர்ந்த முதல் நாளில் இருந்தே முன்னேற வேண்டும் என்ற முனைப்புடன் செயல்பட ஆரம்பித்தான். இருபத்தெட்டு வயதிலேயே இளநிலை அதி

காரி ஆனான். முப்பத்திரண்டு வயதில் முதுநிலை அதிகாரி. முப்பத்தைந்து வயதுக்குள் டாப் எக்ஸிகியூடிவ். தினசரி மீட்டிங்குகள், பிரச்னைகள், சவால்கள்; அவற்றைச் சந்திக்க பரபரப்பான செயல்பாடுகள் - ரத்த அழுத்தம் 'கும்' மென்று ஏறுமுகமாய்ப் போயிற்று. பார்ட்டி, ட்ரிங்க்ஸ் என்று ஒரு பக்கம் தொழில் நிமித்தமாகவும் (சில சமயம் அல்லாமலும்) தவறான உணவுப் பழக்கங்கள். ரத்த அழுத்தம் இருநூறையும் தாண்டிவிட்டது.

அதிசயம் ஆனால் உண்மை என்கிற மாதிரி, ஒரே மாதத்தில் ராஜாமணியின் ரத்த அழுத்தம் சீரான நிலைக்குத் திரும்பியது. காரணம்?

ராஜாமணி பரபரப்பான வாழ்க்கையைத் தவிர்க்க ஆரம்பித்தான். இந்த சம்பாத்தியமும் சௌகரியங்களும் போதும் என்ற மனப்பக்குவத்தை வரவழைத்துக் கொண்டான். வாழ்க்கையில் சவால்கள் குறைய, டென்ஷன் குறைந்தது. பார்ட்டி, ட்ரிங்ஸ் என்ற கட்டாயங்கள் மறைந்தன. எக்ஸர்சைஸுக்கும் பிரார்த்தனைக்கும் நேரம் ஒதுக்க முடிந்தது. வாழ்க்கைக்கு வித்தியாசமான, உயர்ந்த அர்த்தம் கிடைத்தது!





மருந்துகள் சாப்பிடுவது எவ்வளவு முக்கியமோ அவ்வளவுக் கவ்வளவு முக்கியம் வாழ்க்கை முறையில் சில நியமங்களைக் கடைப்பிடிப்பதும் என்பதை ராஜாமணியின் கதை உணர்த்துகிறது.

ஆனால் ராஜாமணியைப் போல் டாக்டர் சொன்னதைக் கேட்கும் பேஷன்டுகள் அரிது. இந்தியாவில் சுமார் இருபது சதம் நோயாளிகள்தான் சிகிச்சையையும் கட்டுப்பாட்டையும் தொடர்ந்து கடைப்பிடிக்கிறார்கள். அரைகுறையாக விட்டுவிடுபவர்களே அதிகம். தங்களுக்கு இந்த நோய் உள்ளது என்று தெரியாமலே ஆபத்தில் வாழ்வோர் ஐம்பது சதம்!

## உருவத்தை ஆட்டிவைக்கும் அருவம்!

வாழ்க்கை முறை மாற்றங்கள் எப்படி பிளட் பிரஷரைக் குறைக்க உதவ முடியும்? என்று கேட்கிறீர்கள். விளக்குகிறேன் :

முதலில் சொன்னது டென்ஷனைக் குறையுங்கள் என்பது. மனத்தின் இயக்கத்துக்கும் ரத்த அழுத்தத்துக்கும் நேரடியான தொடர்பு இருக்கிறது. சஞ்சலமான, உணர்ச்சிவசப்பட்ட மனநிலையில் இருக்கும்போது ரத்த அழுத்தத்தைப் பரிசோதித்தாலே இது உறுதிப்படும். பம்பாய் போன்ற பெரு நகரங்களில் வாழும் ஆயிரம் பேர்களுள் 200 பேருக்கு உயர் ரத்த அழுத்தம் இருக்கிறது எனில் அங்கிருந்து நூறு மைல் தள்ளி ஒரு கிராமத்தில் வாழ்வோருள் ஆயிரத்தில் இரண்டு பேருக்கே உயர் ரத்த அழுத்தம் இருக்கிறது! எப்போதும் ஓர் இலக்கை அடைய வேண்டும் என்று பரபரப்புடன், வெறியுடன் செயல்படுவோருக்கும் ரத்த அழுத்த நோய் வரும்.

அருவமான மனம் உருவமான உடலைப் படுத்தும் பாட்டைப் பாருங்கள்! மூளையின் கட்டளைகளைப் பெற்று அதற்கேற்றபடி இயங்கும் Vaso motor centres என்ற நரம்பியல் மையங்கள் உடலில் ஆங்காங்கே அமைந்துள்ளன. உணர்ச்சிவசப்பட்டால், டென்ஷன் அதிகரித்தால் இந்த மையங்கள் பாதிக்கப்பட்டு ரத்த அழுத்தத்துக்கு வழிகோலுகின்றன. மனம் அமைதிப்பட்டாலோ இந்த மையங்கள் அப்படியே 'ரிலாக்ஸ்' ஆகிவிடுகின்றன. ரத்த அழுத்தம் சீராகிறது.

இதனால்தான் ஏற்கெனவே உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்கள் அதிகம்

உணர்ச்சிவசப்படக்கூடாது என்று சொல்வது. இதனால்தான் தியானம் யோகாசனம் போன்வற்றையும் வலியுறுத்துகிறோம்.

## 2 + 2 = 5!

இரண்டும் இரண்டு அஞ்சு என்று சொன்னால் சிரிப்பீர்கள். ஆனால் இது உண்மையாவது எப்போது தெரியுமா...? உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்கள் சிகரட் பிடிக்கும்போதும் மது அருந்தும் போதும். சிகரெட்டில் உள்ள நிகோடின் என்ற நச்சுப் பொருள் ரத்த அழுத்த நோய்க்குத் தரப்படும் மருந்துகளின் வீரியத்தைக் குறைக்கிறது. அதோடு, உடலில் 'synergestic effect' என்று அழைக்கப்படும் பாதிப்பையும் ஏற்படுத்துகிறது. அதாவது முதல் அபாயம் : உயர் ரத்த அழுத்தம் + இரண்டாவது அபாயம் : சிகரெட் புகைத்தலால் உண்டாகும் தீமை = இரு மடங்குக்கும் அதிகமான அபாயம்!

சிகரெட் பிடிக்கும் பி.பி. நோயாளி ஹார்ட் அட்டாக்கை இரு கரம் நீட்டி வரவேற்கிறான். எனவே அவன் சிகரெட்டை நிறுத்துவது மற்ற எல்லாவற்றையும் விட முக்கியம்.

மதுவும் ரத்த அழுத்தத்தை அதிகரிக்கவே செய்யும். குறைந்த அளவில் சாப்பிட்டால் அது ரத்த அழுத்தத்தைக் குறைக்கும் என்பது உண்மைதான். ஆனால் முதல் ரவுண்டில் யார் நிறுத்துவார்கள், சொல்லுங்கள்! மேலும், குறைச்சலாக மது அருந்துவதால் தற்காலிகமாக மட்டுமே ரத்த அழுத்தம் குறையும்.

## நாக்கை அடக்கினால் நிச்சயம் நன்மை!

உணவில் உப்பைக் குறைக்கச் சொல்வதற்குக் காரணம் அதிலுள்ள சோடியம், ரத்த அழுத்தத்தினை அதிகரிக்கவல்ல சக்தி படைத்தது என்பதே. இதற்காக சோடியம் இல்லாத பொடாஷியம் உப்பைத் தயாரித்து விற்க முயன்றார்கள். ஆனால் அதன் சுவை விரும்பி ஏற்கப்படவில்லை. எனவே அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. மசாலா, காரமான உணவுகளைத் தவிர்க்க வேண்டும் என்றும் சொல்வது இவற்றைச் சேர்த்தால் உப்பையும் தூக்கலாகப் போட்டுச் சமைக்க வேண்டும் என்பதால்தான்.

உணவில் கொழுப்பும் கொலஸ்ட்ராலும் இதயத்துக்கு உதவாதவை என்பது உங்களுக்கே தெரியும். இவை சீரான ரத்த ஓட்டத்தையும் பாதிக்கின்றன. தவிர, ஏற்கெனவே உயர் ரத்த அழுத்தம் காரணமாக 'ஓவர் டைம்' செய்து வரும் இதயத்துக்கு இவற்றால் அபாயம் அதிகரிக்கிறது....

## மூப்பது வகை மருந்துகள்!

உடல், மனக் கட்டுபாடுகளுடன் மருந்துகளும் சேரும் போது உயர் ரத்த அழுத்தம் கலபத்தில் கட்டுப்படுகிறது.

இப்போது சுமார் முப்பது மருந்துகள் கிடைக்கின்றன. பிளட் பிரஷர் நோயாளிகளுக்குச் சராசரியாக நாளொன்றுக்கு இரண்டு அல்லது மூன்று ரூபாய்க்குள் விலை அமையும் படி மருந்து கொடுக்க வேண்டியிருக்கிறது.



இந்த மருந்துகள் இரு வகைகளில் ரத்த அழுத்தத்தைக் குறைக்கின்றன.

ஒன்று : ரத்த நாளங்களின் இயக்கத்தைச் சீர் செய்து, அவற்றை 'ரிலாக்ஸ்' செய்ய வைத்துச் சுலபமாக ரத்தம் பாய வழி வகுப்பவை.

மற்றொன்று : இதயத்தின் வழியே பாயும் ரத்தத்தின் மொத்த அளவையே குறைத்து அதன் மூலம் இதயத்தைச் 'சாந்தப்'படுத்தி ரத்த அழுத்தத்தையும் குறைப்பவை.

பொதுவாக நவீன பிரஷர் மருந்துகள் ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவதோடு இதயத்துக்கும் சிறுநீரகத்துக்கும் கூட சிறப்பான பாதுகாப்புத் தருகின்றன. ஏற்கெனவே இந்த உறுப்புகள் பாதிக்கப்பட்டிருப்பின் அந்த பாதிப்பைக் குறைக்கின்றன. சில வகை மருந்துகள் ஆஸ்துமா, டயபடீஸ் உள்ளவர்களுக்கு ஒத்துக் கொள்ளாது. இவர்களுக்கு ஏற்ற மருந்துகளை எழுதித் தருவோம். பிளட் பிரஷரை நார்மலுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற வேகத்தில் எந்த மருந்தையுமே அதிகமாகக் கொடுக்கக் கூடாது. அது ஆபத்து விளைவிக்கும். உயர்ந்துவிட்ட ரத்த அழுத்தம் கட்டுப்பாட்டுக்குள் வந்து நார்மல். எல்லைக்கு அருகே இருந்தாலே போதும்.

## நோயாளியாக்கும் மருந்துகள்!

ஆனால் எந்த மருந்தைச் சாப்பிட்டாலும் பக்க விளைவுகள் இருக்கத்தான் செய்யும். முன்னைக் காட்டிலும் இப்போது மருந்துகள் முன்னேறிவிட்டாலும் பக்க விளைவுகளே அற்ற மருந்து இல்லை.

மருந்து சாப்பிட ஆரம்பித்த பிறகு

தலை சுற்றல், உடல் தளர்ச்சி, மனச் சோர்வு, உடலுறவு பாதிப்பு போன்றவை ஏற்படக் கூடும். படுத்திருப்பவர் எழுந்து நின்றால், திடீரென்று ரத்த அழுத்தம் குறையும்...! வாய் உலர்ந்து போகலாம். சாதாரண செயல்பாடுகள் பாதிக்கப்படலாம். சிரமமின்றி ஒரு மைல் நடந்தவருக்கு மருந்து சாப்பிட்ட பின் அதுவே மிகவும் சிரமமாகத் தெரிய ஆரம்பிக்கலாம்.

இதனால் ஹை பிளட் பிரஷர் உள்ளவன் ஆரோக்கியமனிதனாக டாக்டரிடம் வந்து, நோயாளியாக வெளியேறுகிறான் என்று வேடிக்கையாகச் சொல்வதுண்டு!

எனினும், இவை எல்லாமே மருந்து சாப்பிடும் எல்லோருக்கும் ஏற்பட்டுவிடாது. சிலருக்குச் சில வகை மருந்துகளால் சில பாதிப்புக்கள் ஏற்படும். மேலும், கடந்த சில வருடங்களாக, உயர் ரத்த அழுத்தத்துக்குப் புதுப்புது மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. இவை பக்க விளைவுகள் இல்லாமலும் மிகக் குறைவான பக்க விளைவுகளுடனும் இருக்கின்றன.

மருந்து சாப்பிட ஆரம்பித்தவுடன் பக்க விளைவுகள் ஏற்பட்டால் மருந்தை மாற்றலாம். ஒவ்வொருவருக்கும் பொருத்தமான மருந்துகள் உண்டு.

எக்காரணம் கொண்டும் நினைத்த மாத்திரத்தில் மருந்தைக் குறைக்கவோ நிறுத்தவோ கூடாது. உங்கள் இஷ்டத்துக்கு மருந்து சாப்பிடவும் கூடாது.

சீரான இடைவெளிகளில் டாக்டரிடம் சென்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும். அவர் ரத்த அழுத்தம் குறைவதற்கேற்ப மருந்து அளவையும் குறைப்பார் அல்லது மாற்று மருந்து தருவார்.

மருந்துகளுக்குக் கட்டுப்படும் உயர் ரத்த அழுத்தம் முற்றிலும் நார்மலுக்கு வரவே வராது; அதே போல் கட்டுப்படுத்த முடியாத ரத்த அழுத்தம் இருப்பதும் மிகவும் அரிது.

Silent killer என்று முதலில் குறிப்பிட்டேனல்லவா.... உயர் ரத்த அழுத்தத்





தால் மரணம் சம்பவிக்குமா என்று கேட்பீர்கள். கண்டு பிடிக்கப்படாமல் கட்டுமீறிப் போகும் ரத்த அழுத்தத்தால் முக்கிய உறுப்புக்கள் செயலிழக்க,

மரணம் ஏற்படலாம். தாமதமாகக் கண்டு பிடித்துச் சிகிச்சை தொடங்கினால் அதன் விளைவாக சராசரி ஆயுள் குறையும் வாய்ப்பு உண்டு. பத்து முதல் இருபது வருடங்கள் முன்னதாக மரணம் சம்பவிக்கலாம். குறைந்த வயதிலேயே ஹை பிளட் பிரஷர் வரின், அதனுடன் அதிக காலம் வாழ வேண்டியிருப்பதால் 'ரிஸ்க்' அதிகம்.

இவை ஒரு புறம் இருந்தாலும் பிளட் பிரஷர் தக்க நேரத்தில் கண்டு பிடிக்கப்பட்டு அந்த நபர் டாக்டரின் ஆலோசனைகளை மீறாமலும் இருந்தால் சராசரிக்கும் அதிகமான நாட்கள் கவலையின்றி வாழலாம். எனவேதான் நடுத்தர வயதை அடைந்தவர்கள் அவ்வப்போது B. P. செக் செய்து கொள்ள வேண்டும் என்பது. இதை எவ்வளவு வலியுறுத்தினாலும் போதாது.

## அலட்சியம் வேண்டாம்!

பிளட் பிரஷர் உள்ளவர்கள் டாக்டர் கூறும் யோசனைகளை அலட்சியம் பண்ணாமல் கவனமாகக் கேட்டுக் கொண்டு செயல்படுத்துவது அவசியம். உதாரணமாக, ''பகலுணவுக்குப் பிறகு ஐந்து முதல் பத்து நிமிடம் வரை ரெஸ்ட் எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று டாக்டர் சொன்னால், அதற்குக் காரணம் உண்டு. சாப்பிட்ட உடன் அதனை ஜீரணிக்க உதவும் வகையில் வயிற்றுப் பகுதிக்கு ரத்த ஓட்டம் அதிகரிக்கிறது. தலை, மற்றும் கால் பாகங்களுக்கு ஓரளவு இதனால் ரத்த ஓட்டம் குறையும். எனவேதான் அமைதியாகப் பத்து நிமிடம் அமர்ந்திருக்கச் சொல்கிறோம். இந்த யோசனை, நடுத்தர வயதைக் கடந்த எல்லோருக்குமே நல்லது. படுத்துத் தூங்க வேண்டும்


என்பதில்லை. நாளிதழ் புரட்டியபடி அல்லது மனப்பாடம் ஆன சுலோகம் மனசுக்குள் கூறியபடி உட்கார்ந்திருக்கலாம்.

இன்னொரு யோசனை : உங்கள் உடல்நிலை பற்றிய குறிப்புக்கள் அடங்கிய ஃபைல் தயாரித்துக் கொள்ளுங்கள். அதில் டாக்டரின் மருந்துச் சீட்டிலேயே தேதி குறிப்பிட்டு பிரஷர் எழுதி ஃபைல் பண்ணி விடுங்கள். ஃபைலை டாக்டரிடம் போகும் போது மறக்காமல் எடுத்துச் சென்றால், பிரஷர் எப்படி வேறுபடுகிறது (அல்லது நிலையாக இருக்கிறது); என்ன வீரியத்தில் எந்த மருந்து தந்தோம்; கூட்டலாமா, குறைக்கலாமா என்று கணிக்க டாக்டருக்கு வசதியாக இருக்கும். பிளட் பிரஷர் உள்ளவர்கள் டாக்டரின் ஆலோசனைப்படி குறிப்பிட்ட இடைவெளியில் பிளட் பிரஷர் 'செக்' செய்து கொள்ள வேண்டும்.

எப்படி மருந்தை டாக்டர் குறிப்பிடும் அளவில் மட்டுமே சாப்பிட வேண்டுமோ அவ்வாறே தேகப் பயிற்சியையும் அவர் கூறும் அளவிலேயே நிதானமாகச் செய்ய வேண்டும். அளவுக்கு மீறி உடலை வருத்திக் கொண்டால் வேண்டாத சிக்கல் தோன்றலாம். வாக்கிங் போக ஏற்ற நேரம் அதிகாலை வெறும் வயிற்றில்தான். சிலர் இரவு சாப்பாட்டுக்குப் பிறகு நடப்பார்கள். இது நல்லதல்ல.

## 'லோ' B.P.!

ஹை பிளட் பிரஷர் பற்றி ஆதியோடு அந்தமாகச் சொல்லியாயிற்று. லோ B.P. என்றால்....? குறைவான ரத்த அழுத்தம் ஒரு நோயாகக் கருதப் படுவதில்லை. அது வேறு சில உடல் கோளாறுகளின் விளைவாகவே ஏற்படும். அக் கோளாறு சரி செய்யப் பட்டால் சீராகிவிடும்.



## பெண்களுக்கு....

பெண்களுக்குச் சில விஷயங்களைப் பிரத்யேகமாகச் சொல்ல விரும்புகிறேன். கருத்தடை மாத்திரைகளைத் தொடர்ந்து வருடக்கணக்கில் சாப்பிடாதீர்கள். இவற்றால் உயர் ரத்த அழுத்தம் வரும் வாய்ப்புக்கள் மிக அதிகம்.

பொதுவாக மாதவிடாய் நின்று போன பிறகே பெண்களுக்கு உயர் ரத்த அழுத்தம் உண்டாகும். இந்தச் சமயத்தில் டாக்டரிடம் காட்டிப் பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

கருவுற்ற பெண்களில் சிலர் ரத்த அழுத்தத்தால் அவதிப்பட நேர்வதுண்டு. இதில் இரண்டு வகை :

முதலாவது, ஏற்கெனவே உயர் ரத்த அழுத்தம் உள்ள பெண் கருவுறும்போது ஏற்படும் பிரச்னை.

மற்றது, சிலருக்குக் கருவுற்றதன் விளைவாகவே ஹை பி.பி. வரும். இதற்குக் காரணம் என்ன என்பது இன்றளவும் தெரியவில்லை. இந்தப் பெண்களுக்கு பிளசென்டாவில் ரத்த ஓட்டம் குறையலாம். கருவளர்ச்சி பாதிக்கப்படலாம். Pre Eclamptic Toxaemia என்று அழைக்கப்படும் ஆபத்தான நிலை வரலாம். (ஜன்னி கண்டு விட்டது என்பார்கள் இதை). இத்தகைய ஆபத்தான நிலை வரக்கூடும் என்று எதிர்பார்த்தால் டாக்டர்கள் சிசேரியன் செய்து குறை மாதத்தில் கூட குழந்தையை எடுத்து விடச் சொல்வார்கள். அல்லது ஊசி போட்டு, செயற்கையாக பிரசவ வலி வரவழைப்பார்கள். முழுப் பேறு காலத்துக்கு முன்னதாகவே பிறக்கும் குழந்தை உயிர் பிழைப்பது பல்வேறு விஷயங்களைப் பொறுத்தது.

கருவுற்ற பெண்களுக்குச் சில வகை

B. P. மருந்துகள் கொடுக்க முடியாது. குறைவாக மருந்து கொடுத்தால் போதவும் போதாது. எனவேதான் டாக்டர்கள் நன்கு யோசித்து, தேவையானால் குழந்தையைப் பறி கொடுத்தேனும் தாயைக் காப்பாற்ற முயற்சி செய்வார்கள்.

## வராமல் தடுக்க....

பிளட் பிரஷர் வந்துவிட்டால் சமாளிப்பது எப்படி என்று சொல்லி விட்டேன். வராமல் தடுக்க....?

உயர் ரத்த அழுத்தம் உள்ளவர்களுக்குச் சொன்ன அதே அறிவுரைகள் தான். உணவுக் கட்டுப்பாடு, சுறுசுறுப்பான உடற்பயிற்சி, அமைதியான மனநிலை - இ வ ற் றை வழக்கமாக்கிக் கொள்ளலாம். இவற்றையெல்லாம் மீறியும் ஹை B.P. வர வாய்ப்பு இருக்கிறது. வந்தவுடன் அதை ஜுரம் போலவோ தலைவலி, ஜலதோஷம் போலவோ உணர முடியாது என்பதால் மற்ற எந்த உபாதைகளுக்காக டாக்டரிடம் போகும்போதும் அவரை B.P. செக் பண்ணச் சொல்லிக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் உடல் எடையும் உயரமும் என்ன என்று உங்களுக்குத் தெரிந்திருப்பது போல் உங்கள் B.P. என்ன என்பதும் தெரிந்திருக்கட்டும். கனடா நாட்டு இதய மருத்துவத் துறை ஒரு வாசகத்தை இதற்காக உருவாக்கியிருக்கிறது :

Know your B.P. By Heart! என்பது அந்த வாசகம்.

விழிப்புணர்வுதானே வெற்றிக்கு முதல் படி!

தொகுப்பு : சாருகேசி, சீதா ரவி

அட்டைப்படத்தில் பிளட் பிரஷர் பரிசோதனை செய்பவர் : டாக்டர் வி.டி. பாலசந்தர்

அட்டைப்படம் : யோகா



# இயற்கையின் படைப்பிற்கு வடிவமைத்தது நாங்கள்.

வோல்ஃப்ருட் ஜூஸ் கான்சென்ட்ரேட். இயற்கை பழச்சுவை அளிக்கும் தெவிட்டாத சுவை.

ஏனெனில், தோட்டத்திலிருந்து பறித்த பழங்களைக் கொண்டு அது தயாரிக்கப் படுகிறது.




அத்தனை கதுப்பு பசையுள்ளது. குழம்பானது மற்றும் உண்மையானது—மற்ற கான்சென்ட்ரேட் போல் அல்லாமல்.

**Volfruit**
ஜூஸ் கான்சென்ட்ரேட்

## அபரிமிதமான பழச்சுவை அடங்கியுள்ளது பாட்டிலிலே.

தமிழ் நாட்டிலும், மகாராஷ்டிராவிலும் மட்டும் கிடைக்கும்.

SPEER 92 TM

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

# வளமையும் சாறும் ததும்பிய ½கிலோ தக்காளியை நறுக்குவதற்கு புதிய வழி.






கோத்ரெஜ் டொமாட்டோ ப்யூரி பேக் ஒன்றை சற்றே கத்தரித்து திறந்திடுங்கள். உங்களுக்குக் கிடைக்கிறது. ½ கிலோ புத்தம்புதிய சதைப் பற்றான தக்காளி. வளமைததும்பிய, அடர்த்தியான பழச்சதை உங்களுடைய சமையல் அனைத்திலும் எளிதில் கலந்திடும். ஸாண்ட்விச் அல்லது பிஸ்ஸாவில் தனிச் சிறப்பான சுவையை அனுபவிக்க உபயோகிப்பீர். சூப், சட்னி, பாவ் பாஜியில் அலாதியான ருசியூட்ட சேர்த்திடுங்கள். நாவில் நீர் ஊறச் செய்யும் சாம்பார், டால் ஃப்ரை, குருமா தயாரித்திடுங்கள். இத்தளதள தக்காளியை மட்டன் கிரேவியிலும், பைங்கன் பர்த்தாவிலும், புலாவிலும் கலந்தே சுவை கூட்டுங்கள். ஆகவே அடுத்த முறை ½ கிலோ சாறு ததும்பிய தக்காளித் தேவைப் படும்போது, கத்தரிகோல் கொண்டு சற்றே கத்தரியுங்கள்.





1 பேக் = ½ கிலோ தக்காளி



2 மேசைக் கரண்டி = 1 நடுத்தர சைஸ் தக்காளி

Godrej FOODS

டொமாட்டோ ப்யூரி.

**உங்களுடைய சமையலிலே இன்னும் சுவை சேர்க்கும்.**

Enterprise/GFL/395 Tm